தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1974 ஏப்ரல் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3-30 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Madras Metropolitan Development Plan

*325 Q—THIRU C. R. KOLAPPA (on behalf of **Thiru** M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for **Health** be pleased to state—

(*a*) whether the twenty years scheme of **Madras Metropolitan** Development Plan, 1971-91 has been taken up for implementation;

(*b*) if so, the estimated expenditure of the Scheme;

(*c*) the expenditure incurred up to 31st December 1973: and

(*d*) whether there is Central financial assistance for the Scheme?

சென்னை மாநகர் அபிவிருத்தித் திட்டம்

திரு. சி. ஆர். கோலப்பா (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : **மாண்புமிகு** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகர் அபிவிருத்தி 20 ஆண்டு திட்டம் (Madras Metropolitan Development Plan) 1971-91 செயல்படத் தொடங்கி விட்டதா?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு என்ன?

(உ) 31—12—1973 ஆம் நாள் வரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது?

(எ) இத்திட்டத்திற்கு மத்திய நிதி உதவி ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) செயல்படுத்த வேண்டியதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(இ) 1971-ம் ஆண்டு திட்ட அறிக்கை மதிப்பீட்டின்படி எல்லாத் துறைகளிலும் ரூ. 938 கோடி ஆகலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

(உ) ஆரம்ப பணியாளர்களுக்கும் அவர்கள் சம்பந்தப்பட்ட இதர சில்லரை செலவினங்களுக்கும் 31-12-1973 வரை ரூ. 4,059 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(எ) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இதுவரை மத்திய நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை.

Cholera

* 326 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the total number of deaths, District-wise, in Tamil Nadu due to Cholera in 1973;

(*b*) whether it is a fact that the incidence of Cholera is to some extent high during this year; and

(*c*) if so, the reasons therefor?

காலரா நோய்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், தமிழகத்தில் காலரா நோயினால் இறந்தவர்கள், மாவட்ட வாரியாக, எத்தனை பேர்?

(இ) காலரா நோய் இவ்வாண்டு சிறிது மிகுந்திருக்கிறது என்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, முனிசிபல் நகரங் களில் காலரா நோய் அதிகமாக இருக்கிறதா அல்லது கிராமப்பகுதிகளில் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி தெளிவாகக் காதில் விழவில்லை. மீண்டும் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

@ 132 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி தெளிவாக இல்லை என்கிறார், ஆகவே மறுபடியும் கூறவும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, இந்தக் காலரா நோய் பரவுவது நகரங்களில் அதிகமாக இருக்கிறதா அல்லது கிராமப் புறங்களில் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாதந்தோறும் எந்தெந்த இடங்களில் எவ்வளவு பேருக்கு ஏற்பட்டது, எவ்வளவு பேர் இறக்க நேரிட்டது என்ற விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் நகரப் புறங்களில் அதிகமாகப் பரவியிருக்கிறது, சில இடங்களில் கிராமப் புறங்களில் அதிகமாகப் பரவியிருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால் தரப் பட்டுள்ள விவரங்களைப் பார்த்தால், இந்தக் காலரா நோய் வடஆற்காடு மாவட்டத்தில் அதிகமான பேர்களைப் பாதித்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி போதுமான அளவில் இல்லை என்ற காரணத்தால், அப்படி அதிகமாகப் பரவியிருக்கிறது என்பது உண்மையா ? அதை மனதில் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை அதிகப்படுத்த ஏதாகிலும் அறிவுரை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட ஆண்டில்தான் வடஆற்காடு மாவட்டத்தில், 549 பேருக்கு இந்த நோய் ஏற்பட்டு 79 பேர் இறக்க நேரிட்டது என்ற செய்தி வருகிறதே தவிர மற்றொரு ஆண்டில் பார்க்கின்றபோது 147 பேருக்கு ஏற்பட்டு 25 பேர் இறந்தார்கள் என்று தெரிகிறது. ஆண்டுக்கு ஆண்டு, இடத்திற்கு இடம், நிலைக்கு நிலை மாற்றம் ஏற்படுகிறது. பொதுவாக குடிநீர் மூலம் இது ஏற்படக்கூடும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டு 237 பேர் காலரா நோயால் பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையை மற்ற ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, அதிகமில்லை, குறைவுதான் என்று கூறப்படுவதிலிருந்து, மற்ற ஆண்டுகளில் இதை விட அதிகமாக இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 200, 237 என்று கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம், விகிதாசாரத்தின் அடிப்படையில் பார்க்கின்ற போது 3,500 பேர் பாதிக்கப்பட்டார்கள், 3,000 பேர் பாதிக்கப்பட்டார்கள் என்றால், 8 அல்லது 9 விழுக்காடுதான், பாதிக்கப்பட்டவர்களில் இறந்திட நேரிட்டது என்பது விளங்கும். மருத்துவ வசதி உடனடி கொடுக்கப்பட்ட

காரணத்தால், பெரும்பாலோர் இறந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் திடீரென்று இந்த நோய் பரவி விடுகிறது. அண்மைக் காலத்தில் இது ஒரு குறிப்பிட்ட அளவில் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இந்தக் காலரா நோய் ஏழைகள் வாழ்கின்ற குடிசைப் பகுதிகளில் அதிகமாகப் பரவி வருகிறதா அல்லது வசதி படைத்தவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அதிகமாக இருக்கிறதா என்ற விவரம் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பொதுவாக குடிநீரில் ஏற்படுகின்ற கலப்புப் பொருள்களினால் இந்த நோய் ஏற்பட்டு வருகிறது. சில நேரங்களில் குடிநீர் வரும் இடத்தில் சாக்கடை நீர் கலந்துவிடுகிறது. கிணறுகளில் உள்ள தண்ணீரிலும் கெடுதல் ஏற்பட்டு, அதைப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்படுகிறது. அதே மாதிரி திறந்து வைக்கப்பட்டு, அசுத்தப்பட்ட தின்பண்டங்களை வாங்கித் தின்பதாலும், இந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் பெரும்பாலும் ஏழை மக்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள்தான் அம்மாதிரியான தின்பண்டங்களையும் வாங்கி உண்கின்றார்கள். மேட்டுக்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இது அதிகமாகப் பரவுவதற்கு வாய்ப்பில்லை.

Pilot Project of Assessment of Total Personality of Students

* 321 Q.—THIRU L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any examination of the results of the Pilot Project of assessment of total personality of students in educational institutions has been made; and

(*b*) if so, the details thereof?

மாணவர்களின் முழு அறிவு வளர்ச்சி மதிப்பீடு பற்றிய முன்னோடித் திட்டம்.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்களின் 'முழு அறிவு வளர்ச்சி மதிப்பீடு' பற்றிய முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ).—ஆம். 'மாணவர் முழு வளர்ச்சி மதிப்பீட்டு முன்னோடித் திட்டம்', தமிழ் நாட்டில் சுமார் 250 உயர்நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் தற்பொழுது செயல்பட்டுவருகிறது. இந்தத் திட்டத்தினால் நல்ல பயன் விளைந்துள்ளது.

திரு. எஸ். கணபதி : தலைவரவர்களே, அனைத்துப் பள்ளிகளுக்கும் இது விரிவாக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லாப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாவட்டந் தோறும் 25 பள்ளிகள் என்ற முறையில் இது அமையப்பெற்று வருகிறது. எல்லாப் பள்ளிகளுக்கும் கொண்டு வருவது என்றால் அங்கு நூலக வசதி, விளையாட்டு அரங்க வசதி இவைகள் இருக்கின்றனவா என்று ஆராயப்பட வேண்டும். ஆகவே எல்லாப் பள்ளிகளுக்கும் விரிவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அரசு செயல்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஓராண்டு காலம் செயல்படுத்தப் பட்டு வந்த இந்தத் திட்டம் ஏதேனும் பயன் அளித்திருக்கிறதா, இதில் ஏதாவது குறைபாடுகள் தெரிந்திருக்கிறதா என்று அரசுக்கு விவரம் கிடைத் திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது மூன்று ஆண்டுக் காலமாக சென்னையில் சைதாப்பேட்டையில் உள்ள மாதிரிப் பள்ளியில் பரிட்சார்த்தமாகச் செயல்படுத்தப்பட்டதில் ஓரளவுக்குப் பயன் அளித்துள்ளதாகவே தகவல் கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. மாவட்ட தலைமைக்கல்வி அதிகாரிகளும் இந்த முறை மாணவர்களுடைய நூலகப் படிப்பு வளர்ச்சியைப் பெருக்குவதற்குப் பயன் உள்ளதாக இருக்கிறது என்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். உடற் பயிற்சி, மற்றவற்றிற்கும் 50 எண்கள் என்று கூறப்படுவதன் காரணமாக, இதற்கு வருகை எண் அதிகரித்து வருகிறது என்று கூறப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த 'முழு வளர்ச்சி மதிப் பீட்டுத் திட்டம்' 200 பள்ளிகளில் அமையப்பெற்றிருக்கிறது என்று கூறப் பட்டது. அவைகளில் அரசுப் பள்ளிகள் எவ்வளவு, தனியார் பள்ளிகள் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடம் இப்பொழுது இல்லை. அரசுப் பள்ளிகளும் தனியார் பள்ளிகளும் இதில் அடங்கியிருக்கின்றன என்று கூறிக்கொள்கிறேன்.

* 322 *Q.*—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to undertake a study of valuable bronze idols in temples; and

(*b*) if so, the details thereof?

கடவுளர் சிலைகள்.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கோயில்களில் உள்ள விலை மதிப்பற்ற வெண்கல விக்கிரகங்கள் பற்றி ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தின் கோயில்களிலுள்ள பழம் பொருட்கள், கலைச் செல்வங்கள் மற்றும் செப்புத் திருமேனிகளை கணக்கு எடுக்கும்படி அரசு 1973 அக்டோபரில் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் கோயில்களிலுள்ள செப்புச் சிலைகள் படம் எடுக்கப்பட்டு அவற்றைப் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டு பட்டியல் தயாரிக்கப்படும்.

Graduate Teachers

* 323 *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of graduate teachers working in Government High Schools under rule 10 (*a*) (1);

(*b*) among them the number of teachers who have been working for more than two years;

(*c*) whether any representation has been received from them to regularise their services; and

(*d*) if so, the action taken thereon?

1974 ஏப்ரல் 23]

பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு உயர்நிலைப்பள்ளிகளில் 10 (a) (1) ஆக வேலை பார்த்து வரும் பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் 2 வருடங்களுக்கு மேல் வேலை பார்ப்பவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்களிடமிருந்து வேலையில் நிரந்தரமாக்க வேண்டுமென்று முறையீடு வந்ததுண்டா ?

(எ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 362.

(இ) ஒருவரும் இல்லை.

(உ) & (எ) இப்பதவிகளில் முறையாக நியமனம் பெறுவதற்கு தமிழ்நாடு தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் அப்பதவிகளில் முறையாக நியமனம் செய்யப்படுவர்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 312 ஆசிரியர்கள் 10-ஏ (1)-ல் நியமிக்கப்பட்டு, இரண்டு வருஷத்திற்கு மேல் பணியில் இருப்பவர்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த 10-ஏ (1) என்ற காரணத்திற்காகவே இரண்டு வருஷத்திற்கு மேல் பணி புரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களிடமிருந்து அரசுக்கு ஏதேனும் மனுக்கள் வந்திருக்கின்றனவா? அவர்களுக்கு சர்வீஸ் கமிஷனில் முன்னுரிமை வழங்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமிக்கப்பட்ட 3,000 தற்காலிக ஆசிரியர்களில் 2,320 பேர் தேர்வு ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். மீதியுள்ள சுமார் 700 பேர் தமிழ்நாடு தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், 3—3—1973 அரசு ஆணையின்படி அவர்களுக்குத் தனிச்சலுகை காட்டப்பட்டு அவர்கள் பணியை வரைமுறைப்படுத்த அரசு முன் வந்துள்ளது. அவர்களைப் பொறுத்த வரையில், தேர்வு ஆணைக் குழுவின் ஒப்புதல் பெறப்படும். தேர்வு ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறவேண்டியது அவசியமாக இருக்கிறது.

[1974 ஏப்ரல் 23

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இந்த 10 (ஏ) (1)-ன்படி நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் காயம் செய்யப்படுவதற்கு எத்தனை ஆண்டுகள் அவர்கள் வேலை செய்தாக வேண்டும் என்பதற்கான கொள்கைக் குறிப்பு ஏதாவது உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இவ்வளவு ஆண்டு தற்காலிகமாக வேலை செய்ய வேண்டுமென்ற தன்மைகள் இல்லை. தேர்வு ஆணைக்குழு எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் தேர்ந்தெடுக்கிறதோ அவ்வளவு விரைவில் நடைபெறும். ஆணைக்குழுவை விரைவுபடுத்துகிற முயற்சியில் தான் அரசு இப்போது ஈடுபட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களை ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக தற்காலிக வேலையில் அமர்த்திக்கொள்ள முடியாது. இருந்தும், அரசாங்கப் பள்ளிகளிலே ஆசிரியர்களை பல ஆண்டு காலத்திற்கு தற்காலிகமாக வைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் தேர்வு ஆணைக்குழுவில் தாமதம் ஏற்படுகிறதா, அல்லது அவர்கள் தகுதி இல்லாமல் இருக்கிறார்களா? 26 வயதுக்கு மேற்பட்டால் தேர்வு ஆணைக் குழுவிற்குச் செல்லமுடியாது. அப்படியிருக்கும்போது அவர்கள் தற்காலிகமாக இருந்து விட்ட காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தேர்வு ஆணைக்குழுவினுடைய காலத்தாழ்வு காரணமாக நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே காலதாழ்வு ஏற்படாமல் தடுப்பதற்கு என்ன வழி வகை செய்யலாம் என்பதைப்பற்றி கல்வித் துறையினுடைய செயலாளர் தேர்வு ஆணைக் குழுவிடம் இதுபற்றிப் பேசி விரைவுபடுத்த முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தற்காலிகமாக அந்தந்த ஆண்டு நியமிக்கப்பட்ட பிறகு, கோடை விடுமுறையில் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுகிற காரணமாக அவர்கள் மீண்டும் அதே பள்ளியில் அல்லது வேறு பள்ளியில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது, 3—3—1973 நாளிலிருந்து ஏற்கெனவே தாற்காலிகமாக வேலை செய்தவர்கள் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லவேண்டியதில்லை என்று வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். 'பி' விங்கில் பணியாற்றக்கூடிய 'ஏ' விங் போஸ்டில் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. 'ஏ' விங் பள்ளியில் வேலை செய்யக்கூடிய 'ஏ' விங் போஸ்டில் இருக்கக் கூடியவர்களுக்கு இது அமலாக்கப்படாததன் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 'ஏ' விங்கில் தொடர்ந்து ஒரு விதி முறை இருந்து வருகிறது. அதைத் தான் அவர்கள் கடைப்பிடித்துத் தீரவேண்டும். 'பி' விங்கில் தான் இந்த சங்கடம் ஏற்பட்டது. ஏற்கெனவே 'பி' விங்கில் இருப்பவர்கள் தேர்வு ஆணைக்குழு விற்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அரசாங்கம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 1—4—1970 முதல் அரசாங்கம் பள்ளிகளைப் பின்பற்றி தேர்வு ஆணைக் குழுவிற்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. காலத்தை நீட்டித்ததன் காரணமாக 1—4—1970 முதல் 3—3—1973 வரை அத்தனை பேர்களையும் நாம் எடுத்துக்கொள்வது என்று கொடுத்த வாக்குறுதியின் அடிப் படையில் தேர்வு ஆணைக்குழு எத்தனை பேர்களை தேர்ந்தெடுக்கிறதோ அவ்வளவு பேர்களை அவர்கள், தேர்ந்தெடுக்கட்டும் என்று இருந்தோம். 2,320 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். மீதி 700 பேர்களை நாம் கொடுத்த வாக்குறுதிக்கு இணங்க அரசாங்கம் ஏற்றுக்கொள்ள இசைந்தது. நாம் இசைந்தாலும் இதற்கு தேர்வு ஆணைக்குழு ஒப்புதல் தர வேண்டும். இதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம், 'ஏ' விங்கானாலும் 'பி' விங்கானா லும் ஆணைக்குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

திரு. கே. எஸ். கணபதி: 3-3-1973 அன்று 3,157 பட்டதாரி ஆசிரியர் கள் வரன்முறைப்படுத்தப்படுவதாக உத்திரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தேதிக்கு முன்னதாக அப்ரெண்டிஸ் ஆசிரியர்களாக இருந்தவர்கள் அந்தத் தேதிக்குப் பிறகு ரெகுலர் பி.டி. அசிஸ்டெண்டுகளாக நியமிக்கப்பட் டார்கள். அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை. இதற்கென தனி ஆணை பிறப்பிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

MR. CHAIRMAN: Is the hon. Member Thiru Rajagopal going to ask any question?

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, எம்.ஏ. பட்டம் பெற்று 8 மாத காலம் ஒரு கல்லூரியில் அசிஸ்டெண்டு புரொபசராக வேலை செய்த பிறகு, சர்வீஸ் கமிஷன் இண்டர்வியூக்கு அனுமதி வேண்டுகிறபோது, அவர் 6 மாதம் வேலையில் இருந்தும் கூட அவருடைய சர்வீஸ் கமிஷன் விண்ணப்பத்தை ரிஜெக்ட் செய்து விடுகிறார்கள். நம் ஆட்சியினுடைய அடிப்படைக் குறிக் கோள் கட்டை வண்டி ஓட்டுகிறவர்கள், இப்படிப்பட்ட பிற்பட்ட மக்களுக்கு அனுகூலம் செய்யவேண்டுமென்பது. ஆனால் அந்த லட்சியத்தை மீறி சர்வீஸ் கமிஷன் ½ மார்க் 1 மார்க் குறைவாக இருக்கிறது என்ற காரணத்திற்காக,

[1974 எப்ரல் 23

அவர் எம்.ஏ. பட்டம் பெற்று, 8 மாதம் வேலை செய்த பிறகும், ரிஜெக்ட் செய்து அவரை வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார்களே. தேவை இருக்கிறபோது நாம் அவரை அழைத்து வேலை தருகிறோம். ஆனால் பிறகு ரிஜெக்ட் செய்கிறோம்.

MR. CHAIRMAN : Supplementaries must always be short.

திரு. சி. வி. ராஜகோபால் : இப்படிப்பட்ட முறைகளைத் தளர்த்துவதற்கு வழி வகை பிற்பட்ட மக்களுக்குச் செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரைமுறைகள் சில இருக்கின்றன என்ற காரணத்தினால், வரைமுறைப்படி நடக்கவேண்டிய அவசியம் தேர்வு ஆணைக்குழுவிற்கு ஏற்படுகிறது. ஆணைக்குழு சில பல முறைகளையும், தகுதிகளையும் வைத்திருக்கிறது. அதில் குறைவு ஏற்படுமானால், ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளாது. அப்படித் தளர்த்திக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுமானால், தனிச் சலுகை கொடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து, பிறகு அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது என்பதை தேர்வு ஆணைக்குழுவிற்குத் தெரிவித்தால், அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் சில சமயங்களில், வயது வரம்பைத் தாண்டுகிறபோதும், 1 மார்க் ½ மார்க் அளவிற்குக் குறையும்போதும் தனிச் சலுகை பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் தனியாக அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தைப் பெற்று, அரசாங்கத்தினிடம் தனிச் சலுகை பெற்று தேர்வுக் குழுவிற்குச் செல்ல வேண்டும். தேர்வு ஆணைக்குழு விதித்திருக்கிற முறைப்படி நடக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நீண்ட காலத்திற்கு முன்னால் இந்த சர்வீஸ் கமிஷன் முறை வைக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு யுனிவர்சிடியில் சரியான அடிப்படையில் படித்துப் பட்டம் பெறுகிறார்கள். பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பித்து பயிற்சிக் கல்லூரியில் பட்டம் தரப்படுகிறது. இரண்டு பட்டங்கள் பெற்ற பிறகு, டெக்னிகலி கவாலிஃபைட் என்ற அளவிற்கு இருக்கிறார்கள். இதன் பிறகும், சர்வீஸ் கமிஷன் தேர்வு முறை தேவையா என்று கேட்டு தேவையில்லையென்ற முடிவிற்கு அரசு முடிவெடுக்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன். இது நீண்ட காலத்திற்கு முன்னால் இருக்கிற முறை என்பதால், நல்ல முறையில் கல்வி கற்றவர்கள் மீண்டும் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லவேண்டிய அவசியம் தேவைதானா என்பதை மறு பரிசீலனை செய்து அரசு முடிவெடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஆணைக்குழு இல்லையென்றால் எவ்வளவு இடங்கள் இருக்கிறதோ அவ்வளவு இடங்களுக்குத்தான் நாம் பி.டி. ஆசிரியர்களைத் தயாரிக்க முடியுமே தவிர, வேறு நிலை இருக்க முடியாது. பி.டி. ஆசிரியர்களாக 16 ஆயிரம் பேர்களைத் தயாரித்து விட்டு, 500, 1,000 இடங்களுக்குத்தான் ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்கிறபோது தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எவ்வளவு இடங்கள் காலி இருக்கிறதோ, அப்படிக் காலி ஏற்படுகிற அளவிற்கு இடங்களை ஒதுக்குகிற நிலை ஏற்பட்டால், இந்த ஆணைக்குழு அவசியமில்லை, இங்கேயே தேர்ந்தெடுத்துவிட்டோம், மறுபடி தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியமில்லை என்ற நிலை ஏற்படும். இது கொள்கைப் பிரச்சினையாக இருப்பதன் காரணமாக வேறு சொல்ல முடியாது. பி.டி. படித்தவர்கள் 6 ஆயிரம் பேர்கள் இருக்கக் கூடும். நமக்குத் தேவைப்படுபவர்கள் 600 பேர்கள் அல்லது 700 பேர்கள் இருக்கக்கூடும். இப்படி 600 பேர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இப்படிப்பட்ட ஆணைக்குழுவின் பணிகள் தேவைப்படுகின்றன.

Part-time Lecturers

* 324 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the pay of the part-time Lecturers in Law, in the Law College, Madras, and that of the part-time Lecturers in Mercantile Law in the Arts Colleges in the State, are different; and

(*b*) if so, whether the Government will consider revising the consolidated pay of the latter with that of the former?

பகுதி நேர விரிவுரையாளர்கள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை, சட்டக் கல்லூரியில் சட்டம் (Law) பற்றி போதிக்கும் பகுதி நேர விரிவுரையாளர்களின் சம்பளமும், இம்மாநிலத்திலுள்ள கலைக் கல்லூரிகளில் வணிகச் சட்டம் (Mercantile Law) பற்றி போதிக்கும் பகுதி நேர விரிவுரையாளர்களின் சம்பளமும் வெவ்வேறாக உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கலைக்கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களது மொத்த சம்பளத்தை, சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களது சம்பளத்துக்கு இணையாக திருத்தியமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1960-ம் ஆண்டுக்கு முன்னால் கலைக் கல்லூரியில் பணியாற்றும் விரிவுரையாளர்களுக்கும், பகுதி நேர விரிவுரையாளர்களுக்கும் 150 ரூபாய் ஊதியம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1—6—1960-க்குப் பின்னால் அவர்கள் ஊதியம் உயர்த்தப்பட்டது. பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு 225 ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஆனால் 1970-ம் ஆண்டு ஏற்பட்ட ஊதிய மாற்றத்தில் அவர்கள் ஊதியமானது ரூ. 400–15–475–20–575–25–650 என்று மாற்றியமைக்கப்பட்டது. ஆனால் இவர்களுடைய ஊதியம் அதே 225 ரூபாயில் நின்று விட்டது. இதை மாற்றியமைப்பது பற்றி அரசு பரிசிலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சட்டக் கல்லூரியிலே பகுதி நேர விரிவுரையாளர்களை நியமிக்கின்றபோது சில பல விதி முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விதி முறைகள் கலைக் கல்லூரியில் மெர்கெண்டைல் லா பயிற்சி துறையைப் பொறுத்து வலியுறுத்தப்படவில்லை. ஆனால் சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையிலும் விதி முறைகள் பல வகுக்கப்பட்டிருக்கின்றன.

(1) (*a*) A degree of M.L. of the University of Madras and experience at the Bar for a period of not less than three years; or

(*b*) A first class degree of B.L. of the Madras University and a degree of B.A., or B.Sc. or B.Com. of a University in this State and experience at the Bar for a period of not less than five years; or

(*c*) (i) A second class degree of B.L. of the Madras University;

(ii) A degree of B.A. or B.Sc. with second class in two parts or B.Com. of a University in this State with second class or a degree of M.A., M.Sc., or M.Com. of a University in this State or a degree of B.Sc. or M.Com. of a University in this State obtained under the Old Regulation; and

(iii) Experience at the Bar for a period of not less than five years.

Preference shall be given to those who have secured in addition, high academic distinctions.

1974 ஏப்ரல் 23]

என்று இப்படிப்பட்ட விதி முறைகள் வைத்து சட்டக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவேதான் இந்த ஊதிய விகிதம் தனியாகத் தரப்படுகிறது. இப்படிப்பட்ட விதிகள் கலைக் கல்லூரியில் நியமிக்கப்படுகிறவர்களுக்கு ஏற்படுத்தாததன் காரணமாக இந்த ஊதியத்தில் வேறுபாடு இருக்கிறது. ஆகவே இதிலே இரண்டாவது ஊதியக் குழு பார்த்து நிர்ணயித்திருப்பதன் காரணமாக மாற்றம் செய்யவேண்டிய அவசியமில்லை என்று இந்தத் துறை கருதுகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தக் கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் பகுதி நேர விரிவுரையாளர்களாக இருப்பவர்கள் 'பிராக்டிசிங் லாயர்' ஆக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. அங்கு பணியாற்றும் விரிவுரையாளர்களின் சம்பளம் 'மீனியல்ஸ்' சம்பளத்தைவிட குறைவாக, 225 ரூபாய் என்று இருப்பதால் சிறந்த வழக்குரைஞர்கள் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்பதை மனதில் கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் வேண்டுமானால் தனியாக விண்ணப்பித்து, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கோரலாம். அவர்கள் தனியாக விண்ணப்பித்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுப்பதாக அரசு உத்தரவிட்டு, மீண்டும் அந்த உத்தரவை வாபஸ் பெற்று, குறைந்த சம்பளத்தைக் கொடுத்ததாகவும், அவர்கள் அதிகமாக வாங்கிய சம்பளத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததும் எப்படி நிகழ்ந்ததென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதனுடைய விவரக் குறிப்புகள் தரப்படும். அதில் என்ன நிலை ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல முடியும்.

Remuneration to Teachers

* 327 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that the remuneration of the teachers appointed in various coaching centres to prepare students of Scheduled Castes and Scheduled Tribes for the Tamil Nadu Public Service Commission Examination for Group IV Service examination has not been paid so far; and

(b) if so, the steps taken by the Government to disburse the same?

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தும் தொகுதி IV பணித்தேர்வுக்கு அரிசன மாணவர்களையும், பழங்குடி மாணவர் களையும் ஆயத்தம் செய்வதற்குப் பயிற்சியளிக்கும் பல்வேறு நிலையங்களில் நிய மிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இதுவரை ஊதியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த வகுப்பானது 2-7-1973 அன்று துவங்கப்பட்டு 1-12-1973 அன்று முடிவடைந்தது. ஆனால் அந்த நாட்கள்வரை ஊதியம் வழங்கப்படவில்லை. பின்பு, ஒரு மாதத்திற்குப் பிறகு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், அவர்களுக்கு ஊதியம் கேட்டு நான் சென்ற கூட்டத் தொடரிலே, 21-1-1974 அன்று பிரச்சினையை எழுப்பியபோது மாண்புமிகு அமைச்சரவர்கள், அவர்களுக்குக் கொடுக்காதது தெரியாதென்று கூறினர்கள். அவர்களுக்குச் சம்பளம் இப்போதாவது பட்டுவாடா செய்யப் பட்டுவிட்டதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். ஒழுங்காக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

Iron Ore

* 328 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether soil samples containing iron ore collected near Thiruvannamalai, have been sent to Japan for test; and

(b) if so, the result of the test?

1974 ஏப்ரல் 23]

இரும்புக் கனி படிவங்கள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருவண்ணாமலையருகே இரும்புத்தாதுக்கள் அடங்கிய மண் எடுக்கப்பட்டு பரிசீலனைக்காக ஜப்பான் நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அப்பரிசீலனையின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) திருவண்ணாமலையருகே இரும்புக்கனி படிவங்களை ஆராய்ந்து ஜப்பானிய நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கை தமிழக அரசின் அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டது. ஜப்பானிய நிபுணர்களுடன் இந்த இரும்புக்கனிகளை மேம்படுத்தி செறிவுபடுத்தி உபயோகிக்க பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இந்த இரும்புத் தாதுக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் தொடர்ந்து தமிழ்நாடு கனிவள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, அங்கே போதுமான அளவுக்கு இரும்புக் கனி கிடைக்கின்றதாவென்று அறிய விரும்புகிறேன். அங்கே சிறந்த கனி வளத்தை ஏற்படுத்த முடியுமென்று அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்களாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மொத்தம் கிடைப்பது 14 கோடி டன். அதில் 'எப்.இ. கன்டென்ட்' 37 சதவிகிதம். பெரும்பாலும் சேலத்தை ஒட்டிய இரும்புக் கனியென்ற முறையில் அது நல்ல முறையில் பயன்படுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

Central Electricity Board, Tiruchirappalli

*329 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that more than 1,000 persons entered into the Office of the Central Electricity Board, Tiruchirappalli, during working hours on 9th November 1972 and tried to assault office bearers of the Accountants Association;

(*b*) whether they attacked also the workers of the Electricity Board present there at that time;

(*c*) whether the portraits of Aringnar Anna and Doctor Kalaignar Karunanidhi in that building were broken;

(*d*) whether it is a fact that the telephone and other articles in the Association were damaged;

(*e*) if so, the estimated value of the articles damaged; and

(*f*) the action taken by the Government in this regard?

மத்திய மின்சார வாரியம், திருச்சி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 9—11—1972-ஆம் நாள் திருச்சி மத்திய மின்சார வாரிய அலுவல கத்தில் வேலை நேரத்தில் சுமார் 1,000 பேர்களுக்கு மேற்பட்ட நபர்கள் உள்ளே புகுந்து கணக்காயர் சங்கத்தலைவர்களைத் தாக்க முயற்சித்தார்களா ?

(இ) அவர்கள் அங்கிருந்த மின்சார வாரிய ஊழியர்களையும் தாக்கினார் களா ?

(உ) சங்கக் கட்டிடத்தில் உள்ள அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் கருணாநிதி இவர்களுடைய படங்கள் உடைக்கப்பட்டனவா ?

(எ) சங்கத்திலுள்ள தொலைபேசி மற்றுமுள்ள சாமான்களும் சேதப் படுத்தப்பட்டது உண்மையா ?

(ஐ) ஆமெனில், சேதப்படுத்தப்பட்ட பொருள்களின் மதிப்பீடு சுமார் எவ்வளவு ?

(ஒ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனத்திற்கும், கணக்காயர் சங்கத் திற்கும் மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக சங்கத்திலுள்ள 3,000 ரூபாய் பெருமானமுள்ள பொருள்கள் சேதமுற்றன. இது சம்பந்தமாக போலீசார் ஒரு வழக்கு பதிவு செய்து, அந்த வழக்கு நீதி மன்றத்தில்—'அடிஷனல் பஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட் கோர்ட்'-ல் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு மறு விசாரணைக்கு 27-4-1974 அன்று போடப்பட்டிருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, சம்பவம் நடந்த தினத்தன்று போலீசார் அலுவலக வாசலில் பல மணி நேரம் காத்திருந்தும், உள்ளே கலவரங்கள் நடந்தபோது, உள்ளே இருக்கும் ஆபீசர்கள், கலவரத்தைத் தடுக்க, தக்க நடவடிக்கை எடுக்க போலீசாரை அனுமதிக்க வில்லையென்பதை அரசு அறியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இரண்டு சங்கத்திற்கும் மோதல் ஏற்பட்ட நேரத்தில் போலீசார் வரவழைக்கப்பட்டார்கள். தேவை இருக்குமானால், சொல்வதாக அதிகாரிகள் சொன்னார்கள். அதற்கிடையில் அந்தச் சம்பவம் நடந்து முடிந்துவிட்ட காரணத்தால், முழு விவரமும் தெரிய வேண்டுமென்று போலீசில் புகார் செய்யப்பட்டு, வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த இரண்டு சங்கங்களுக்கும் என்ன காரணத்தால் மோதல் ஏற்பட்டதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. தீர்ப்புக்குப் பிறகுதான் என்ன காரணத்தால் மோதல் ஏற்பட்டதென்பது தெரியும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் விவரங்களைச் சொல்ல இயலாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரு சமாசாரம் நீதி மன்றத்தில் இருக்கும்போது, அதனுடைய விவரங்களைக் கேட்கக்கூடாது.

Government Forests.

*330 Q—THIRU M. SANKARLINGAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that trunks of trees in Government forests were stolen in Kanyakumari District;

(*b*) if so, the value of the same;

(*c*) the year in which the theft took place;

(*d*) whether any complaint was received by Government in this regard; and

(*e*) if so, the action taken thereon?

அரசுக் காடுகள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசுக் காடுகளிலுள்ள தடிகள் களவு போனது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(உ) எந்த வருடம் நடந்தது ?

(எ) இது பற்றி அரசுக்குப் புகார் ஏதும் வந்ததுண்டா ?

(ஐ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) முதல் (ஐ) வரை. மாண்புமிகு தலேவரவர்களே, 1971-73-ம் ஆண்டுகளில் சுமார் 53,000 ரூபாய் மதிப்புள்ள மரத் தடிகள் களவு போயின. இது சம்பந்தமாக இரண்டு வனச் சரகர்கள் தற்காலிகமாக வேலே நீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்கள். போலீஸ் புலனுய்வுத் துறையிலே இது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974.

(2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 20 of 1974) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 15 of 1974).

2. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 (L.A. Bill No. 21 of 1974).

3. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Thiru Amendment) Bill, 1974 (L.A. Bill No. 22 of 1974).

4. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974 (L.A. Bill No. 23 of 1974).

5. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 24 of 1974).

6. The Madurai City Municipal Corporation (Amendment and Extension of term of office) Amendment Bill, 1974 (L.A. Bill No. 25 of 1974).

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the motion as passed by the Assembly on 15th April 1974 desiring to obtain the concurrence of the Council for setting up a Joint Select Committee of both the Houses consisting of 30 Members (20 Members of the Assembly and 10 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 (L.A. Bill No. 19 of 1974) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :

1. Hon. Thiru S. Madhavan—*Minister for Industries.*
2. Thiru S. Sangumuthu Thevar.
3. Thiru Munu Adhi.
4. Thiru Sowdi S. Sundara Bharathi.
5. Thiru Abdul Jabbar.
6. Thiru N. V. Guruswamy.
7. Thiru A. Subramaniam.
8. Thiru K. T. K. Thangamani.
9. Thiru A. K. Subbiah.
10. Thiru E. S. Thyagarajan.
11. Thiru E. K Duraisami.
12. Thiru K. M. Rajagopal.
13. Thiru N. Ganapathi.
14. Thiru K. S. Ramakrishnan.

15. Thiru K. Jayaraman
16. Thiru S. Duraiswamy.
17. Thiru S. Murugaiyan.
18. Thiru A. M. T. Nachiyappan.
19. Thiru K. M. Subramaniam.
20. Thiru M. Subramaniam (Erode).

(3) மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும் அரசின் தீர்மானத்திற்குத் திருத்தங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும், அரசின் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் 1974 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 24 ஆம் நாள் மாலை 5 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. அரசின் தீர்மானம்.

(1) சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்துசமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, "சாதி பிரிவு, உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களையும், பூசாரிகளையும், ஏனைய உள்துறை ஊழியர்களையும் பரம்பரை முறையில் நியமனம் செய்யும் நடைமுறை பற்றி பொதுமக்கள் பரவலாகக் குறைபாடு கூறுதல் இருப்பதாலும்;

இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப் பூசாரிகளை நியமிக்கும் முறை நீக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் பதிலாக சமய சார்புள்ள நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், தேவையான கல்வித் தகுதி உள்ளவர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் பூசாரிக்குரிய பணிகளில் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்றும், சாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி அனைவருக்கும் பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், "தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு" கருத்து தெரிவித்துள்ளதாலும்;

1974 ஏப்ரல் 23] [திரு. மு. கண்ணப்பன்]

உச்ச நீதி மன்றத்தால் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளவாறு, அரசிய லமைப்பில் தற்போதுள்ள விதித் துறைகளின் கீழ், கோயில்களுக்குப் பொருந்துகிற ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளையொட்டி குறிப்பிட்ட பிரிவு அல்லது உட்பிரிவுகளிலிருந்து அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால், சமயக் கோட்பாடுகளில் தலையிடு வதாகுமென்பதாலும் ;

சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறு பாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த அவை கருதுவதாலும்;

மேற்சொன்ன நோக்கத்துக்காக இம்மாநிலச் சட்ட மன்றம் சட்டமியற்ற இயலும் வகையில் அரசியலமைப்பு தக்கவாறு திருத்தப்பட வேண்டுமென்ப தாலும் ;

சட்ட வரைவில் குறிப்பிட்டுள்ளவாறு அரசியலமைப்பைத் தக்கவாறு திருத்துவதற்குத் தேவையான சட்டமொன்றை இயற்றுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதென இம்மன்றம் தீர்மானிக்கிறது". @ என்று முன்மொழி கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சாதி, பிரிவு, உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களையும், பூசாரிகளையும், ஏனைய உள்துறை ஊழி யர்களையும் பரம்பரை முறையில் நியமனம் செய்யும் நடைமுறை பற்றி பொது மக்கள் பரவலாகக் குறைபாடு கூறுதல் இருப்பதாலும் ;

இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப் பூசாரிகளை நியமிக்கும் முறை நீக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் பதிலாக சமய சார்புள்ள நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், தேவையான கல்வித் தகுதி உள்ளவர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் பூசாரிக்குரிய பணிகளில் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்றும், சாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி அனைவருக்கும் பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், "தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு" கருத்து தெரிவித்துள்ள தாலும்";

@ ஆங்கில வாசகம் 132–134 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 23

உச்ச நீதி மன்றத்தால் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளவாறு, அரசிய லமைப்பில் தற்போதுள்ள விதித் துறைகளின் கீழ், கோயில்களுக்குப் பொருந்துகிற ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளையொட்டி குறிப்பிட்ட பிரிவு அல்லது உட்பிரிவுகளிலிருந்து அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால், சமயக் கோட்பாடுகளில் தலையிடு வதாகுமென்பதாலும் ;

சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறு பாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த அவை கருதுவதாலும் ;

மேற்சொன்ன நோக்கத்துக்காக இம்மாநிலச் சட்ட மன்றம் சட்டமியற்ற இயலும் வகையில் அரசியலமைப்பு தக்கவாறு திருத்தப்பட வேண்டுமென்ப தாலும் ;

சட்ட வரைவில் குறிப்பிட்டுள்ளபடி அரசியலமைப்பைத் தக்கவாறு திருத்துவதற்குத் தேவையான சட்டமொன்றை இயற்றுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இம்மன்றம் தீர்மானிக்கிறது ".

* **திரு. எம். ஆறுமுகசாமி** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் முன் மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். பொதுவாக சமயங்கள் எனப்படும் மதங்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு, விஞ்ஞான வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருப்பவை என்று கருதுபவன் நான். எனவே சமய சார்பான இடங்களிலே நுழைந்து அதிலே நியாயம் கேட்கும் நிலை எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால் இன்றைய தினம் அவை சமுதாயத்திலே இருக்கக்கூடிய மக்கள் பகுதியிலே உயர்வு தாழ்வை உண்டாக்கவும், ஏற்கெனவே சமுதாயத்திலே இருக்கக்கூடிய சாதி பேதங்களை நிலைநிறுத்துவதாகவும், அதைத் தொடர்ந்து அனுஷ்டானத்தில் இருக்கும்படியாகச் செய்வதாகவும் இருக்கின்ற நிலைமை இருப்பதாலும், அது மக்களிடையே இருக்கக்கூடிய உள்ள உணர்வின் காரண மாக ஏற்படும் கொந்தளிப்பு, ஒரே சமயத்தைச் சார்ந்த மக்களிடையே மோதல்களை ஏற்படுத்தக்கூடாது என்று கருதுவதனாலும், நான் இந்த சமயம் பற்றிய சீர்திருத்தம் கோரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். இந்தச் சீர்திருத்தம் ஒன்றும் புதிதல்ல. இந்து சமயாச்சாரி யார்களே இந்தச் சீர்திருத்தங்களுக்காகப் போராடியிருக்கிறார்கள். சமயக் குரவர்கள், நாயன்மார்களெல்லாம் நிறையப் பாடியிருக்கிறார்கள். ஆயிரக்

கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஆ உரித்து தின்றுழலும் புலயன் எனினும் ஆண்டவனிடத்திலே வந்து பூசை செய்யலாம் என்று பாடியிருக்கிறார்கள். அந்தப் பாட்டையே நான் சொல்ல முடியும். தேவையான அந்த வரியை மட்டுந்தான் சொல்கிறேன்.

"ஆ உரித்து தின்றுழலும் புலையர் ஏனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே".

என்றெல்லாம் பாடியிருக்கிறார்கள். இதற்கு மேலே, ராமானுஜாச்சாரியார் திருப்பாணாழ்வாரைத் தோளிலே தூக்கிப் போனதாகக்கூட சொல்லப்படுகிறது. எந்த ஜாதியில் ஒருவன் பிறந்திருந்தாலும், அவன் வேதத்தை உணர்ந்திருந்தானானால், அவன்தான் தனக்கு குரு, தலைவன் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உயர் ஜாதியிலே பிறந்து, மதத்திலே பெரிய புரட்சி செய்த ராமானுஜாச்சாரியார் சொல்லியதாக நாம் அறிகின்றோம். ஆகவே இந்த விஷயங்களெல்லாம் நமது இந்து சமயத்திற்குக்கூட புதியது அல்ல. இருப்பினுங்கூட நாட்டிலிருக்கக்கூடிய நிலைமைக்கும், மக்களிடத்திலே இருக்கக்கூடிய உணர்வுக்கும் ஏற்ற வகையில் பிரதிபலிக்கும் நடைமுறை அமைப்புகள் உண்டாவதற்கு அரசியல் அமைப்புச் சட்டம் தடையாக இருப்பதால், அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டியது முற்றிலும் நியாயமானது என்ற அளவில் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று கூறி முடிக்கின்றேன், வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நிறையபேர் பேச இருக்கிறார்கள். கொஞ்சம் ஷார்ட்டாகப் பேசுங்கள்.

* திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அருள்மிகு கண்ணப்பனார் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் எனது கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதே சமயம் பாராட்டவும் செய்கிறேன். நமது நாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகு உலகில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் நாம் எல்லோரும் ஆண்டவனைத் தொழுவதற்கு எவ்விதக் குறுக்கீடும் இல்லாமல் இருப்பதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவரக்கூடிய துர்ப்பாக்கிய நிலையிலே இருக்கின்றோம். இப்படி ஒரு தீர்மானத்திற்கு அவசியம் ஏற்பட்டிருப்பதை நினைக்கிறபோது, உண்மையிலேயே வேதனையாக இருக்கின்றது. ஏனென்றால் ஆண்டவனைப் பொறுத்த மட்டிலே, ஆண்டவன் அனைத்தையும் படைத்தார். ஆனால் அடிமைகளையும், ஜாதிகளையும் மட்டும் படைக்கவில்லை. மனிதன்

மனிதனுக்காக அடிமைகளைப் படைத்துக்கொண்டான். அதே சமயத்திலே நிர்வாக சவுகரியத்திற்காக எப்படி ஒரு நாட்டை பல மாநிலங்களாகவும், ஒரு மாநிலத்தை பல மாவட்டங்களாகவும், ஒரு மாவட்டத்தைப் பல வட்டங்களாகவும் பிரித்திருக்கின்றோமோ, அதேபோல ஜாதிகளை அன்று பிரித்து அனுஷ்டித்தார்கள். நல்ல நோக்கத்தோடு பிரித்துவைத்தார்கள். ஆனால் அது காலப் போக்கில் வேறுவிதமாகி ஜாதிகளுக்குள் உயர்வு தாழ்வு என்று ஆகி, அதை எதிர்க்கின்ற அளவுக்கு வேண்டாத ஒரு நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டியது அவசியந்தானா என்ற கேள்வியை எழுப்பினால், அவசியத்திற்கான காரணங்களும் நிறைய இருக்கின்றன. ஆண்டவனை வழிபடுகின்றபோது, இன்றைக்குக் கூட அர்ச்சகர்களாகவும், பூஜாரிகளாகவும் இன்னின்ன ஜாதியார்கள்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமொன்றுமில்லை. நம்பூதிரிகளிலிருந்து கீழ்மட்டத்தில் இருக்கிற அரிஜனங்கள் வரையில் இன்றைக்கு எல்லாக் கோவில்களிலுமே பூஜாரிகளாக இருக்கின்றார்கள். திருவனந்தபுரத்திலும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் இருக்கிற அர்ச்சகர்கள்—அவர்களை போத்திகள் என்று சொல்வார்கள்—பிரசாதத்தைத் தூக்கித்தான் எறிவது வழக்கம். கையிலே கொடுத்தால் கூட தீண்டல் ஒட்டிக்கொள்ளும் என்ற நம்பிக்கையிலே அப்படிச் செய்கிறார்கள். இன்னும் சிலவிடங்களில் ஐயர்கள், ஐயங்கார்கள், பகடைகள், குவாலர்கள், பட்டர்கள் என்று அர்ச்சகர்கள் இருக்கவே செய்கிறார்கள் என்றாலும் இதற்கு ஒரு வரைமுறை வைத்து, ஆண்டவனை வழிபடுகின்றவர்களுக்கும், ஆண்டவனுக்கும் இடையே இருக்கின்ற தரகுநிலையில் ஜாதிவேறுபாடு வேண்டாம். சரியான முறையில் பாரெல்லாம் பயிற்சி பெறுகின்றார்களோ அவர்களையெல்லாம் அந்தத் தொழிலுக்கு நியமிக்கலாம் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதில் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள், மேல் ஜாதிக்காரர்கள் என்ற வேறுபாடு ஆண்டவனைப் பொறுத்த மட்டிலே இல்லை. இன்னும் சொல்லப்போனால், ஆண்டவனுக்கு நெருங்கிய உடன்பாடும், ஈடுபாடும் கொண்டவர்களெல்லாம் தாழ்த்தப்பட்ட குலத்தவர்கள்தான். நமது அறுபத்துமூன்று நாயன்மார்களிலே, ஏறக்குறைய ஓரிரு உயர் குலத்தவரைத் தவிர, மற்ற அத்தனை பேரும் கீழ்ப்படுத்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவர்கள்தான். அர்ச்சகர் தொழில் கவர்ச்சி இல்லாத தொழிலுங்கூட. இந்தத் தொழிலுக்கு யாரும் அதிகமாக அப்ளிகேஷன் போடுவார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது. ஆகவே இதில் யார் அர்ச்சனை செய்கிறார்கள் என்பதைவிட, அந்த அர்ச்சனையில் சொல்லக்கூடிய மந்திரம் சரியாக உச்சரிக்

1974 ஏப்ரல் 23] [திரு. ஆர். சக்தி மோகன்]

கப்படுகிறதா என்பதுதான் முக்கியம். ஆகவே அருள்மிகு அமைச்சர் அவர்கள் சரியான முறையிலே பயிற்சி அளித்து, நல்ல முறையிலே வார்த்தைகளைச் சொல்ல. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் அமைச்சரையே மந்திரம் சொல்லச் சொல்கிறார்களா ?

திரு. ஆர். சக்தி மோகன்: அர்ச்சகப் பயிற்சி நிலையம் வைத்து, அந்த சொற்களையெல்லாம் நல்லமுறையிலே உச்சரிக்கக்கூடிய அளவுக்கு அர்ச்சர்களையும் தயாரிக்க வேண்டும். எல்லோருக்கும் அர்ச்சகராகும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து, இந்த மந்திரம் ஓதக்கூடிய அளவுக்கு சொற்சுத்தம் கொண்டவர்களை மட்டுமே அர்ச்சகர்களாக்க வேண்டும் என்ற வரையறையை வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஜாதியை எடுத்துவிட்டு அந்த இடத்திலே இன்னொரு ஜாதியை வைத்தாக வேண்டும் என்ற ஒரே நோக்கம் மட்டும் கொண்டிருக்கக்கூடாது என்ற வேண்டுகோளை மட்டும் சொல்லி அமைகின்றேன். வணக்கம்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக இந்த அறநிலையங்களில் அர்ச்சகர்களாக அல்லது பூஜாரிகளாக அல்லது உள்துறை ஊழியர்களாக இருப்பதற்கு என்று என்ன என்ன தகுதிகள் ஆகம நீதிநெறி முறைகளிலே வகுத்து, தொகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அந்த நீதிநெறிமுறைகளைக் கற்றுணர்ந்த எந்த ஜாதியினராக இருந்தாலும், அவர்கள் உயர்வு தாழ்வு பாராமல் அவர்களுடைய தகுதிகளுக்கு ஏற்ப பூஜாரிகளாக, அர்ச்சகர்களாக அல்லது உள்துறை ஊழியர்களாக நியமனம் செய்வதற்கு வகைசெய்கின்ற முறையிலே இந்தத் தீர்மானத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை வரவேற்கும் வகையில் நமது இந்து சமுதாயத்திலுள்ள சில கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னதுபோல, சங்கராச்சாரியார் முதல் ராமானுஜர், மத்துவாச்சாரியார் வரையில், அவர்கள் போன்று பல்வேறு பெரியவர்கள், இங்கே நமது அவையில் வீற்றிருக்கும் அடிகளார் உள்ளிட்டு பல கருத்துக்களைச் சொல்லி

வந்திருக்கின்றார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களும் சொல்லியிருக்கின்றார்கள். திருவிளையாடற் புராணத்திலேகூட ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், அல்லது பிறப்பின் காரணமாக அல்லது வேறு வகையான எந்தக் காரணங்களாலும் உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கக்கூடாது என்று பல விளக்கங்களைக் காணலாம். ஒரு சேரியிலே பதினாறு குட்டிகளை ஈன்ற தாய்ப் பன்றி இறந்துவிட்ட நேரத்திலே அந்தப் பதினாறு பன்றிக் குட்டிகளும் பாலின்றித் தவித்தபோது சிவபெருமானே பன்றி அவதாரம் எடுத்து அக்குட்டிகளுக்குப் பால் தந்தார் என்று திருவிளையாடற் புராணத்திலே காணக்கிடக்கிறது. அதன் தத்துவமே ஏழை எளிய மக்களிடையே பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கக்கூடாது என்ற நோக்கம்தான். அந்த நோக்கத்தோடுதான் அந்தக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் எவ்வளவுதான் மூதறிஞர்கள், பெரியவர்கள், ஜாதி மத பேதம் இல்லையென்று சொல்லியிருந்தாலும், சமுதாயத்தில் அந்த உணர்வுகள் நீக்கப்படவில்லை, போக்கப்படவில்லை என்பதை இந்த அரசு அறிந்து, அது போக்கப்படுவதற்கு சட்டரீதியான முறையில் இப்படிப்பட்டதொரு நிர்மாணத்தைக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணி, இந்த அரசு இதைக் கொண்டுவந்திருக்கின்றது என்பது என் கருத்தாகும். நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களும் நமது சமுதாய சீர்திருத்தத் தந்தையாக இருந்த நமது தந்தை பெரியார் அவர்களும்—மகாத்மா காந்தியடிகள் இந்த நாட்டிலே ஆலயப் பிரவேசத்தைக் கொண்டுவந்தார்கள் என்றாலும்—இங்கே நமது தமிழ் நாட்டிலே ஆலயப் பிரவேசத்திற்கு நாயகனாக இருந்த பெரியார் அவர்களும் அவர் தம் வழியில் வரும் நமது அரசும் பல்லாண்டுகளாக இத்தகைய கருத்துக்களை சமுதாயத்தினிடையிலே சொல்லி வந்திருக்கிறார்கள்.

இத்தகைய கருத்துக்களை புராணவாயிலாகச் சொன்ன பெரியவர்கள்கூட பயந்து பயந்துதான் இத்தகைய கருத்துக்களைச் சொன்னார்கள். நந்தன் சிதம்பரம் சென்ற கதையைச் சொல்லும் போதுகூட சமுதாயத்தில் அவர்கள் பயந்து பயந்துதான் அதைச் சொல்லியிருக்கின்றார்கள். ஏனென்றால் சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும் என்று சிதம்பரம் வந்த நேரத்திலே கோவிலுக்குள்ளே, தில்லையில் திருநடனமாடும் சிவபெருமான் கோலத்தைக் காண வேண்டும் என்று நந்தன் சிதம்பரம் சென்றாலும், கோவிலுக்குள்ளே போக முடியாமல் வருந்தினான், அழுதான். அதற்குப் பிறகாவது, 'நீ உள்ளே வந்து தரிசித்துவிட்டுப்போ' என்று சொல்லும் ஆற்றல் சிவபெருமானுக்குக் கூட இருந்திருக்கவில்லை. 'நந்தி மறைக்கிறதே, நான் என்ன செய்வேன்' என்று கோவிலுக்கு வெளியே நின்றுகொண்டு நந்தன் அழுதபோது, 'மகனே,

நீ உள்ளே வந்து தரிசித்துவிட்டுப் போ' என்று சொல்லுவதற்குப் பதிலாக, நந்தியைத்தான் சற்று விலகியிருக்கச் சொன்னரே தவிர நந்தனை உள்ளே அழைத்தார் என்று அந்தக் கதை சொல்லவில்லை. அந்தக் காலத்திலே சிவ பெருமானுக்குக்கூட அச்சம் இருந்திருக்கின்றதுபோல இருக்கின்றது. நந்தனை உள்ளேவந்து தரிசித்துவிட்டுப்போகச் சொல்லியிருந்தால், இந்து சமுதாயத் தினரால் வேறு ஏதாவது ஒரு நிலைக்கு தாம் ஆளாக்கப்பட்டுவிடுவோமோ என்றுதான், பாதுகாப்பாக நந்தியை நகரும்படி சொன்னரோ என்று அச்சப் பட வேண்டிய நிலை இருக்கின்றது. இன்றைக்கும் சமுதாயத்திலே அப்படிப் பட்ட கருத்துக்களை எடுத்துச்சொல்ல பலருக்கும் அச்சம் இருக்கின்றது. பி.ஏ., பி.எல். படித்துவிட்டால் வழக்கறிஞராக வரலாம். விமானமோட்டும் பயிற்சி பெற்று அதற்கான சான்றுகளைப் பெற்றுவிட்டால், அவர் ஒரு பைலட் டாகப் பணியாற்றலாம். இப்படி வருவதற்கு உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் தகுதியிருக்கின்றது, வாய்ப்பு இருக்கின்றது. யார் வேண்டுமானலும் வழக் குறைஞராக வரலாம், பைலட்டாக வரலாம், அமைச்சராகவும் வந்து விடலாம். ஆனல் இந்து சமுதாயத்திலுள்ள ஒரு கொடுமை, இந்து அறநிலையங் களிலே பூசாரிகளாக, அர்ச்சகர்களாக, உள்துறை ஊழியர்களாக குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரும் வரமுடியாது, வரக் கூடாது என்ற நிலை, மனப்பான்மை இருப்பது மிக்க வருந்தத்தக்கதாகும். இதை 1974-ஆம் ஆண்டிலே உலகிலே நாகரிக உள்ளம் படைத்த யாரும் ஒப்புக் கொள்ள முடியாது என்பதை மிக்க வேதனையோடு சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணியடித்தார்)

ஆகவே இத்தகைய நிலையை மாற்றுவதற்கு, நாம் காண விழையும் முன்னேற் றத்தைக் கொண்டுவருவதற்கு இந்தத் தீர்மானம் வழிசெய்கிறது. அதற்கேற்ற முறையில் அரசியல் சட்டமே திருத்தப்பட்டு இந்தச் சமுதாயத்தில் பிறந்த யாரும் அர்ச்சகர்களாக, பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான தகுதியைப் பெற்றிருக்கின்றார்களோ அவர்களை நியமிக்கலாம் என்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தரும் இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, வரவேற்று என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* Thiru P. YELLAMANDA : Hon. Chairman, I am very gladly accepting the views on the abolition of Archakas of a particular caste. I am wholeheartedly supporting this Resolution.

Before that, I want to give the background of how the caste system is playing a vital role and how the caste system is spoiling the growth, development and prosperity of India.

Gandhiji, the Father of the Nation, believed in a casteless society. Today, the Government of India are functioning in a democratic way, following a democratic process. " Demo " means " people " and " cracy " means " power " and so " democracy " means " people 's power ". But, unfortunately, in India, in the name of democracy, only caste is playing a vital role and today, everywhere, only in the name of caste, we are casting votes. That is dangerous to democracy. Either democracy should survive in India or casteism should survive in India. Both should not go together or both should not go with each other. So, if we believe firmly and seriously in demrocasy, we should forget caste. But, it is very impossible in India, because everywhere—in the Vedas, Agamas and Puranas—we lay belief in the caste system. Somehow or other, we are relying so much on the caste system today that it has become impossible for us to forget the caste system. How long can we prolong like this and how long can we take this? Without social equality, how can we achieve our aim of sovereign democratic socialism? That is a problem before us.

Sir, I would like to say something about Article 17. Article 17 aims at the abolition of untouchability. But the abolition of untouchability is only an eye-wash in the Constitution of India. Unless and until we root out the caste system in India, it will be more or less a ridiculous thing to abolish untouchability. The very word " untouchability " has come from the caste. So, without abolition of caste, it is highly impossible for us to abolish the word " untouchability '. So, I welcome this bold step taken by the Tamil Nadu Government for the abolition of the system of Archakas of a particular caste. Under the Constitution, everybody has got equality of right to appointment. When it is so, why are persons belonging to a particular caste alone being appointed to these posts and why are others denied the opportunities in the religious field? The Hon. the Chief Minister and other leaders have brought forward this measure only to abolish the caste

system and I consider it a wonderful measure. I am wholeheartedly supporting the Resolution and with this I am concluding my speech.

* திரு. எஸ். டி. ஆதித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம், இந்து மதத்தில் நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரையும் இதைப்பற்றி எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது. இந்து மதம் சம்பந்தப்பட்டவரையில், பொதுவாக ஒரு தப்பான அபிப்பிராயம் இருந்து வருகிறது. அந்தத் தப்பு அபிப்பிராயம் எவ்வளவு சீக்கிரம் நீக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்து மதத்திற்கு நன்மை பயக்கும். இந்தத் தப்பு அபிப்பிராயம் என்னவென்றால், நீண்ட காலத்திற்கு முன்பே இந்து மதத்திற்கான இலக்கணம் வகுக்கப்பட்டு, வரையறுக்கப்பட்டு, இனியும் அதிலே வளர்ச்சி இருக்க முடியாது என்ற எண்ணமாகும். அந்த எண்ணம் தவறானதொரு எண்ணமாகும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும். இந்து மதமானது மற்ற மதம் போல் இல்லாமல் ஒருவரால் வகுக்கப்பட்ட மதம் என்று சொல்ல முடியாதபடி ஒரு அநாதிகாலம்தொட்டு இருந்து வரும் மதமாக இருக்கின்றது. இந்து மதத்திற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மனிதன் எந்தக் காலத்தில் நாகரீகம் அடைந்தானோ, மனிதன் எந்தக் காலத்தில் ஐந்தாவது உணர்வோடு ஆறாவது உணர்வை அடைந்தானோ, அன்று முதற்கொண்டு இந்து மதம் இருக்கின்றது என்பதே கருத்து. ஆகவே இந்து மதம் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. வளர்ந்து கொண்டே வருகின்ற மதமானது இன்று சட்டத்தோடு மோதுகின்றபோது நமக்கு ஒரு பெரிய கடமை ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தோடு மோதுகின்றபோது சட்டம் என்ன சொல்கிறது என்றால், பூர்வீகமான சம்பிரதாயம் என்ன என்று ஆராய்ந்து அதையேதான் சொல்கிறது. பல அறிஞர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் எழுதிய உபநிஷதப் பல்கிரினி என்ற புத்தகத்தில் கடைசி இரண்டொரு வாக்கியங்களில் இந்து மதமானது ஆரம்பம் முதற்கொண்டு விஞ்ஞான ரீதியாக, விஞ்ஞானம் போல் வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்து மதத்திற்கு தனி சாஸ்திரம் என்று ஒன்றில்லை. ஆகவே அவைகள் எல்லாம் சயன்ஸ் டெக்ஸ்ட் புக் மாதிரி, விஞ்ஞானத்திற்கு அத்தாரிட்டியாக இருப்பது போல் இருக்கக்கூடியது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். அது மாத்திரமல்ல, காந்தி மகான் 'Hinduism abhors stagnation. Hinduism is a growth of ages. The Sastras are ever growing' என்று கூறியிருக்கிறார்.

சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்

[திரு. எஸ். டி. ஆதித்தன்] [1974 ஏப்ரல் 23

இன்று நடக்கிறது என்னவென்றால், தமிழ் நாட்டில் இந்து மதத்தில் ஆகமங்கள் என்று சொல்லப்பட்ட சில சமஸ்கிருத நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த ஆகமங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரைமுறை செய்கின்றன. அந்தக் காலத்தில் நாம் எந்த விதமான பூஜா விதிகளைக் கையாண்டு வந்திருக்கிறோம் என்பதும் ஆராயத்தக்க விஷயமாகும். உதாரணத்திற்கு பஞ்சராத்திரம் ஆகமம் என்று சொல்லப்படுவது ஒரு சமஸ்கிருத ஆகமம். அந்த பஞ்சராத்திர ஆகமத்திலே பல பிரிவுகள் இருக்கின்றன. அதிலே வைசமானசம் என்ற ஒரு முறை இருக்கிறது. சுப்பிரமணியசுவாமி கோவிலில் குமார தந்திரம் என்ற ஒரு ஆகமம் பின்பற்றப்பட்டு வருகிறது. அந்த ஆகமங்களை சமஸ்கிருதத்தில் எழுதியவர்கள் அத்திரி முனிவர், விருகு முனிவர் என்று சொல்லப்பட்டவர்கள். தமிழ் நாட்டில் கூட அந்தக் காலத்தில் அந்த முனிவர்களுக்கு மதிப்பு இருந்திருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பின்னால் வந்த காந்தி மகானுக்கு மதிப்பு இங்கே போய விட்டது. இந்து மதத்தில் பலவிதமான பழக்கம் இருந்து வந்தது. ஆயினும் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற முறையில் தான் நடைபெற்று வந்தது. பழையனவற்றை எந்த வழியில் கழித்து வந்தார்கள்? அவை கலியுகத்திற்குப் பொருந்தாது என்று அவற்றைக் கழித்து வந்தார்கள். அதற்கு ஒரு அர்த்தம் கற்பித்து கழித்து வருவதும் வழக்கம். அதே பிரகாரம் புதியனவற்றை எப்படிப் புகுத்துவது என்று பார்த்தால், புதிய முனிவர்கள் தோன்றி அரசரவையில் சென்று புதிய புராணம், புதிய இதிகாசம், தர்ம சாஸ்திரம் என்று சொல்லி அரசனை ஒத்துக்கொள்ளச் செய்து, அவற்றைப் புகுத்தி வந்தார்கள். இந்து மதம் தன்னைத்தானே சீர்திருத்திக்கொள்ளும் நிலைமை நின்று, இன்று எந்த விதமான மாற்றமும் இல்லாமல், ஆலயங்களில் வழிபடுகின்ற முறை இருக்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு ஏற்பட்டு விட்டது. இந்து மதம் இப்பொழுது நடைமுறையில் முற்போக்கு அடைந்து கொண்டிருக்கிறது. அந்த முறையில்தான் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

இந்து என்ற முறையில், இந்து மதத்தில் நம்பிக்கை உடையவன் என்ற முறையில், தெய்வம் உண்டு என்ற நம்பிக்கை உடையவன் என்ற முறையில், உருவ வழிபாட்டில் நம்பிக்கை உடையவன் என்ற முறையில், நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானம் மன மகிழ்ச்சியை உண்டாக்கக்கூடியது. ஒவ்வொரு இந்துவும் இதை முழு மனதோடு ஆதரிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1974 ஏப்ரல் 23]

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாடு திருக்கோவில்களில் அர்ச்சகர்களாக எல்லா வகுப்பையும் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று வகை செய்த நம்முடைய முன்னைய சட்டம் உயர்நீதி மன்றத்தால் தோற்கடிக்கப்பட்டதாலே, அதை அரசியல் சட்டத்தில் சட்டத் திருத்தமாகச் செய்ய நடுவண் அரசைக் கேட்டுக்கொண்டு, இன்று கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். வரவேற்கின்றபோது சில வரலாற்றுப் பின்னணிகளை, நியாய உணர்வுகளை நம்முடைய அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய உறுப்பினர் அருமை நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் குறிப்பிட்டது போலவும், உறுப்பினர் அருமை நண்பர் திரு. ராமநாதன் அவர்கள் குறிப்பிட்டது போலவும், தமிழக வரலாற்றில், குறிப்பாக இந்து சமய வரலாற்றில் ஜாதி முறைகள், வேற்றுமைகள் இவைகளைத் தொடர்ந்து கடிந்து கொண்டு வந்திருக்கின்ற ஞானிகள் பலர் இருந்திருக்கிறார்கள். ராமானுஜர், தம்முடைய ஆசிரியரையே மறுத்துப் பேசினார். அவருடைய ஞானாசிரியர், "இந்த மந்திரத்தை நீ தான் ஜபிக்க வேண்டும், மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் நீ நரகத்திற்குப் போய் விடுவாய்" என்று சொன்னார். ஆனால் ஆசிரியரை மீறி ராமானுஜர் இன்னார், இனியார் பாராமல், குலம் கோத்திரம் பாராமல், மதில் சுவரின் மீது ஏறிக்கொண்டு அந்த மந்திரத்தை எல்லோருக்கும் உபதேசித்தார். அதிலே கோபமடைந்த ஆசிரியர் அவரைக் கூப்பிட்டுக் கேட்டபோது, கோடிக்கணக்கான பேர் அதன் மூலம் இன்பம் பெறுவார்களானால், நான் ஒருவன் நரகம் போகத் தயார் என்று ராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள, திருக்கோஷ்டியூர் என்ற ஊரில் அந்தப் புரட்சியைச் செய்தார். ஆகையினாலே தொடர்ந்து அந்த முறை எதிர்க்கப்பட்டு வந்திருக்கிறது என்பது விளங்குகிறது. சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணத்தில் சிவகோசாரியார் என்ற பரம்பரைப் பூசாரி செய்த பூசைக்கும் கண்ணப்பர் என்ற வேடர் செய்த பூசைக்கும் மோதல் என்ற நிலைமை ஏற்பட்டு, எந்தப் பூசை உயர்ந்தது என்ற கேள்வி எழுந்தபோது முடிவை யாரும் செய்யாமல், சிவபெருமான் வாயாலேயே கண்ணப்பர் செய்த பூசை உயர்ந்தது என்று சொன்னது சமய வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம். இதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். காரியங்களை மாற்ற முற்படுகின்றபோது ஏற்படுகின்ற தவறுகள் காரணங்களை மாற்ற முற்படுகின்றபோதும் ஏற்படும். அப்பொழுது காரணத்தையும் மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். உறுப்பி

னர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சமயம் தூங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு தேக்க நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் சமயம் ஒரு இயக்கமாக இல்லாமல் அது ஒரு நிறுவனமாக, ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால் 'இன்ஸ்டிடியூஷனாக' இருந்துவிட்டது. அதற்கு சில நலன்கள் சேர்ந்து விட்டன. அந்த நலன்களைக் கொத்தி அனுபவிக்கின்றவர்கள் அவற்றை மாற்றுவதை விரும்புவதில்லை. இந்தத் தேக்கத்திற்குக் காரணமாக இருக்கின்ற அடிப்படையை மாற்றினால், அதற்கு ஒரு இயக்க வடிவத்தைக் கொடுத்தால், பழைய மரபிலேயே புதுப்பித்தால், அவற்றை மாற்றலாம். பொதுவாகவே நம்முடைய திருக்கோவில்களில் தாகர் முறை ஏற்பட்ட பிறகு, பக்தி குறைந்திருக்கிறது. சமயத் துறையிலும் வணிக மனப்பான்மை வளர்ந்து விட்டது. பழங்காலத்தில் நம்முடைய நாட்டுத் திருக்கோவில்களில் எல்லோரும் கருவரைக்குப் போய் இறைவனைத் தொட்டு, பூக்கள் போட்டு வழிபடுகின்ற உரிமை இருந்திருக்கிறது. இந்த நாட்டில் அந்த முறை இருந்திருக்கிறது. அது இங்கு இப்பொழுது இல்லாவிட்டாலும் வடபுலத்தில் காசி, ஆந்திரா மாநிலங்களில் இருந்து வருகிறது. நாம் பூசாரிகள் என்று சொல்கின்றபோது, இரண்டு வகையினரை நினைவில் கொள்ளவேண்டும். ஒருவர் திருக்கோவிலில் மூர்த்தியைக் கடவுளாக ஆவாஹனம் செய்கின்றவர். அப்படி ஆவாஹனம் செய்கின்றவர்களுக்கு நல்ல மனோ சக்தி இல்லாவிட்டால் அதைச் செய்ய முடியாது. நண்பர் திரு. சக்தி மோகன் அவர்கள் மந்திரங்களை உச்சரிப்பது பற்றிச் சொன்னார்கள். ஒலியைப் பற்றிக்கூட ஞானிகள் கவலைப்படவில்லை. மந்திரங்களைச் சொல்கின்றபோது வருகின்ற உணர்வு, பாவனைகள்தான் முக்கியமானவை. நாம் அந்த மந்திரங்களை எந்த மொழியில் சொல்கிறோம் என்பதில்லை.

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம்
சாத்தியே, சுற்றி வந்து மொண, மொணவென்று
சொல்லும் மந்திரம் ஏதடா . . .'

என்று சொல்வார்கள். ஆகவே நட்ட கல்லும் தெய்வமாகும் என்பதில் . . . நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பாட்டை லாவகமாகப் பயன்படுத்தி வேறு ஒரு கருத்துக்கு வர விரும்புகிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

'நட்ட கல்லைத் தெய்வமென்று
நாலு புட்பம் சாத்தியே சுற்றி வந்து
மொண, மொணவென்று சொல்லும் மந்திரம்
ஏதடா நட்ட கல்லும் பேசுமோ, நாதன்
உள்ளிருக்கையில், சுட்ட சட்டி, சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ'

நான் முழுப்பாட்டையும் சொன்னேன். அவ்வளவுதான்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : எனக்கு முழுப்பாட்டும் நினைவுக்கு வராமலில்லை. நான் எட்டு பக்கங்களுக்குக் குறிப்புகள் தயாரித்து வைத்திருக்கிறேன். நான் பத்து மணித் துளிகளுக்குள் பேசி முடிக்க வேண்டியிருப்பதால், சுருக்கமாகச் சொன்னேன். காலத்தின் அருமை தெரிந்து முழுப்பாட்டையும் சொல்லவில்லை. பாட்டைப் பாடிக் காட்டியதற்கு நன்றி.

அதிலே முக்கியமான, நினைவுக்குரிய கருத்து 'நாதன் உள்ளிருக்கையில்' என்பதைப் பொருத்ததுதான். நாதனின் உள்ளத்தில் இருக்கின்றவனை கல்லில் கொண்டு வருகின்ற ஆற்றல், மனோ சக்தி, பாவனை சக்தி அந்த அர்ச்சகருக்கு இருக்க வேண்டும். அது தான் முக்கியம். ஒலிக்கப்படுகின்ற மந்திரங்கள் எந்த மொழியில் இருக்கின்றன என்பது முக்கியம் அல்ல. அது ஒரு துணைக் கருவிதான். ஆனால் நாள்தோறும் மூர்த்திக்கு சாந்நித்தியம் உண்டாக்கி இறைவனை அந்த மூர்த்தியிலே எழுந்தருளப் பண்ணுகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அர்ச்சகர்கள்தான் இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் மற்றவர்கள் வந்து வழிபடுவதற்கு இந்த மூர்த்தியை ஆயத்தம் செய்து வைத்திருப்பவர்கள் என்று பொருள். காலப் போக்கில் அவர்கள் ஆயத்தம் செய்துவைத்த பிறகு, மற்றவர்கள் வந்து பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்து போய்க்கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் காலப் போக்கில், தூய்மையின் பேராலோ, வேறு காரணங்களாலோ, தொழில் ரீதியாக மாற்ற வேண்டுமென்ற உணர்வினாலோ மற்றவர்கள் உள்ளே வந்து தொடக்கூடாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் நம் திருமறைகளைப் பார்த்தால், அந்த உரிமை நமக்கு உண்டு என்று வழங்கியிருக்கிறது. ஐயாற்றுத் தேவாரத்தில் அப்பரடிகள் சொல்கிறார்கள் ; நீண்ட நெடிய வரிசையில் மக்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள், திருக்கோயில் முன்னாலே, தோளில் தண்ணீர்குடம் இருக்கிறது, கையிலே பூக்குடலை இருக்கிறதென்று சொல்கிறார்கள். 'பூவோடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார், அவர் பின் புகுவேன்' என்கிறார்கள், திருக்

சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1974 ஏப்ரல் 23

கோயில்களுக்குள்ளே முன்னே புகக் கூடாது, பின்னாலே வந்தவர்கள் பின்னாலே தான் போக வேண்டும். ஆக, பூவும், நீரும் சுமந்து போயிருக்கிறார்கள். அப்படி ஒரு காலத்தில் தமிழகத்திலே கோயில்களில் தரகர் முறை இல்லாமல் வழிபாடு செய்துகொள்ள முடிந்தது. ஆகவே பூவும், நீரும் எடுத்துக்கொண்டு போய் வழிபடுகிற உரிமை இருந்திருக்கிறது. இன்றைக்கும் வட புலத்தில் இந்த நிலை இருக்கிறது. ஆனால் என்ன காரணத்தாலோ தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் இந்த முறை புறக்கணிக்கப்பட்டு விட்டது. பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்துகொள்வது வழி வழியாக தமிழகத்தில் இருந்த மரபு. இதை நம்முடைய நாயன்மார்கள் ஏற்றுப் பின்பற்றியிருக்கிறார்கள். இந்த முறையை உடனடியாக ஏற்றுக்கொள்வதன் மூலம் ஜாதி வேற்றுமைகளையும் மாற்றிவிடலாம். தரகர் முறை என்பதைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் அருமையாகச் சொல்வார்கள். நான் கடவுளோடு பேசுவதற்கு இடையில் ஒரு தரகனா?" என்று அவர் சொன்ன பாஷையில் சொல்ல வேண்டுமானால், அவர் வழக்கமாக நகைச் சுவையோடு சொல்கிற மாதிரி, காதலன் காதலியுடன் காதலிக்குத் தெரியாத ஒரு மொழியில் தூது அனுப்பியது போல இருக்கிறது, இறைவனிடத்தில் தரகனை வைப்பது என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே நம்முடைய திருக்கோயில்களில் தரகர் முறை தேவையில்லாத ஒன்று. ஒருவர் மூலம் ஒருவர் இறைவனை அர்ச்சிப்பது என்பது சரியல்ல. என்னதான் ஆசிரியர் சொல்லிக்கொடுத்தாலும், மாணாக்கன் எழுதினாலொழிய, மாணாக்கனுக்கு அறிவு வரப் போவதில்லை. எனவே ஒருவன் தான் வழிபாடு செய்து, தான் அதை அனுபவித்து, தான் அந்த முறையில் ஈடுபடுவதன் மூலம் தான் அவனுக்குக் கூட ஞானம் ஏற்பட முடியும், பக்தி ஏற்பட முடியும். ஆகவே உடனடியாக நம்முடைய அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்புவதோடு, நம்முடைய ஆலய நுழைவுச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய முடியுமென்று நான் நினைக்கிறேன். இதிலே பெரும்பாலும் அரசியல் சட்டத்தில் சுருக்கமாகத் தான் போட்டிருக்கிறார்கள். இன்ன இடத்திற்குப் போகலாம், போகக் கூடாது என்றெல்லாம் அரசியல் சட்டத்தில் விதிகள் கிடையாது. அரசியல் சட்டம் 21-வது விதியைப் பார்த்தால், ஜாதி முறைகளை மாற்றுவதற்கு கோயில்கள் திறந்து விடப்படுகின்றன என்று தான் இருக்கிறது. மகா மண்டபமா, அர்த்த மண்டபமா, கர்ப்பக் கிரஹமா என்ற வித்தியாசங்கள் அரசியல் சட்டத்தில் இல்லை. ஆனால் நாம் ஆலய நுழைவுச் சட்டத்தை செய்தபோது (தமிழ் நாடு அரசு செய்தபோது) கோயில்களைப்

1974 ஏப்ரல் 23] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

பற்றி எடுத்துக்கொள்ளாமல், திருக்குளத்தில் குளிக்கலாம் என்று மட்டும் உரிமை வழங்கியிருக்கிறது. திருக்குளத்தில் குளிக்கலாம் என்று மட்டும் உரிமை வழங்கிவிட்டு, கோயிலுக்குள்ளே சென்று, பூவும் நீரும் இட்டு வழங்குகின்ற முறை வழங்கப்படவில்லை. ஆலய நுழைவுச் சட்டத்தில் இந்தப் புது விதியைச் சேர்த்து அதன் மூலமாக நம் நாட்டு மக்களுக்கு ஆலயத்தைத் திறந்துவிட்டு, குறிப்பிட்ட காலத்தில் அர்ச்சகர்கள் பூஜிப்பார்கள், மற்ற குறிப்பிட்ட நேரங்களில் நாம் கோயிலுக்கு உள்ளே சென்று எல்லோரும் பக்திச் சிரத்தையாக பூவும், நீரும் இட்டு வழிபடலாம் என்ற உரிமையைச் செய்தால், ஒரே கல்லில் இரண்டு மாங்காயை விழ்த்தியதைப் போன்றதாகும். ஜாதி முறைகளை மாற்ற முடிகிறது, திருக்கோயில்களில் தொழில் வணிக மனப் போக்கையும் மாற்ற முடிகிறது, இடைத் தரகர் முறையையும் மாற்ற முடிகிறது. இது ஒரு சமூகத்தில் ஆண்டாண்டு காலமாகக் கோரிப் பெற்ற உரிமைகள். 1966-ஆம் ஆண்டில் தமிழ் நாடு அருள் நெறித்திருக் கூட்டம் இந்தக் கோரிக்கையைக் கேட்டு அரசுக்குத் தீர்மானம் அனுப்பியிருக்கிறது. 1967-ல் திருப்பத்தூர் வமிழ்ச் சங்கப் பேரவை இதே தீர்மானத்தைப் போட்டிருக்கிறது. தலைவர் பெரியார் அவர்கள் கூட தொடக்கத்தில் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். நான் கோயிலுக்குள்ளே பூவும், நீரும் இடுவேன், கும்பிடுவேன் என்ற போராட்டத்தைத் தொடங்கினார்கள். நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு நினைவு இருக்குமென்று நினைக்கிறேன். நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன், பெரியார் அவர்கள் கோயிலுக் குள்ளே வருவார்களானால், அதை வரவேற்பு விழாவாக நிகழ்த்த விரும்பு கிறேன் என்று நான் குறிப்பிட்டேன். இந்த நிலைமையிலாவது, பூவும், நீரும் இடுகிற உரிமையின் பேரிலாவது அவர்கள் வருவார்கள், மகிழ்வோடு வரவேற்க நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன். ஆனால் இடையில் சில பக்தர்கள், வேறு சில பேர்கள் வெவ்வேறு விதமான ஆட்சேபணைகள் சொல்லி அரசு இந்தச் சட்டத்தைச் செய்தது. சட்டம் ஒரு புறம் இருக்கட்டும். சட்டத்திற்குப் பிறகு நமக்கு ஏற்பட்டிருக்கிற பெரிய சிக்கல் என்னவென்றால், சிலர் திருவாபரணங்கள் சாத்தப்பட்டிருக்கிறதே, அதற்கு என்ன பாதுகாப்பு என்று கேட்டார்கள் என்பது. தெளிவாகச் சொன்னால், இந்த உலகத்து மக்கள் கடவுளின் குழந்தைகள் ஆவார்கள். அவர்களைத் திருடர்கள் என்று வைத்துக்கொண்டு, இறைவன் திருவாபரணம் வைத்துக் கொண்டிருப்பது என்பதே ஒழுக்க ரீதியாக, கேள்விக்குரியதாக இருக்க முடியும். இது ஒரு புறம் ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் உரியது. நாம் அதை உடனடியாக மாற்ற முடியாது போனாலும், நான் ஒன்றினைச் சொல்ல ஆசைப்படுகிறேன்

திருவாபரணங்கள் இல்லாத சில குறிப்பிட்ட நேரங்களிலாவது அனுமதிப்பது தான் ஜாதி வேற்றுமைகள் மறைவதற்கு நிரந்தரமான விமோசனம். பொதுவாக மனிதனுக்கு இருக்கிற சுபாவம் ஒருவரை இன்றைக்குப் புதிதாக அர்ச்சகராக நியமித்தால் கூட, அவர் கொஞ்ச நாள் கழித்து அதற்கு ஒரு பெரிய உயர்வுத் தன்மை இருப்பதாகக் கருதுவார். நிர்ந்தரமாக பக்தர்கள் திருக்கோயிலுக்குள்ளே சென்று வழிபடுகிற உரிமைகளைப் பெறுகிறவாறு நம்முடைய அரசியல் சட்டத்தைத் திருத்துவது மட்டுமல்ல, ஆலய நுழைவுச் சட்டத்தில் புதிய விதிகளைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தில் இரண்டொரு சந்தேகங்கள். ஜாதி, இனம், வகுப்பு என்று போட்டிருக்கிறார்கள். இனத்தையும் சேர்ப்பது என்பது அரசின் நோக்கமா என்பது புரியவில்லை. தமிழ் நாட்டிலே தமிழினத்தைச் சேர்ந்தவர்கள், தமிழினத்தில் சேர்ந்து தமிழில் தேவாரம், திருவாசகம் பாடி, தமிழ் அர்ச்சனை இயக்கத்தினை வற்புறுத்துகிறவர்கள், இனத்தையும் இதிலே சேர்த்திருக்கிறார்கள். ஆங்கிலத்திலே 'ரேஸ்' என்றும் தமிழில் 'இனம்' என்றும் இருக்கிறது. இதை அரசு யோசிக்க வேண்டும். இரண்டாவது உயர்நீதி மன்றத்தில்கூட, நம்முடைய. . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இனம் என்றால் எந்த நிலைமையில் சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். இனம் என்றால், தமிழினம் என்றால் மத அடிப்படையிலா அல்லது வேறு எந்த அடிப்படையிலா என்று அறிய விரும்புகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : இதற்கு அரசுத் தரப்பில் விளக்கம் தெரிந்தால்தான், நான் தெரிவிக்கலாம்.

அடுத்து, உயர்நீதி மன்றத்தில் கூட நாம் வழக்கை நிகழ்த்துகிறபோது சமூகச் சீர்திருத்தம் என்று சொல்லியிருக்கிறோம். சமூகச் சீர்திருத்தத்திற்காக சமய தத்துவங்களைச் சீர்திருத்த முடியுமாவென்பது நிரந்தரமான கேள்விக்குறியாக இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன். ஆதலாலே சமூகச் சீர்திருத்தம் என்பதற்குப் பதிலாகவும், சமயச் சீர்திருத்தம் என்பதற்குப் பதிலாகவும் தமிழ் நாட்டில் ஏற்கெனவே இந்த மாதிரி உரிமைகள் இருந்தன, அந்த அடிப்படை உரிமைகளைத் திரும்ப மக்கள் பெறுகிறவாறு என்று சொன்னால் தான், நியாயமானது என்று நான் கருதுகிறேன். எனவே

1974 ஏப்ரல் 23] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

சமூகச் சீர்திருத்தம் என்ற வார்த்தையைப் போடாமல், சமய வழி பட்ட மக்களுக்குப் பூரண உரிமைகள் இருக்க வேண்டுமென்று சொல்ல ஆசைப்படு கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டம் வருவதற்கு முன்பாகவே ஒன்றைச் செய்ய வேண்டும். அர்ச்சகர்களைப் பயிற்றுவிப்பது என்பது அவ்வளவு எளிய காரிய மல்ல. உள்ளக் கிழியில் உருவெழுதிப் புறத்தே கொணர் வேண்டும். அர்ச்சகருக்குச் சிறந்த சீலமும், நோன்பும் தேவை. நல்ல பயிற்சி தேவை. நம் நாட்டில் சில மரபுகள் இருக்கின்றன. காலையில் குளித்தல், 3 வேளை குளித்தல், புலால் உண்ணுமல் இருத்தல் போன்ற பழக்க வழக்கங்கள் உண்டு. சில பூஜாரிகள், தமிழகக் கோயில்களில் புகை போன்றவைகளை கோயில் முகப்பிலே கூட பிடித்துவிட்டு வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்த வேண்டும். அதனாலே நல்ல திட்டமிட்டு, குறிப்பாக, சமயத் தலைவர்களிடம் அதிலும் குறிப்பாக பேரவையினிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து, நல்ல முறையில் பயிற்சி கொடுப்பது அவசிய மானது. நாம் சீர்திருத்தம் செய்யப் போய் ஏற்கெனவே இருந்த சில மரபுகள் கெட்டுப் போய்விட்டன என்ற கெட்ட பெயர் வராமல் நம்முடைய அரசு நல்ல பெயர் பெறும்படியாக இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டு மென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற சீர்திருத்தங்களைச் செய்கிறபோது, எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. சட்டச் சீர்திருத்தம் பண்ணுவதாலேயே சமுதாய மாற்றம் ஏற்பட்டு விடுமா என்பதை ஆலோசிக்க வேண்டும். அரசியல் சட்டத்தில் தீண்டாமையை நாம் ஒழித்து பல ஆண்டுகள் ஆயிற்று. இன்னமும் தீண்டாமை முற்றுகப் போனபாடில்லை. ஆக தீண்டாமை இன்னமும் போகாமல் நாம் போராடிக்கொண்டிருக்கிற காலத்தில், இந்த மாதிரி ஜாதி முறைகளை மாற்ற வேண்டுமென்று சொன்னல், இந்தக் குருக்கள்கள், சமயத் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிந்து அவர்கள் மூலமாகவே இந்தத் தீர்மானங்களை வாங்கிப் போட்டால், நல்லதாக இருக்குமோ என்று நான் கருதுகிறேன். நம்முடைய தமிழ் அர்ச்சனை வழக்கு உயர்நீதி மன்றத்தில் நடந்தபோது, அரசுத் துறையினர் பல்வேறு மடங்களின் தலைவர்களிடமிருந்து 'அஃபிடவிட்' வாங்கித் தரும்படி கேட்டுக்கொண்டார்கள். எல்லா மடங்களிலிருந்தும் 'அஃபிடவிட்' வாங்கிக் கொடுத்தோம். வழக்கு வெற்றி பெற்றது. ஆனல் இந்த வழக்கு உச்ச நீதி மன்றத்தில் நடக்கிறபோது, எங்களைக் கலந்துகொள்ளத் தவறி விட்டார்கள். ஆதலாலே சமய அடிப்படையில் இதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்று

சொல்கிற வாய்ப்பை சமயத் தலைவர்கள் இழந்து விட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இப்போது கூட மாறுதல் மக்கள் மன்றத்தில் ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட வேண்டுமென்று சொன்னால், சமயத் தலைவர்கள் சமய அறிஞர்கள் போன்றவர்களை, இந்த மாதிரித் தீர்மானங்களைக் கொண்டு வருகிற போது, முன் கூட்டியே அழைத்து கலந்து பேசி அவர்களிடத்தில் மன மாற்றத்தினை ஏற்படுத்தி விட்டால், இதை பெரிய பகீரத முயற்சி செய்யாமல், அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே செய்ய முடியும். இப்போது கூட காலம் தாழ்ந்துவிடவில்லை. தமிழக முதல்வரவர்கள் செய்ய முடியும். இந்த சமூகத்தில் இது போல பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் உதிரி உதிரியாக சீர்திருத்தங்களைச் செய்துகொண்டு போகாமல் ஒரு நல்ல உயர்மட்ட ஆணைக்குழுவினை நியமித்து, சமயத் தலைவர்கள், சமய அறிஞர்கள் போன்றவர்களை அணுகி, என்ன விதமான சீர்திருத்தங்களை நாம் செய்வது என்பதை நெறிமுறைப்படுத்த அரசு முன்வரவேண்டும். இந்த அரசு அதைச் செய்ய விரும்புகிறதென்று சொன்னால், பலர் நிச்சயமாக உடன்படுவார்கள். எனவே அவர்களைத் தனியாக ஒதுக்கிவிட்டு, சீர்திருத்தங்களைச் செய்து கொண்டு போனால் நமக்கென்ன கவலை என்று இருப்பார்கள். தப்பித் தவறி அவர்கள் வழக்கு மன்றங்களுக்குப் போவார்கள். இந்தச் சூழ்நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், உயர்மட்ட ஆணைக்குழுவை நியமித்து, கமிஷனை நியமித்து, எந்தச் சீர்திருத்தம் அவசியம், எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி அபிப்பிராயங்களைத் திரட்டுவது நல்ல பணி. காரணம், அரசியல் சட்டத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டும் கூட நம்முடைய (பல பேர்களின்) மனங்களில் இன்னமும் தீண்டாமை ஒழிக்கப்படவில்லை. அப்பர் அடிகளுக்குப் பிறகும், ராமானுஜருக்குப் பிறகும், பழைய போக்கு அப்படியே இருக்கிறது. அடிப்படைக் காரணங்கள் மாற்றப்பட்டாலொழிய, புதிய மாறுதலைத் தோற்றுவிப்பது சாத்தியமல்ல. எனவே அரசின் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசுவதோடு, ஆலய நுழைவுச் சட்டத்தில் தேவையான திருத்தத்தைச் சேர்த்து எல்லோரும் கருவறையில் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட விதிகளை அனுசரித்து, ஜாதி வேறுபாடின்றி பூவும் நீருமிட்டு வழிபாடு செய்யலாம் என்ற உரிமையை வழங்குமாறு ஆலோசித்து அந்த வகையில் திருத்தத்தைச் செய்ய வேண்டும்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசைக் கோருவதோடு கூட, சமயத் தலைவர்கள், சமய அறிஞர்கள் என்ன கருதுகிறார்கள் என்று அவர்கள் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டி, ஒரு ஆணைக்குழுவை நியமித்து,

1974 ஏப்ரல் 23] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

இந்து சமூகத்திற்கு வலிவுள்ள இயற்கை ரீதியான, நிரந்தரமான பாதுகாப்பு தரக்கூடிய ஒரு நல்ல சீர்திருத்தத்தைச் செய்ய முன்வர வேண்டுமென்று விரும்பி வேண்டிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாடு அரசின் இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கும் இந்த நேரத்தில், இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டால், அந்தத் திருத்தம் முழுப் பயனை அடைய ஒரே ஒரு யோசனையைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

இன்று பழனி, திருச்செந்தூர், திருவரங்கம் போன்ற ஒரு சில ஊர்களிலுள்ள திருக்கோவில்களிலே பணியாற்றும் அர்ச்சகர்களும், மற்ற ஊழியர்களும்தான் சிறப்பான நிலையில் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான திருக்கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள் உடுத்திய ஆடையைத் தவிர வேறு ஒரு ஆடை இல்லாத நிலையில் இருக்கிறார்கள். அந்த இழி நிலை மாற்றப்பட்டாலொழிய, இந்தத் தொழில் கவர்ச்சிகரமானதாக ஆகாது. நாம் எந்தத் திருத்தம் செய்தாலும், அதை ஏற்றுக்கொண்டு பணியாற்ற அர்ச்சகர்கள் வர மாட்டார்களென்று கூறி, இந்தத் திருத்தம் செய்யும் காலத்திலேயே மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்களும் அர்ச்சகர்களுடைய நிலை இன்னும் சிறப்பாக மாறுவதற்குத் தங்களால் இயன்றவற்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

* THIRU G. VASANTHA PAI : Hon. Deputy Chairman, Sir, I thank you for giving me this opportunity of speaking on this Resolution. Sir, at the outset, I want to point out that this Resolution, while trying to reform some aspects of Hindu system of worship, tries to borrow something from the Church. I take exception to the wording of the Resolution, namely, " ecclesiastical organisation of men possessing requisite educational qualifications who might be trained in recognised institutions in priesthood ". I do not know, Sir, how the framers of this Resolution chose to refer to the wording " ecclesiastical organisation ", though the Committee on Untouchability, Economic and Educational Development of the Scheduled Castes might have referred to it. I may bring to the notice of this House the definition of the word in the Oxford Dictionary which I had occasion just now to get from the Library. ' Ecclesiastes ' is the title of a book of the Old Testament written in the person of Solomon or the proper designation of Solomon who is considered as the author of the book.

[Thiru G. Vasantha Pai] [1974 ஏப்ரல் 23

"Ecclesiastical" means "of or pertaining to the Church" as opposed to the civil or secular; of persons Clerical as opposed to lay". Sir, to bring this concept into a Hindu society, I think, is doing violence to it and I think this portion of the Resolution ought to be properly re-drafted, because there might be objection to the bringing of the tenets of Ecclesiastical organisation into the concept of Hindu Religious Philosophy. It might mean that people who are in Hindu society might have to copy the Papal Order. Sir, persons who believe in Hinduism might have real objection to that.

Sir, the second aspect of the resolution is this: I am myself a Hindu and I wonder whether many of us do know the meaning of the word 'Hindu'. Sir, we are called Hindus. In the Aveshta of the Persians, we are known as Indos. The word 'Hindu' comes from the River Indus. The persons who were living round about the region of the River Indus were called Indos in Prakrit—Hindus in Sanskrit. It is not a religion. I want to take strong exception to persons who say that Hinduism is a religion. It is not so.

[மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை]

Hinduism means the civilisation, practices and culture of persons who lived in and around the region of the River Indus. That is why we were called Indos in the Persian Aveshta. That is why, Sir, in Hamurabi and servant other foreign texts we were called Indos. All the time we were referred to as Indos. Even when the Muslims came and even when the Christian came, they worshipped a God. There is no such God as Hindu. While Jesus is there and while Allah is there, Christ there is no God by the name Hindu. So, Sir, Hinduism denotes the manners and customs of the people who resided round about the region of the River Indus, later pervaded the Indo-Gangetic Plain and then came to the South Hinduism is not a caste-ridden society. Hinduism is not. Sir, as is envisaged in the Resolution is was a functional society. Keshatriyas fought in the battle-field and they were the soldiers of society and also its ruling class. They drew their inspiration from all the people who settled down in the region of the Indo-Gangetic Plain. Similarly, the Brahmans were persons who were well versed in the Vedas and Scriptures. They were persons who were accustomed to know and virtually realise the Brahman. I

do not say that every Brahmin living today is a Brahman in the real sense of the word, because he must know Brahman he must possesses and the maturity for your benefit and for your elevation minism is. It is not a caste. It denotes the knowledge he know the tenets of Brahminism and he must know what Brahto higher ideas. Whenever I went to a foreign land, I was proud we got philosophy, have we got culture, have we got mental to be an Indian, because in no land other than our country. have peace and contentment. I have travelled far and wide and every time I go abroad, I feel proud to be an Indian and I am proud to be a person who belongs to those who were residing in the banks of River Indus. I am proud to be a Hindu. To-day, Sir, it is an irony of fate that the persons who are residing on the banks of the River Indus are Pakistani Muslims, and can claim they are also Hindu, because they are residing on the banks of the River Indus. Sir, the next caste is Vaisyas and the Vaisyas were persons who were merchants.

MR. CHAIRMAN : About 2400 years ago, there was a person named Socrates and he was a philosopher. Does the hon. Member deny that?

THIRU G. VASANTHA PAI : Sir, I tell you that the Vedas and other texts of India are even 5000 years old. I challenge your statement on this question. Sir, I request you to refer to Sir John Dieferbaker's book "Charists of Gods".

MR. CHAIRMAN : I drew the attention of the hon. Member to the time when philosophy came into being.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, On a point of order தலைவரவர்களை ஒரு அங்கத்தினர் 'Challange' செய்வது மரபா வென்று அறிய விரும்புகிறேன்.

THIRU G. VASANTHA PAI : I never challenged the Hon. Chairman. I challenged the statement of the Hon. Chairman. There is a great deal of difference between the two. I leave the challenging of the Hon. Chairman to the hon. Members belonging to various political parties. I am only challenging his statement.

MR. CHAIRMAN : I think both are the same. If the hon. Member challenges the statement, that means challenging the ruling of the Chair.

THIRU G. VASANTHA PAI : The Hon. Chairman gave only a suggestion and I did not agree with that suggestion.

MR. CHAIRMAN : Is the hon. Member challenging the Chair or the ruling of the Chair?

THIRU G. VASANTHA PAI : There was no ruling from the Chair at all. It was only a suggestion from the Chair.

MR. CHAIRMAN : That is all right. For the information of the hon. Member I said that there was a man by name Socrates who was a philosopher.

THIRU G. VASANTHA PAI : Sir, I was only referring to that. Socrates is there, Plato is there, Aristotle is there and many other persons are there. We had also our culture and our equipment which are as old as 5000 years in B.C. I am not saying anything about it and I am not trying to speak on behalf of Caste-ridden Hindu. I am not going to say that we are the only persons who are the possessors of knowledge. I am only pointing out to you that this Resolution tries to bring to light what has been omitted to be done all these years, namely, the aspect of functional representation for which the Brahmins as the learned in the Vedas were respected in the past. Because the Brahmins have taken to other avocations, there is necessity for such a Resolution because other castes are competing with them in this field. I am not saying that the Resolution itself is bad. I am giving only the original--how this Resolution really presupposes what the state of our society was in the past, about 2000 or 5000 years ago. I am taking exception to what an hon. Member said in this House that Hinduism is a religion. It is not; it was a functional society consisting of the Kshatriyas who fought, the Brahmins who did the worship and because learned in the Scriptures and the vedas, the Vaisyas who carried on trade and commerce and the Sudras who attended to other avocations in life.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இங்கு சூத்திரர்கள் யாருமில்லை.

THIRU G. VASANTHA PAI: In Hindu society, there were four castes and I was only talking of those ancient days but then they were purely functional. I am only pointing out that it was not a religion that flourished and when its philosophy became corrupted Buddhism and Jainism came into being as a protest against the fall in standards and fought against animistic supersition that had clouded the Hindu society. I take exception to the second preamble of this Resolution which refers to "Ecclesiastical organisation" and which means as if we were toeing the line of the Papal Order. I do not want this Resolution to be drafted in that form. I hope the Hon. Minister will take note of what I have said and effect necessary change. The Word "Ecclesiastical" may be omitted and it may be "an organisation of men possessing requisite educational qualifications who might be trained in recognised institutions". I, for one, am bound by the Constitutional oath that I have taken that I will abide by the Constitution as by law established and if the Supreme Court has said that it is wrong to interfere with the appointments of Archakas, I abide by it I expressed my views on the Resolution but I do not either support or oppose it.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே ஆண்டவனைப்பற்றி ஏராளமான தத்துவங்கள் பேசப்பட்டன. எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள், வேதத்தைப்பற்றியும், சனாதன தர்மத்தைப்பற்றியும் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே, அறிஞர் அண்ணா அவர்களும், இப்பொழுது நாட்டை ஆண்டுகொண்டிருக்கிற கலைஞர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், ஜாதிபேதமற்ற சமுதாயத்தை நாங்கள் உருவாக்கித் தருகிறோம், ஜாதியிருக்காது, பேதம் இருக்காது, தமிழன் தமிழனாக இருப்பான், மனிதன் மனிதனாக இருப்பான் என்று மக்களிடத்திலே சொல்லிவந்த காரணத்தால்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இவ்வளவு பேசிய திரு. வசந்த பாய் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் படித்தவர்கள், அறிவாளி. ஆண்டவன் ஏற்படுவதற்கு

முன்னால், மனிதன் ஏற்படுவதற்கு முன்னால், முதல் முதலாக மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்ற டார்வின் தத்துவத்தைப் படித்தவர்கள் அவர்கள். அப்படிப்பட்டவர்கள் வேதத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். உபநிஷத்துக்களைப் பற்றிப் பேசுகிறார்கள். இவற்றை அறியாத மக்கள்தான் 100-க்கு 99½ பேர் இருக்கிறார்கள் என்பதை மனதிலே கொள்ள வேண்டும். ஆண்டவன் இருக்கிறான். ஆண்டவனைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற நாங்களோ, மறைந்த அறிஞர் அண்ணா அவர்களோ நாத்திகவாதத்தைச் செய்ததில்லை. அண்ணா அவர்கள் கடவுள் இல்லை அல்லது இருக்கிறார் என்று சொல்லவில்லை. அவர் அத்தியிஸ்ட் அல்ல. அவர் ஒரு ஆக்னாஸ்டிக். கடவுள் ஒருவர் இருக்கிறாரா, சிவன் பெரியவரா, சக்தி பெரியவரா, மீனாட்சி அம்மன் பெரிதா, அதுவெல்லாம் எனக்குத் தெரியாது. என்னுடைய கருத்து நாட்டிலே ஏழை மக்கள், கீழே தள்ளப்பட்டிருக்கிற மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், இவர்கள் தான் என்னுடைய ஆண்டவர்கள், அந்த மக்களுக்கு நல்வாழ்வு, நல்ல உயர்வு, நல்ல பண்பாடு, அவர்கள் வசிப்பதற்கு குடிசை, வயிறார உண்ணுவதற்கு சோறு, உடுத்திக்கொள்வதற்கு துணிமணி, இவை அத்தனையும் கிடைக்குமானால், அந்த மக்களைப் பார்த்துத்தான் நான் ஆண்டவன் என்று சொல்வேன். ஆகையினால், காஞ்சிபுரத்திலே இருக்கிற வரதராஜபெருமாள் கருடவாகனத்தில் பறக்கிறார், அந்தக் கருடவாகனத்தைப் பார்த்து புத்து போட்டுக்கொள் என்று சொன்னால், அந்த விஷயம் எங்களுக்குத் தெரியாது. தெரிந்தமாதிரி பொய்க் கற்பனைகளைப்பற்றி நாங்கள் பேசுவது பழக்கமல்ல. ஆகவேதான், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்றும், பிராமணன் தலையிலே பிறந்தான், க்ஷத்திரியன் தோளிலே பிறந்தான், வைசியன் இடுப்பிலே பிறந்தான், சூத்திரன் காலிலே பிறந்தான் என்ற தத்துவம் எல்லாம் இடைக்காலத்திலே வந்த காரணத்தாலே, எல்லோரும் மனிதர்களாக வாழவேண்டும், இம்மாதிரி தத்துவத்தைத் தூக்கி எறிய வேண்டும் என்பதற்காகத்தான் முன்னேற்றக் கழகம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறது. பிராமணர்கள் புத்திசாலி என்பதை நான் மறுக்கவில்லை. வேதங்களை, உபநிஷத்துகளை எல்லாம் கற்றுணர்ந்தவர்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்தமாதிரி வேதங்களும், உபநிஷத்துகளும், பெரும் பாரம்பரியங்களும், ஒழுக்க நடவடிக்கைகளும் இவர்களுக்கு மட்டுந்தான் சொந்தமாக இருக்க வேண்டுமா? அரிஜன மக்களுக்கு இருக்கக்கூடாதா? வேதம் கற்ற அவர்கள் ஒழுக்க சீலர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

1974 ஏப்ரல் 23]

THIRU G. VASANTHA PAI : Vedas must be studied by everybody.

MR. CHAIRMAN : The hon. Member only thanks you

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றினால், அரிஜன மக்களை கோயிலுக்குள்ளே கொண்டு போய்விட்டால், நாளைக்கே அவர்களுக்கெல்லாம் கட்டிடங்கள் எல்லாம் வந்து விடும் என்பதற்காகக் கொண்டுவரவில்லை. மனிதன் மனிதனாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் எனக்கு முன்னாலே பேசிய அடிகளார் போன்றவர்களையெல்லாம், அறநிலையப் பெரியவர்களையெல்லாம் கலந்து செய்யவில்லை. அவர்களைக் கலந்து செய்ய வேண்டியதுதான். ஜனநாயகத்தில் அவர்களைப் புறக்கணித்துவிட்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள மாட்டேன். ஆனால் அப்படிச் செய்யும்போது, இதையெல்லாம் குறைக்க வேண்டாம், கெடுக்க வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களோ என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அடிகளார் அப்படிச் சொல்லமாட்டார்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, அடிகளார் போன்றவர்களைக் கலக்க வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட சட்டத்தை மனிதனை மனிதனாக ஆக்குவதற்காகத்தான் கொண்டுவந்திருக்கிறோம்.(முன்பு பிராமணர்களை மற்ற மக்கள் தூக்கிக்கொண்டு போனார்கள். இப்பொழுது எங்களை நீங்கள் தூக்க வேண்டாம். நீங்களும் நடவுங்கள். நாங்களும் நடக்கிறோம். இப்படிச் செல்வதற்குத்தான் சட்டமே தவிர, வேறு எதற்கும் அல்ல என்று சொல்லி மனப்பூர்வமாக இதை ஆதரிக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற, இந்துமதக் கோயில்களில் பரம்பரை பூஜாரிகள் முறையை மாற்றி வரன்முறைப்படுத்தும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கான சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு முதலிலே நன்றி கூறுகிறேன். இது இந்து மதத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயமாகும். என்னை நான் இந்து என்று அறிந்துகொண்டதே, என்னை என்னுடைய தகப்பனார் பள்ளிக்கூடத்திலே சேர்க்கும்போது. ஆசிரியர் என் தந்தையாரைப் பார்த்து, நீங்கள் எந்த மதம் என்று கேட்க, என் தந்தையாருக்கு அது தெரி

யாமல், 'நீ இந்துதான்' என்று சொல்ல, அப்படிச் சொல்லப்பட்டதனால் நான் இந்து என்பதை உணர்ந்தேன். இன்றைக்குப் பெரும்பாலான மக்கள், தாங்கள் எந்த மதத்தினர் என்பதையே அறியாது, இந்து மதத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு இந்து மதத்தில் கடவுளர்கள் இருக்கின்றார்கள், அவர்களுக்குப் பல்வேறு கோவில்களும் இருக்கின்றன. ஆனால் இந்தக் கடவுளர்களை மனிதன் படைத்தானா அல்லது மனிதனைக் கடவுளர்கள் படைத்தார்களா என்ற வாதப் பிரதிவாதங்கள் நீண்ட நாட்களாக நமது நாட்டிலே இருந்துவருகின்றன. கடவுள் மனிதனைப் படைத்தான் என்று சொல்லுவதற்கான நியாயத்தைச் சொல்லும் அதே நேரத்திலே, மனிதன்தான் கடவுளைப் படைத்தான் என்று பரிசோதனைகள் மூலமாக, விஞ்ஞான ரீதியிலே இங்கர்ஸால் போன்ற மேதைகளும், நமது தமிழகத்திலே பேறிஞர் அண்ணா போன்றவர்களும் எழுதியிருப்பதை நான் படித்திருக்கின்றேன். இன்றைக்கு அது அல்ல நமது வாதம். இன்றைக்கு நம்முன் உள்ள விஷயம் கடவுளர்களுக்குப் பல்வேறு கோவில்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் அர்ச்சகர்கள் என்றும் பூசாரிகள் என்றும் இருக்கின்றார்கள். அர்ச்சகர்கள் என்பவர்கள் பண்டைய நாட்களிலே அரசர்கள் காலத்திலே கட்டப்பட்ட பெரிய பெரிய கோவில்களிலே இருந்துவருபவர்களாவர். அவர்களெல்லாம் பிராம்மண வகுப்பினைச் சார்ந்தவர்களாக இருந்துவருகின்றார்கள். ஆனால் கிராமப்புறங்களிலே உள்ள மாரியம்மன் கோவில்கள், செல்லியம்மன் கோவில்களிலே பூசாரிகள் என்று இருக்கின்றார்கள். இது மட்டுமின்றி, எந்தெந்தக் கோவில்களிலே உள்ள கடவுளர்களுக்கு எந்தெந்த விதமான தின்பண்டங்கள் படைக்க வேண்டும் என்றும் வகுத்திருக்கின்றார்கள். அப்படிப் பார்க்கும்போது, கருப்பனார் கோவிலுக்கு, 'கறுப்பை' வைத்துப் படைக்க வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அங்கே 'கறுப்பு' என்று சொல்லுவது பட்டைச் சாராயம். இதை வைத்துப் படைக்கும் கடவுளர்களும் நமது நாட்டில் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட கடவுளர்களுக்கு என்று இருப்பவர்கள் பூசாரிகள். கோவில்களிலே உள்ள அர்ச்சகர்களுக்கு வருமானம் அதிகம். ஆனால் பூசாரிகளுக்குக் குறைவு. கடவுளர்களிலும் வசதி படைத்த கடவுளர்கள், வசதியற்ற கடவுளர்கள் என்று இருக்கின்றார்கள். இப்படியும் நமது நாட்டிலே இருக்கின்றது. உண்மையிலே மனிதன்தான் கடவுளர்களைப் பிறப்பிக்கின்றான், கோவில்களைக் கட்டுகின்றான், அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறான். இப்படித்தான் இவை உருவாயின என்று, என்னைப் பொறுத்த வரையில், என்

1974 ஏப்ரல் 23] *[திரு. செ. முத்துசாமி]*

அறிவிற்கு எட்டிய வரையில், கடந்த 37 ஆண்டுக்கால வாழ்க்கையில் நான் அறிந்து வந்திருக்கின்றேனே தவிர, ஏதோ பெரியதோர் சக்தி மனிதனைப் படைத்து அவன் செயல்களையும் ஆட்டிப்படைக்கின்றது என்று நம்பக்கூடிய நிகழ்ச்சிகள், இந்த நாட்டில் எதுவும் நடைபெறவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கடவுளர்களை நம்புகின்றவர்கள் காட்டுமிராண்டிகள் என்று சொன்ன பெரியார் அவர்கள்கூட ஆலயப் பிரவேசத்திற்கு அரிசனங்களை அழைத்துச் சென்று அதற்காகப் போராட்டமே நடத்தினார்கள். அதிலே பல்வேறு துன்பங்களுக்கு தம்மை ஆளாக்கிக்கொண்டார்கள். அப்படிப்பட்ட தந்தை பெரியார் அவர்கள் மறைந்த நேரத்திலே, அரசாங்க மரியாதைகளோடு நடைபெற்ற அவரது இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு, அந்த நேரத்திலே இந்திய அரசு அவரைப் பாராட்டிய நிகழ்ச்சிகளையும் நான் அறிந்திருக்கின்றேன். அப்படிப்பட்ட தந்தை பெரியார் அவர்கள்கூட கோவில் அர்ச்சகர்கள் விஷயத்தில் இப்போது நாம் கொண்டுள்ள இந்தக் கருத்தில் வேறுபாடு கொண்டதில்லை. ஜாதி மத பேதமற்ற சமுதாயம் இருக்க வேண்டும் என்பதுதான் என் போன்றோர்களுடைய கருத்தாகும். மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால், கடவுளின் பெயரால் நடைபெறும் அட்டூழியங்கள், கொடுமைகள் ஏராளமானவை என்பதை, கொஞ்ச நாட்களுக்கு முன்புகூட பல இடங்களிலும், 'கடவுளின் பெயரால் நடக்கும் கொடுமைகளைக் காணச் சகிக்கவில்லையே' என்ற பாட்டை அதிகமாகக் கேட்டிருக்கின்றேன். இன்றைக்கும்கூட கடவுளின் பெயரால் நடைபெறும் அட்டூழியங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றைத் தடுக்க அரசினால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காரணம் மதத்தில் தலையிடு என்று தடுத்துவிடுகின்றார்கள். இந்து மதத்திற்கு வரைமுறைகளைக் கொண்டு வருகிறோம். ஆனால் முஸ்லீம் கோவில்களைப் பொறுத்த வரையில், கிருத்துவக் கோவில்களைப் பொறுத்த வரையில் கொண்டுவர முடியாத நிலையில் இருக்கிறோம். எல்லோரும் மக்கள்தான். சில நேரங்களிலே அந்த மக்களுக்காக அரசாங்கத்திலே சில சட்டங்களைக் கொண்டு வருகின்றார்கள். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சிதான் இது. இதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைக் கொண்டு வருவதன் மூலம் மக்கள் அனைவரும் ஒரே நோக்கோடு சிந்திக்கச் செய்வதற்காக முயற்சி செய்யப்படுகிறது. இது சிறிய சீர்திருத்தம். சீர்திருத்தம் சிறியது என்றாலும், எதிர்காலத்தில் மதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு இந்த அரசு பாடுபடலாம் என்றாலும், அந்தத் திசையில் பாடுபட்டால் இந்த அரசினை எவ்வளவு காலம் ஆட்சியில் வைத்திருப்பார்கள் என்பது ஒரு பிரச்சினை. அது வேறு.

எவ்வளவு சீர்திருத்தக் கருத்துக்களானாலும் மக்கள் அவற்றை எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவற்றைச் செய்ய முடியும். எவ்வளவுதான் நாம் மிகச் சிறந்த கருத்துக்களை ஏற்றிருந்தாலும், மாண்புமிகு அடிகளார் அவர்கள் பேசியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள், அந்த வாசகம் 'பராசக்தி'யில் சிவாஜி கணேசன்

திரு. ம. பொ. சிவஞானம்: கோவிலிலுள்ள பராசக்தியா அல்லது சினிமா பராசக்தியா ?

திரு. செ. முத்துசாமி: நான் சினிமா 'பராசக்தி' யில்தான் பார்த்திருக்கின்றேன், வேறு பராசக்தியைப் பார்த்திருக்கவில்லை என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தைத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் மன நிறைவோடு ஆதரிக்கிறேன் என்று முதலில் உறுதியோடும் உற்சாகத்தோடும் சொல்லிக்கொள்ளுகிறேன். நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் மதத்தை நம்புகிற, தெய்வீகத்தை நம்புகிற அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தாரா ? ஏனென்றால் நம்பாதவர்களும் உரிய முறையிலே இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைக் கோரி வரும் நடவடிக்கைகளை ஆதரிக்க உரிமை இருக்கிறது இந்த சட்ட மன்றத்திலே. அதன்படி ஆதரித்தாரா என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரையில் ...

திரு. செ. முத்துசாமி: நான் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நிற்கிறேன் என்ற காரணத்தினால், துணைத் தலைவரவர்கள், நான் கடவுள், ஜாதி, மதம் இவற்றை நம்புகிற அடிப்படையில் இதை ஆதரித்தேனோ என்று எண்ணுகிறார்கள். இவற்றை நம்பாதவன் என்ற அடிப்படையில்தான் இந்தக் கருத்துக்களைச் சொல்லி, இந்தச் சீர்திருத்தத்தை ஆதரித்தேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: அப்படியென்றால், இப்படிப்பட்டவர்கள் தயவு செய்து இந்த வாதத்தில் சற்று ஒதுங்கியிருந்தால், நன்றாக இருக்கும் என்று என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவருக்கு உரிமை இருக்கின்றது, தம்முடைய கருத்தைச் சொல்ல.

அவரது உரிமைக்குக் குறுக்கே நிற்க எனக்கு உரிமையில்லை. மதத்தை நம்பு கின்றவர்கள் தங்கள் மதத்தில் ஒரு சீர்திருத்தத்தைச் செய்ய வரும்போதுதான் அது உண்மையிலேயே சீர்திருத்தமாகிறது. அதற்காகத்தான் இதைச் சொல் லுகிறேன்.

இந்தத் தீர்மானத்தின் மூலப் பொருளை தெரிந்துகொள்ள வேண்டும். கோவில் களுக்குள் இந்துக்களில் ஒரு சிலரை அனுமதிப்பது வேறு, கோவில்களில் அர்ச்சகர்கள், பூசாரிகள் இவர்கள் தொழிலை, நியமனங்களை முறைப்படுத்துவது என்பது வேறு. கோவில்களுள் எல்லோரும் போகக் கூடிய சட்டம் கொண்டு வரும் நிலை இன்றைக்கு இல்லை. அது முடிந்துவிட்ட ஒன்று. ஆனால், கோவில் களில் உள்ள சிலைகளை, விக்ரகங்களைத் தொட்டு, நீராட்டி, அர்ச்சனை செய்யும் விதி முறைகள்—வைதீக முறைகள் இருக்கின்றதே, அந்தத் தொழிலைச் செய் கின்றவர்களைப் பொறுத்த வரையில், அவர்களை எப்படி முறைப்படுத்துவது என்பதுதான் பிரச்சினை. நாம் ஒன்றை இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பிராம்மண வகுப்பிலே உள்ளவர்கள்கூட கோவில் களிலே எல்லோரும் அர்ச்சகர்களாகிவிட முடியாது. அவர்களிலும் குலம், கோத்திரம் என்ற வேறுபாடுகள் இருக்கின்றன. வைணவக் கோவில்களிலே, சில கோவில்களிலே தென்கலை சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் அர்ச்சகர் களாக இருக்கின்றார்கள். அங்கே வட கலைச் சம்பிரதாயத்தைச் சேர்ந்த பிராம்மணர்கள் அர்ச்சகர்களாக வந்துவிட முடியாது. அதைப் போலவே வடகலைப் பிரிவினையை சார்ந்த பிராம்மணர்கள் அர்ச்சகர்களாக இருக்கும் கோவில்களிலே தென்கலை பிராம்மணர்கள் அர்ச்சகர்களாக வர முடியாது. அதைப் போல சிவன் கோவில்களிலே குருக்கள் என்று சொல்லப்படும் பிராம்ம ணர்கள் அர்ச்சகர்களாக இருக்கின்றார்கள். அங்கே வேறு பிராம்மணர்கள் அர்ச்சகர்களாக வர முடியாது. இதே போல, வேறு சில சைவக் கோவில் களிலே பிராம்மணர் அல்லாதார் என்று சொல்லப்படுபவர்கள் அர்ச்சகர்களா கிறார்கள். அவர்களில்கூட வேளாளர் வகுப்பினர்தான் அர்ச்சகர்களாக வர முடியும், வேறு சாதியார் வர முடியாது. பிராம்மணர்களில்கூட குறிப்பிட்ட இந்தக் குலத்தோர், இந்தக் கோத்திரத்தோர்தான் இந்தக் கோவிலுக்கு அர்ச்ச கர்களாக வரலாம் என்றெல்லாம் விதிகளை வைத்தார்கள். வைதீக மரபுகளை அவர்கள்தான் கடைப்பிடிப்பார்கள் என்று நம்பியது நான். ஆனால் நான் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கான காரணம், அந்த வகுப்பு முறை—அந்த வேதாகம முறைகளைக் கடைப்பிடிப்பவர்கள் இவர்கள்தான் என்று சொல்ல முடியாத அளவிற்கு—கலகலத்து ரொம்ப நாட்கள் ஆகிவிட்டன. ஆகவேதான் இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்

டிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை, மத நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை உள்ளவர்களும் ஆதரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. திரு. வசந்த பாய் அவர்கள்கூட ஆதரிக்கக் காரணம், பழைய குலம், கோத்திரம் நிலைகுலைந்துபோய்விட்டதுதான். தில்லை நடராசர் சன்னதியில், சிதம்பரம் தீட்சிதர்கள் என்ற குறிப்பிட்ட ஒரு குலத்தவர்தான் அர்ச்சகர்களாக இருக்க முடியும். அந்தக் கோவிலிலே அர்ச்சகர்களாக வரும் குலத்தார்கள், தங்களுக்குள்தான் பெண் கொடுக்கல், வாங்கல் செய்து கொள்வார்கள்—தில்லை மூவாயிரவர் என்று சொல்லப்படுவோருடைய வழித்தோன்றல்கள்கூட, அவர்களுடைய பிள்ளைகள் கூட அர்ச்சகர் தொழிலுக்குத்தான் போவார்களே தவிர, வேறு தொழிலுக்குப் போகக் கூடாது என்ற நியதியினை அவர்களுக்குள் வகுத்துக்கொண்டிருந்தார்கள் அந்த நாட்களிலே. அப்படிப்பட்டதொரு நியதியின் அடிப்படையில் திருக்கோவில்களிலே அவர்களெல்லாம் தொண்டு செய்து வந்த காலத்தில், கோவில்கள் ஒழுங்காக முறையாக இருந்தன. ஆனால், காலப் போக்கிலே குலம் கலைந்துபோய், கோத்திரம் குலைந்துபோய், இன்றைக்கு வருணம் ஒன்றுதான் எஞ்சியிருக்கின்றது—வகுப்பு ஒன்றுதான் மிஞ்சி நிற்கிறது.

இன்றைக்குக் கோவில்களிலே அர்ச்சகர்களாக உள்ளவர்களுடைய மக்கள் கல்லூரிகளில் படித்து வேறு வேறு தொழில்களில் ஈடுபடுவது, வாணிபம் செய்து வரும் நிலைமைகளைப் பார்த்து வருகிறோம். இதைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை, தடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கோத்திரம், குலம் குலைந்துபோய்விட்ட நிலையில், பாட்டனுக்குப் பேரன், அப்பனுக்குப் பிள்ளை என்ற வழி முறைப்படி குருக்கள்மார் வர வேண்டும் என்று இருந்த வழக்கம் உருமாறிப்போய்விட்ட பிறகு, நாம் அதைக் கட்டிக் காக்க வேண்டிய அவசியமில்லை. இன்னும் சில தலைமுறைகளுக்கப்பால், கோவில்களுக்குத் தேர்ந்தெடுக்கக்கூடிய அர்ச்சகர்கள் கூட இல்லாத ஒரு நிலைமையும் பிராம்மண—வேளாள வகுப்புகளில் ஏற்பட்டு, அது தானாகவே தலைகீழாகப் போய்விடும் காலம் வருவதைவிட, நாமாகவே மாற்றியமைப்பதற்கான சட்டத்தைக் கொண்டுவருவதை நான் வரவேற்கிறேன். தீர்மானத்தில் 'ஏற்பளிக்கப்பட்ட இனம், அல்லது வகுப்பு, ஜாதி வேறுபாடின்றி' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று அடிகளார் அவர்கள் சொன்னார்கள். நானே அதைக் குறித்து வைத்துக்கொண்டிருந்தேன். அடிகளார் அவர்களும் நினைப்பூட்டினார்கள். இனம் என்பது ஒரு மொழிக்குரிய மக்களைத்தான் குறிக்கும். தமிழ் பேச

வோரெல்லாம் எந்த சாதியாகவிருந்தாலும் தமிழர்கள்தான். இங்கே 'இன வேறுபாடு இன்றி' என்பது ஒரு காரணத்தை முன்னிட்டு அவசியமாகிறது. அதை நாம் மறுப்பதற்கில்லை. மதம் வேறு. இனம் வேறு.

THIRU G. SWAMINATHAN : Sir, on a point of clarification, in the Resolution it has stated that " the line should be open to all the candidates irrespective of caste, creed or race ". இந்துக்கள் அல்லாத முஸ்லீம் மதத்தவர்கள், கிறிஸ்தவ மதத்தவர்கள்கூட, அர்ச்சர்களாக வரலாம் என்று தொனிக்கிறது. கிரீட் என்பதற்கு ஆக்ஸ்ஃபார்டு டிக்ஷனரியில் ' system of religious belief ' என்று போட்டிருக்கிறது. அந்த வார்த்தை ஓரளவுக்குத் தவருக இருக்கலாம் என்று நம்புகிறேன். 'ரேஸ்' என்ற வார்த்தைக்கு distinct ethincal lock the Dravidian, the Aryan, the Caucasean, the Mongolian என்பதைப்போல், அந்த 'கிரீட், ரேஸ்' என்ற வார்த்தைகள் தொனிக்கின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் நம்முடைய அடிகளார் அவர்களும் மாண்புமிகு துணைத் தலைவரவர்களும் குறிப்பிட்டிருப்பது குறித்து இந்த விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற பத்தியானது

'தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு கருத்து தெரிவித்துள்ளதாலும்'

என்று எடுத்துக் காட்டுகிறது.

அதற்குப் பின்னால் தீர்மானத்தில் 'சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப்பூசாரிகளை நியமிக்கும் முறை நீக்கப்பட்டு ஜாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி அனைவருக்கும் பூசாரிகளாக நியமிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும், தீண்டாமை, அரிசன பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்தும் அந்தக் குழு கருத்து தெரிவித்துள்ளது. அந்தக் கருத்துப்படிதான் செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவரவர்களே, அதைத்தான் நானும் சொல்ல எடுத்தேன். இது சமயத்தினுடைய, மதத்தினுடைய விஷயம். தமிழ் நாட்டில் உள்ள கோவில்களில் கூட ஒரு தமிழர் அல்லாத இந்து அர்ச்சகராக வருவதை, இந்த சீர்திருத்தச் சட்டப்படிக்கூட நாம் தடுக்க முடியாது, தடுக்க வில்லை. அதைத்தான் மதம் வேறு, இனம் வேறு என்று கூறுகிறேன். தமிழர் அல்லாத ஒருவர் தமிழில் அர்ச்சனை முறைப்படி ஒரு ஆலயத்திற்கு அர்ச்சகராக வருவதற்கு இந்தச் சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது, அங்கீ கரித்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆயினும், 'இனம்' என்பதற்குப் பதிலாக 'வருணம்' என்று போட்டு விடுவது நல்லது. அதாவது 'வருணவேறுபாடின்றி' என்று போட்டுக்கொள்வது நல்லது. வருணத்தால் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், வேளாளர்—அதாவது, அந்தணர், அரசர் வணிகர், வேளாளர் என்று சொல்லக்கூடிய நான்கு வர்ணத் தார்களும் இந்துக்கள். ஆதலால், அவர்களுக்கு அதிலே கலந்து கொள்ளக் கூடிய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் 'இனம்' என்பதற்குப் பதிலாக 'வருணம்' என்று போட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன். கீழேயிருந்து மேல் நோக்கி மூன்றாவது பாராவில், தொடக்கத்தில் 'சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக' என்று கூறப்பட்டிருக்கிறது. 'சமூக சீர் திருத்தம்' என்பது வேறு, 'சமயச் சீர்திருத்தம்' என்பது வேறு. 'சோஷல் ரிபார்ம்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதைத்தான் சமூகச் சீர்திருத்தம் என்று சொல்லி வருகிறோம். சமூக ரீதியில் சில மூட நம்பிக்கைகள் இருக்கத் தான் செய்கின்றன. அவைகளையெல்லாம் போக்குவதற்கு சமூகச் சீர்திருத்தச் சட்டமும் தேவைப்படுகிறது. 'சமூக சீர்திருத்தம்' என்று இத்தீர்மானத் தில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மசோதாவில் 'சமய சீர்திருத்தம்' என்று திருத்தி விடுவது நல்லது. அந்தக் கருத்தை இங்கே அறநிலையத் துறை அமைச்சர் விளக்கி விடுவார்கள் என்று கருதுகிறேன்.

அர்ச்சகர்களே தேவையில்லை என்று அடிகளார் அவர்கள் சொன்னார்கள். இராமலிங்க சுவாமிகளும் அதையே வலியுறுத்திக் கூறியுள்ளார். "ஆண்ட வனுக்கும் பக்தனுக்கும் நடுவே 'இடைத் தரகர்' தேவையில்லை" என்று கூறி யிருக்கிறார். பக்தனுக்குப் புரியாத ஒரு மொழியில், பக்தனுக்காக இறைவ னிடம் போய் முறையிட்டுக் கொள்வதற்காக இடையில் ஒருவர் தேவை யில்லை. அவரவர்களுக்குப் புரிகின்ற மொழியில் வழிபடுவதுதான் நல்லது என்று கூறினர். வள்ளல் பெருமான் இன்னும் கொஞ்சம் மேலே போய்— 6,000 அருட்பாடல்களை பழம் தமிழில் பாடிய அவர்—உரைநடைத் தமிழில் நான்கு விண்ணப்பங்களை எழுதி, ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஒவ்வொரு

வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் தெரிந்து சொல்ல வேண்டும் என்று வகுத்துத் தந்தார்கள். ஆனால் அடிகளார் நினைப்பூட்டியபடி, ஆலயங்களில் விக்கிரகங்களின் மீது நகைகள், சொத்துக்கள் இருக்கின்றன, வேறு எந்தக் காரணத்திற்காக இல்லாவிட்டாலும், அதற்காகவாவது அர்ச்சகர் தேவைப் படுகிறார். அர்ச்சகர் இல்லாமல் பக்தர்கள் தாங்களாகவே விக்கிரகங்களைத் தொட்டு வழிபட வேண்டுமென்று சொன்னார்கள். அது கால கதியில் நடக்க வேண்டியது. நாம் அதைப்பற்றி இப்பொழுது சொல்லத் தேவையில்லை. இப்பொழுது குன்றக்குடி கோவில்களிலேயே விக்கிரகங்கள் மீது நகைகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை எடுப்பதற்கு அடிகளார் அவர்கள் இப்பொழுது தயாராகவிருந்தால், நாங்கள் விழாவிற்கு வரத் தயாராகவிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நாட்டுக் கோவில்களில் எந்தவிதமான சொத்தும், நகையும் இல்லாமல் விக்கிரகங்கள் வைக்கப் பட்டாலும், தரித்திர நாராயணர்களாக வைக்கப்பட்டாலும், அதனால் மதம் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை, தெய்வத் தன்மை ஒன்றும் குறைந்து போகாது என்று நான் நம்புகிறவன். ஒவ்வொரு ஆலயத்திலும் இந்த நிலை வரவேண்டும். அந்தக் காலத்தை நாம் எதிர் நோக்க வேண்டும்.

அடுத்து, இந்தச் சீர்திருத்தம் எவ்வளவு அவசியமாகிறது என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் சொல்கிறேன். வடலூர் ராமலிங்க சுவாமிகள் சமரச சுத்த சன்மார்க்க சங்க சார்பில் சத்திய ஞான சபை என்ற கோயிலை அமைத்து, அதற்குச் சில நியதிகளை வகுத்துக் கொடுத்தார். அதன்படி ஒரு கிறிஸ்தவர் அந்தக் கோவிலுக்கு அர்ச்சகராக வர முடியும். அப்படித் தான் அவர் ஏற்படுத்தியது. ஆனால் அவர் காலத்தில் ஒரு பிராமணர் அழைக்கப்பட்டு வருணத்தை விட்டதற்கு அடையாளமாக பூணூலை அகற்றச் சொல்லி, வருணத்தை நீக்கி பின்னர் கோயில் காரியங்களைச் செய்யச் சொன்னார். பிறகு அண்மையில் பிராமணர்கள்தான் அந்தக் கோயில் அர்ச்சகராக இருக்க வேண்டுமென்று உயர்நீதி மன்றத்திற்குப் போய் தீர்ப்பு வாங்கி வந்தார்கள். வழி வழியாக அந்தணர்கள்தான் இருக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ராமலிங்க சுவாமிகள் சமரசப் புரட்சியைக் கொண்டு வரவேண்டும் என்று ஏற்படுத்திய நியதி அவருடைய இடத்திலேயே சுக்கு நூறாக உடைக்கப்படுகின்ற நிலைமை இருப்பதால், அதை நீக்கிக்கொள்வதற்கு இத்தகைய சட்டம் நமக்குத் தேவைப்படுகிறது.

 சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 ஏப்ரல் 23

நேரம் அதிகமில்லை என்பதை அறிகிறேன். நான் ஒன்றை விட்டு இன்னொன்றுக்குத் தாவுவதாகக் கருதக்கூடாது என்று வேண்டிக் கொள்கிறேன். சுப்ரீம் கோர்ட்டுக்கு ஒவ்வொருவரும் போய் அரசு கொண்டு வரும் எதையும் எதிர்க்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. மாதத்திற்கொருமுறைகூட அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும் என்று கூறக்கூடிய நிலைமை வரும். அத்தகைய ஒரு நிலைமை நாட்டில் இருந்துகொண்டு வருகிறது. அதைப்பற்றி இராஜ மன்னார் குழு அறிக்கை மீது பேசுகின்ற போது விளக்குகிறேன். ஒரு பெடரல் ஸ்ட்ரக்சர்—சமஷ்டி ஆட்சிதான் டெல்லியில் இருக்க வேண்டும் என்று நமது அரசால் தெரிவிக்கப்பட்டுவிட்டது. நாம் சுயாட்சி மாநிலங்களில் கொண்ட சமஷ்டி ஆட்சி பெறுவோமானால், அந்த பெடரல் ஸ்ட்ரக்சரில் மத்தியில் சுப்ரீம் கோர்ட்டு நீடிக்க முடியாது. நீடிக்குமானால், டெல்லியிலிருந்து நாம் சென்னைக்கு வாங்குகின்ற சுயாட்சி அதிகாரம் பயனில்லாமல், இங்கு செய்யப்படுபவை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு போகப்பட்டு அங்கு அடிபடச் செய்யப்படும். அப்போது அதிகாரம் டெல்லி செக்ரடேரியட்டிலிருந்து டெல்லி சுப்ரீம் கோர்ட்டுக்கு மாற்றப்படுகின்ற நிலைமைதான் ஏற்படும். அதை சுயாட்சித் தீர்மானத்தில் பேசுகின்றபோது எடுத்துச் சொல்கிறேன் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை தமிழரசுக் கழகத்தின் சார்பாக ஒரு இந்து, தெய்வ நம்பிக்கை உடையவன் என்ற கருத்தில் மன நிறைவோடு ஆதரித்து அமைகிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவரவர்களே, இது ஒரு நல்ல சீர்திருத்த நடவடிக்கை. சமூக சீர்திருத்த நடவடிக்கையாக, இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், இதிலே எந்தவிதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். சமயம் மட்டுமல்ல, சமூகத்தையே சீர்திருத்துவதற்காக வந்த ஒரு தீர்மானம்தான் இது. தீண்டப்படாதவர்களைத் தீண்டுவதே பாவம். சில பகுதிகளில் அவர்களைப் பார்ப்பது கூட பாவம் என்று எல்லாம் இருக்கின்ற நாடு இந்த நாடு. இதை மாற்ற வேண் வேண்டும் என்று சமயாச்சாரியார்கள் காலத்தில் ராமானுஜாச்சாரியாரும், சங்கராச்சாரியாரும் பல முயற்சிகள் செய்து, அவர்கள் காலத்தில் ஏதோ வெற்றி கண்டார்கள். ஆனால் நாளாவட்டத்தில் அவர்களுடைய முயற்சிகளுக்கு ஏற்பட்ட பலன்கள் குறைந்து விட்டன. ராமானுஜாச்சாரியார் செய்த சீர்திருத்தம், உலகம் என்றைக்கும் மறக்க முடியாத சீர்திருத்தமாகும். தாழ்த்தப்பட்டவர்களுடைய காதில் விழும்படி வேதங்களைச் சொன்னாலே,

தண்டனை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. அதையும் மீறி ராமானுஜர் அரிஜனங்களை மதுரைக்குப் பக்கத்தில் உள்ள திருக்கோஷ்டியூர் கோயிலுக்குப் பக்கத்தில் நிறுத்தி, தான் கோபுரத்தின் மேலே நின்று அவர்களுக்கு வேதத்தை மொழிந்தார். அவரைப் பல அர்ச்சகர்களும், மற்ற பிராம்மணர்களும் சென்று பயமுறுத்திய போது, இத்தனை பேர் மோட்சம் செல்லும்போது பல ஆயிரக்கணக்கான அரிஜனங்கள் தீண்டப்படாதவர்கள் மோட்சம் செல்லும்போது, நான் ஒருவன் வேண்டுமானால் நரகத்திற்குப் போவது பற்றி ஆட்சேபனை இல்லையென்று சொல்லிவிட்டு வேதத்தை ஓதுவித்தார் என்று தெரிகிறது. இது கதையல்ல, சரித்திரத்தில் எழுதி வைக்கப்பட்டதல்ல. சமீப காலத்தில் நடந்த நிகழ்ச்சி. இம்மாதிரி இவ்வளவு தூரம் செய்தும்கூட தீண்டாமை ஒழிந்தபாடில்லை. இதைத்தான் சொல்ல வந்தேன். இத்தகைய சமய சீர்திருத்தங்களை, சமூகச் சீர்திருத்தங்களை மிகவும் நல்ல முறையில் செய்திருக்கிறார்கள். ராமலிங்க சுவாமிகள் செய்ததைப் பற்றி துணைத் தலைவரவர்கள் வெகு விரிவாகச் சொன்னார்கள். அவரவர்கள் காலத்தில் நல்ல முறையில் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். கடைசியில் சட்ட பூர்வமான தடை இதில் குறுக்கே நிற்கிறது என்பதையும் துணைத் தலைவரவர்கள் எடுத்துக் கூறினார்கள். அந்த சட்டபூர்வமான தடையை நீக்கத்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நமது இந்து சமுதாயத்தில் கூட இன்னும் பல கிராமங்களில் உயர்ந்த ஜாதியினர் வந்து வழிபடும் கோயில்களில் தாழ்ந்த ஜாதியினர் பூஜாரிகளாக இருக்கிறார்கள். இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. தாழ்ந்த ஜாதியினர், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், திருவள்ளுவர் ஜாதி, பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பூஜாரிகளாக இருக்கக் கூடிய கோயில்கள் பல இருக்கின்றன. கிராமங்களில் அந்தக் கோயில்களில் உயர்ந்த ஜாதிக்காரர்கள் சென்று வழிபடுகிறார்கள். இது ஒரு நல்ல முறை. இதை தமிழ்நாடு பூராவும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்பது தான் இப்போது இந்தத் தீர்மானத்தின் நோக்கம். என்னுடைய பக்கத்துக் கிராமத்தில் இம்மாதிரி தீண்டப்படாதவர்கள் பூஜாரியாக இருக்கக் கூடிய கோயில் இருக்கிறது. அதில் மற்ற உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் வழிபடுகிறார்கள். விபூதி வாங்குகிறார்கள், சற்று முன் எனது நண்பர் திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி

மாவட்டத்தில் அரியலூர் பக்கத்தில் கலியபெருமாள் கோவில்—பல லட்ச ரூபாய் வருவாய் வரக்கூடிய கோயில்--அந்தக் கோயிலில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் பூஜாரியாக இருப்பதாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் அல்ல, படையாச்சி பூஜாரியாக இருக்கிறார்.

திரு. கே. ராஜாராம் : பிற்பட்ட வகுப்பினர் ஒருவர் இருக்கிறார். ஏதோ செய்யக் கூடாத ஒன்றை அரசாங்கம் கொண்டுவந்து பெரிய புரட்சி பண்ணியிருக்கிறது என்று பயப்படத் தேவையில்லை. பல முன்னோர்கள் ஏற்கெனவே செய்து தோல்வி கண்டதில் வெற்றியடைவதற்கு நல்ல சீர்திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று எடுப்பு எடுத்ததற்கு பாராட்டுகிறேன். இது சட்ட பூர்வமான தடைகளை விலக்க வந்திருக்கிறது. ஆகவே, பல இடங்களில் நல்ல மாறுதலும், சீர்திருத்தமும் இருந்தும்கூட தமிழ் நாடு எங்கும் இது இல்லை. தமிழ் நாட்டில் ஆட்சேபணைகள் நிறைய இருக்கின்றன. தடைகளைப் போக்க வந்திருக்கிறது. அரிஜனங்கள்தான் பூஜாரிகளாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்த வரவில்லை என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். எந்தக் கோயிலானாலும் அரிஜனங்களைத்தான் பூஜாரிகளாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது சட்டத்தின் நோக்கமல்ல. அரிஜனங்களும் வரலாம். அப்படி வரக்கூடியவர்களுக்குத் தகுதி வேண்டும். அந்தத் தகுதியை உண்டு பண்ணுவதற்கு, அதற்கான பாடசாலைகளைக் கொண்டு வந்து, வேதம், ஆகமங்கள் ஆகியவை கற்பிக்கப்பட வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, இன்னும் கொஞ்சம் விரிவாக ஆழ்ந்து இதைச் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அவர்களுக்குச் சிறு வயதிலேயே இந்தப் பழக்க வழக்கங்களைக் கொண்டுவர வேண்டும். இது அதிக வருமானம் வரக்கூடிய விஷயமல்ல. அரிஜன ஆலயப் பிரவேசம் நடந்தபோது தங்கள் உயிரைக் கூட பணயம் வைத்து பெரியவர்கள் 1939-ம் வருஷத்தில் தமிழ் நாட்டில் பெரிய ஆலயங்களைத் திறந்து விட்டார்கள். அரிஜனங்களுக்கு இருக்கிற தடையைப் போக்குகிறோமே தவிர, அனுபவத்தில் அந்த ஆலயங்களுக்கு அரிஜனங்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தடையை நீக்குகிறோம். ஒரு அரிஜன் வேத ஆகமங்களைக் கற்று பூஜாரியாகக் கூடிய தகுதி பெற்று, அவர் பூஜை செய்ய வந்தால், தடை

இருக்கக் கூடாது, அவர் பூஜாரியாக நியமிக்கப்படலாம், அதற்கு சட்ட பூர்வமாக, கோர்ட்டுத் தீர்ப்புகளின் மூலமாக இருக்கும் தடையை நீக்குவதற்கு இந்தத் தீர்மானம் வழி செய்கிறது. ஆகவே, இது ஒரு நல்ல தீர்மானம்.

அடுத்தபடியாக, நம் அரசாங்கம் மதச் சார்பற்ற அரசாங்கம். இது இம்மாதிரி மத விஷயங்களில் தலையிடுவது சரியா என்பது பிரச்சினை. மதச் சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லும்போது அரசாங்கத்திற்கு என்று ஒரு தனி மதம் கிடையாது என்று அர்த்தம். ஆனால் மதத்தில் இருக்கக் கூடிய குறைகளை நீக்குவதற்கு இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை, தகுதி இல்லை என்று சொல்வது தவறு. பாகிஸ்தானில் அவர்களுடைய அரசாங்கம் இஸ்லாமிய சமுதாய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட அரசாங்கம் என்று டிக்ளேர் பண்ணியிருக்கிறது. நாம் அப்படியல்ல. நமக்கென்று, அதாவது நம் அரசாங்கத்திற்கென்று ஒரு மதம் கிடையாது. ஆனால் எல்லா மதங்களிலும் குறைகள் ஏற்பட்டால், குறைகளை நீக்குவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. இதில் பின்வாங்க வேண்டிய அவசியமில்லை. சமூக, சமுதாய சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு இந்தத் தீர்மானம் வகை செய்கிறது. இது நல்ல தீர்மானம். பொதுவாக, அரசியல் சட்டம் ஆணுக்கும் பெண்ணுக்கும் கூட பேதமில்லை என்று சொல்லியிருக்கிறது. ஆண்கள்தான் சில உத்தியோகங்களுக்குத் தகுதி பெற்றவர்கள், பெண்கள் அந்த உத்தியோகங்களுக்கு போகக்கூடாது என்பதை எடுத்து விட்டார்கள். ஆணும், பெண்ணும் சரி என்று போட்டிருக்கக்கூடிய ஒரு அரசியல் சட்டத்தை மேற்கொண்டு நடை முறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த நாட்டில் மனிதனுக்கு மனிதன். ஜாதிக்கு ஜாதி உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று சொல்லி, தாழ்ந்தவன் கோயிலுக்குச் சென்று இன்ன வேலை செய்யக்கூடாது என்ற தடை நீக்கப்படுவதை வரவேற்கிறோம் ஆகவே இது ஒரு நல்ல சீர்திருத்தம் என்று சொல்லி பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை, ஜாதி வேறுபாடு நம்முடைய நாட்டில் அடியோடு களையப்பட வேண்டுமென்ற வகையில் சட்டப் பேரவையில் நிறைவேற்றி சட்ட மன்ற மேலவையினுடைய விவாதத்திற்கு இங்கே கொண்டு வந்திருக்கிறோம். இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத்

தீர்மானத்திற்கு மேலும் வலிவு ஏற்படுத்துகிற வகையில் சிறப்பான கருத்துக் களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், சிலம்புச செல்வர் அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், மற்றும் உறுப்பினர்கள் எல்லோரும் இந்தத் தீர்மானத்தைப் பாராட்டிப் பேசி னார்கள். வெகு சீக்கிரத்தில் இந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசாங்கம் தன்னுடைய இணக்கத்தைத் தெரிவித்து அரசியல் சட்டத்தைத் திருத்தும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் 1971-ம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி அன்று சட்ட மன்றத்திலும் சட்டப் பேரவையிலும் நிறைவேற்றினோம். எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஜாதிப் பிரிவு, உட்பிரிவு என்ற அடிப்படை வித்தியாசம் இல்லா மல், தகுதி பெற்றிருப்பார்களானால் அவர்களைக் கோயில்களில் அர்ச்சகர்களா கவோ உள்துறை ஊழியர்களாகவோ நியமிக்கலாம் என்ற சட்டத்தை நாம் 1971-ம் ஆண்டு ஜனவரியில் நிறைவேற்றினோம். தமிழ் நாட்டில் இருக்கிற சில பேர் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்ததன் காரணமாக 14-3172-ம் தேதியன்று இந்தச் சட்டத்தினுடைய ஒரு பிரிவு செல்லுமென்றும் இன்னொரு பிரிவு செல்லாது என்றும் தீர்ப்பில் கூறினார்கள். பரம்பரை முறை ஒழிக்கப் பட வேண்டுமென்பதை நீதிமன்றம் ஒப்புக் கொண்டது. ஆனால் அந்தந்த கோயில்களுடைய ஆகம விதிகளுக்கு உட்பட்டுத்தான் நியமிக்க வேண்டு மென்று சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பில் கூறிய காரணத்தினால், மீண்டும் அரசியல் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது என்பதை தமிழ் நாடு அரசாங்கம் உணர்ந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்திய நாட்டி னுடைய பிரதமருக்கு 1972-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் தேதி அன்றைக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். ஜாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கு வதற்கு, ஆண்டவன் சன்னிதானத்தின் முன்னாலே ஜாதி வேறுபாடு இருக்கக் கூடாது, யாராக இருந்தாலும், தகுதி பெற்றவர்கள், அர்ச்சகர்களாக, உள் துறை ஊழியர்களாக வரக்கூடிய உரிமையைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லி இந்தியப் பிரதமருக்கு நம்முடைய முதலமைச்சரவர்கள் கடிதம் எழுதினார்கள். ஆனால் அந்தக் கடிதம் எழுதப்பட்டதற்குப் பிறகு, இரண்டு முறை அவர்களுக்கு நினைவூட்டி யும் எழுதப்பட்டுள்ளது. இன்றையவரைக்கும் அதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்காததன் காரணத்தால், தமிழ் நாடு சட்டப் பேரவை,

மேலவை ஆகியவை, மத்திய அரசுக்கு அதை நினைவு படுத்துகின்ற வகையிலே, வெகு சீக்கிரத்திலேயே, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேருக்கும் சம உரிமை வழங்கும் வகையிலே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று, இந்தத் தீர்மானம், மத்திய அரசை வலியுறுத்துவதற்காகக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக இந்த மன்றத்தில் மட்டுமல்லாது, தமிழ் நாட்டில் இருக்கிற மக்களுடைய பிரச்சினையாக வெளியேயும் கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் இதைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவரு டைய மறைவுக்குப் பின்னரும் திராவிடர் கழகம் தமிழ் நாடு பூராவும் கடந்த 2, 3 வாரங்களுக்கு முன்னாலே போராட்டம் நடத்தினார்கள். ஆனால் அந்தப் போராட்டம் நடத்திய காலத்தில் மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அந்தப் போராட்டத்தினுடைய நியாயத்தை உணர்ந்துகொண்டு, அந்தப் போராட்டத் தில் கலந்து கொண்டு, அதனுடைய நோக்கம் நிறைவேற வேண்டுமென்று அர சாங்கத்தை வலியுறுத்தும் வகையிலே அந்தக் கிளர்ச்சியை நடத்தினார் களென்பதை யாரும் மறுக்க முடியாது. அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த மக்கள் கோயில்களில் அர்ச்சகர்களாக வந்துவிட்ட காரணத்தாலே, இந்த அரசியல் சட்டச் சீர்திருத்தம் அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு கொடுத்துவிடும். அவர்களுக்குள்ள குறைபாடுகள் நீங்கி விடுமென்று இந்தச் சட்டத் திருத்தத்தைக் கேட்கவில்லை.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல், சமூகத்தில் அவர் களுக்கும் சம அந்தஸ்து இருக்கிறதென்று மற்றவர்கள் உணருவதற்காகத் தான் அரசியல் சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட்கிறோம். மேலும் பல உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல பயிற்சி அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தீர்மானத்தி லேயே, பயிற்சி கொடுக்கப்பட்டு, பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் நியமிக்கப்படுவார்களென்று சொல்லியிருக்கிறோம். 1971-வது ஆண்டிலே சட்டம் இயற்றப்பட்டதற்குப் பிறகு, புதிதாக அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை சில கோவில்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று முயற்சிகளை எடுத்துக் கொண் டோம். ஆனால் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு நம்முடைய சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பாக இருந்த காரணத்தால், பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிப்பதில் எந்த

விதமான பிரயோசனமும் இல்லையென்று தற்காலிகமாக ஒத்தி வைத்திருக்கிறோம். எதிர்காலத்தில் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்து தேவையான பயிற்சியைக் கொடுத்து, அப்படிப் பயிற்சி பெற்றவர்களை நியமிப்பதற்கு அரசு எல்லா வகையான நடவடிக்கைகளையும் எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அடிகளார் அவர்கள் தரகர் முறை கூடாது; அனைவரும் சென்று, தாங்களாகவே செய்யும் மலர் வழிபாட்டு முறை தமிழ் நாட்டிலே வர வேண்டுமென்று சொன்னார்கள். மேலும் அது இந்தத் தீர்மானத்திலேயே சேர்க்கப்பட வேண்டுமென்றுகூட அவர்கள் பேசுகிற நேரத்திலேயே என்னிடத்தில் தெரிவித்தார்கள். தனித் தீர்மானமாகப் போட்டுவிட்டு, அப்படிப்பட்ட முறையை நம்முடைய நாட்டிலே கொண்டுவருவோமானால், அதனால் என்ன நன்மை ஏற்படும் என்பது பற்றி ஆராய்ந்து, எதிர்காலத்தில் முடிவெடுக்கலாமென்ற பதிலையும் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிற சில வார்த்தைகள் பற்றிச் சொன்னார்கள். 'சாதி', 'இனம்' என்ற வார்த்தைகள் பற்றி தவத்திரு அடிகளார் அவர்கள் சொன்னார்கள். அதைப் போலவே நம்முடைய மேலவை உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள், 'சமயச் சார்புள்ள நிறுவனம்' என்று தமிழில் குறிப்பிட்டுள்ள அந்த வார்த்தைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது தீர்மானத்தின் வார்த்தைகளாகக் குறிப்பிடப்படவில்லை. தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு தெரிவித்துள்ள கருத்துக்களைத்தான் அங்கே ஒரு பத்தியாகத் தொகுத்துப் போட்டிருக்கிறோமே தவிர, தீர்மானத்தின் வாசகமென்று யாரும் கருத வேண்டிய அவசியமில்லை. தீர்மானத்தில் இறுதியாகச் சொல்லியிருப்பது "சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்த சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டும்" என்றுதான் போட்டிருக்கிறோமே தவிர, அதிலே வேறு எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம், இந்திய அரசியல் சட்டத்திலே செய்யப்பட்டு, என்றைக்கு நம்முடைய நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட சமுதா

யத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும், எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தக் கோவிலிலே வேண்டுமானுலும், தகுதி படைத்தவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்படலாமென்ற நிலை உருவாகிறதோ அன்றைக்குத் தான் மகாத்மா காந்தியடிகள், பெரியார், பேரறிஞர் அண்ணு அவர்கள் கண்ட கனவை நாம் நிறைவேற்றியவர்களாக இருப்போம். ஆகவே, நம்முடைய சட்ட மன்றத்தினுடைய உணர்ச்சிகளை, தமிழ் நாட்டு மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு மத்திய அரசு வெகு விரைவிலேயே இந்தச் சட்டத் திருத்தத் தைச் செய்து கொடுப்பார்களென்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நல்ல கருத்துக்களைத் தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னு டைய நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சாதி, பிரிவு, உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களையும், பூசாரிகளையும், ஏனைய உள்துறை ஊழியர் களையும் பரம்பரை முறையில் நியமனம் செய்யும் நடைமுறை பற்றி பொது மக்கள் பரவலாகக் குறைபாடு கூறுதல் இருப்பதாலும்;

இந்து சமுகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப் பூசாரிகளை நியமிக் கும் முறை நீக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் பதிலாக சமய சார்புள்ள நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், தேவையான கல்வித் தகுதி உள்ளவர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் பூசாரிக்குரிய பணி களில் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்றும், சாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி அனைவருக்கும் பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், "தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு" கருத்து தெரிவித்துள்ளதாகும்;

உச்ச நீதி மன்றத்தால் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளவாறு, அரசிய லமைப்பில் தற்போதுள்ள விதித் துறைகளின் கீழ், கோயில்களுக்குப் பொருந் துகிற ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளையொட்டி குறிப்பிட்ட பிரிவு அல்லது உட்பிரிவுகளிலிருந்து அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினுல், சமயக் கோட்பாடுகளில் தலையிடு வதாகுமென்பதாலும்;

சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்

[மேலவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 23

சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த அவை கருதுவதாலும் ;

மேற்சொன்ன நோக்கத்துக்காக இம்மாநிலச் சட்ட மன்றம் சட்டமியற்ற இயலும் வகையில் அரசியலமைப்பு தக்கவாறு திருத்தப்பட வேண்டுமென்பதாலும் ;

சட்ட வரைவில் குறிப்பிட்டுள்ளபடி அரசியலமைப்பைத் தக்கவாறு திருத்துவதற்குத் தேவையான சட்டமொன்றை இயற்றுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதென இம்மன்றம் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

4. மேலவை விதி 82-ன் படி அறிக்கை

உணவு தானியங்களின் விலை உயர்வு, பதுக்கல், கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க அரசின் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசின் நிதிக் கொள்கை, பண வீக்கம் ஆகியவைகளால் பொதுவாக நாட்டில் உணவு தானியங்களின் விலை ஏறியிருப்பதோடு அண்மையில் மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்த உணவுக் கொள்கை, உர விநியோக முறை ஆகியவைகளால் தமிழகத்திலும் உணவு தானியங்களின் விலை ஏறி அரிசி விலை உயரத் தொடங்கி யிருக்கிறது.

தமிழக அளவில் இந்த விலை உயர்வைத் தடுத்து நிறுத்தவும், பதுக்கல், கடத்தல் ஆகிய சமூக விரோதச் செயலில் ஈடுபடுவோர்மீது தக்க நடவடிக்கை எடுக்கவும் அரசு எடுத்துள்ள கீழ்க்கண்ட முடிவுகளை அறிவிக்கிறேன்.

உடனடியாக, தஞ்சை மாவட்டம் தவிர மற்ற எல்லா இடங்களிலும் லெவி 15 சதவிகிதமாகக் குறைக்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் லெவி 40 சதவிகிதமாகவே தொடர்ந்து இருக்கும். தஞ்சை மாவட்டம் மற்றும் எல்லையோரப் பகுதிகளான விளவன்கோடு வட்டம், கல்குளத்தில் 10 கிராமங்கள் ; கன்னியாகுமரி மாவட்டத்தின் இதர பகுதிகள் ; திருநெல்வேலி மாவட்டத்தி

1974 ஏப்ரல் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

ுள்ள அம்பாசமுத்திரம் மற்றும் செங்கோட்டை தென்காசி வட்டங்கள், மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையம் வட்டம், பெரிய குளம் கொடைக் கானல் வட்டங்கள்; கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி வட்டம்; கோவை அவிநாசி வட்டங்கள்; உடுமலைப்பேட்டை பல்லடம் ஆகிய வட்டங்கள்; நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டம் மற்றும் உதகை மாவட்டத்தில் மசினகுடி கிராமம் ஆகிய பகுதிகள் தவிர மாநிலம் முழுவதும் நெல், அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாடு உடனடியாக நீக்கப்படுகிறது.

எல்லையோரப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப் படுத்தவும், உணவுப் பொருள் கடத்தலைத் தடுக்கவும், உணவுப் புலனாய்வுத் துறை மற்றும் அந்தந்த வட்டங்களில் உள்ள காவல் துறையினர், ஊர்க்காவல் படையினர், சேரணிப் படையினர், இளைஞர் அணி ஆகியோர் பணியை அரசு உடனடியாகப் பயன் படுத்திக்கொள்ளும்.

கடத்தலையும், பதுக்கலையும் கண்டுபிடிக்கும் அரசு ஊழியர்கள், காவல் துறை அலுவலர்கள் உள்பட அனைவருக்கும் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி கைப்பற்றப் பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பில் 10 சதவிகி தம், கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசாக அளிக்கப்பட்டு வந்தது. இனிமேல் எல்லையோரப் பகுதிகளில் கடத்தலையும், பதுக்கலையும் செய்யும் நபர்களைக் கண்டுபிடிக்க அரசுக்குத் தகவல் கொடுத்து உதவி செய்யும் பொது மக்கள், அரசு ஊழியர்கள், ஊர்க்காவல் படையினர், சேரணித் தொண்டர்கள் இளைஞர் அணி ஆகியோருக்குக் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருளின் விலை மதிப்பில் 25 சதவிதம் வழங்கப்படும்.

அரசின் சார்பில் சமூக நலன் நாடி, சேவை செய்யும் தொண்டர்களுக்கு 'சமூக நலத் தொண்டன்' என்ற பதக்கமும் வழங்கப்படும்.

அரசினால் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரைவை செய்து வழங்கும் பொருட்டு தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்திற்கும், மத்திய உணவுக் கழகத்திற்கும் சொந்தமான நவீன அரிசி ஆலைகளுக்கு மின்வெட்டி லிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல் அரைவை முகவர்களுக்கும் (ஹல்லிங் ஏஜென்ட்ஸ்) அவரவர்களுடைய அரைவைத் திறனை முழுவதும் பயன்படுத்தி அரசுக்குச் சொந்தமான நெல்லை அரைப்பதற்காக இன்று முதல்

மின்வெட்டிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதைத் தவிர தனியார் கணக்கில் நெல் கொள்முதல் செய்து அரைவை செய்வதற்கு வசதியளித்து சந்தையில் போதுமான அளவு அரிசி மக்களுக்குக் கிடைக்கும் பொருட்டு மாநிலம் முழுவதிலுமுள்ள எல்லா அரிசி ஆலைகளுக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆணைகளுக்கு இணங்கி குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட அரைவை கூலிகளுக்கு ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டால், மின்வெட்டு 30 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்தோ அல்லது தலைச் சுமையாகவோ, வேறு வாகனங்களிலோ, உணவுக் கடத்தலில் ஈடுபடுவோர் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் மிக அத்தியாவசிமான இந்தப் பிரச்சினையில் தங்கள் சுயநலத்திற்காக சட்டத்தை ஏமாற்றத் துணியும் வியாபாரிகள், கடத்தல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இந்த உணவுப் பிரச்சினையில் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று எல்லாத் தரப்பினரையும் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, நல்ல சமயத்தில் அறிக்கை வெளியிட்டதை நான் வரவேற்கின்றேன். இதில் எழக்கூடிய சில முக்கியமான சந்தேகங்களை விளக்கும்படியாக முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் உணவுக் கடத்திலிலே ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். கொஞ்சம் விளக்கத்துடன் இந்த அறிக்கை இருக்குமானால், நான் வரவேற்றிருப்பேன். இது எல்லைப்புரத்தில் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படிக்கும்போதே குறிப்பிட்டிருக்கிறேன். 'எல்லையோரப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும், உணவுப் பொருள் கடத்தலைத் தடுக்கவும்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஸ்டேட்மென்ட்பேரில் 'டிஸ்கஷன்' இல்லை

திரு. கே. ராஜாராம்: விளக்கம்தான். சந்தேகத்தைக் கேட்க விதிகளிலே இடமிருக்கிறது. மதுரை போன்ற இடங்களிலிருந்து சென்னைக்கு சாப்பாட்டிற்காக அரிசி கொண்டு வருவதற்கெல்லாம் தடை இருக்காது என்று நான் நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலிருந்துகூட லெவியைக் கொடுத்து விட்டால், சென்னைக்குக் கொண்டுவர தடை இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, நியாயமான முறையிலே சாப்பாட்டிற்கு என்று அரிசி கொண்டுவரவேண்டும் என்றால், அங்கே நிலமிருக்க வேண்டும். ஆனால் வெளியிலே கொண்டு வருவதற்கு காரணங்கள் இருக்க வேண்டும். மற்றவிடங்களிலே வியாபாரத்திற்காகக் கொண்டுபோனால் 15 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திலிருந்து கொண்டுபோனால், 40 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும். அப்படி லெவி கொடுத்தவர்கள் கொண்டுவரலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சாதாரணமாக லெவி முறையை தஞ்சாவூர் மாவட்டத்திலே 40 சதவீதம் என்று ஆக்கியிருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் விற்பதைவிட மற்ற மாவட்டங்களில் ஒரு மூட்டை 25 ரூபாய் முதல் 30 வரையில் அதிகமாக விற்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே மறுபடியும் 40 சதவீதம் லெவி என்று கொண்டுவந்தால், தஞ்சை மாவட்டக்காரர்களுக்கு நெல் விலை 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை குறைந்து, கோயம்புத்தூர், சேலம் மாவட்டக்காரர்களுக்கு நெல் விலை அதிகம் விற்கும் என்ற நிலைமை ஏற்படும். ஆகவே தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் அந்த மாதிரி நிலைமை உருவாவதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இப்பொழுது எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு நான் முழுமனதாக ஆதரவு தரக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும்கூட, பார்டர் ஏரியாக்களிலிருந்து வேறு மாநிலங்களுக்குப் போகாமல் தடைசெய்ய முடியுமென்றால், மாநில அளவில் எல்லாவிடங்களிலேயும் இந்த லெவியை எடுத்து விட்டால், விலை குறையக்கூடிய நிலை எல்லா இடத்திலேயும் ஏற்படும் என்பதை அரசுக்குச் சொல்லிக்கொண்டு, அந்த விளக்கத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அநேகமாக சிறிய விவசாயிகள் எல்லாம் அவர்களிடம் உள்ள நெல்லைக் கொடுத்துவிட்டார்கள் என்றே இந்த அரசு அறிகிறது,

உணவு தானியங்களின் விலை உயர்வு, பதுக்கல், கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க அரசின் நடவடிக்கைகள் குறித்து

[1974 ஏப்ரல் 23

பெரிய விவசாயிகள், பெரிய வியாபாரிகள் நிறையத் தேக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே 40 சதவீதம் லெவி போட்டால்தான் நாம் அதிலே எவ்வளவு வாங்க முடியுமோ, அவ்வளவை வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காகத்தான் 40 சதவீதம் போடப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பிரயாணிகள் சில சமயம் . ..

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, தலைவரின் இசைவினைப் பெற்று, அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிடலாம் ; ஆனால் அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித வினாவும் எழுப்பப்படலாகாது. அவையில் எழுப்பப்படும் எல்லா ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றியும் தலைவர் முடிவு செய்ய வேண்டும்; அவரது முடிவே இறுதியானதாகும். (குறுக்கீடு). அப்படியா, சரி.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, பிரயாணிகள் சில சமயம் வெளியூர்களுக்குச் செல்லும்போது சாப்பாட்டிற்கு அரிசி எடுத்துக் கொண்டு போகிறார்கள். அதற்கு பர்மிட் இருக்கிறது. பர்மிட் எதுவுமே இல்லாமல் அரை மூட்டை அல்லது கால் மூட்டை என்ற அளவிலே சில ஊர்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அப்படி அனுமதி—பர்மிட்—இல்லாமல் எவ்வளவு அரிசி எடுத்துச்செல்ல ஒரு மனிதனுக்கு அனுமதி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிரயாணிகள் பிரயாணிக்காக அரிசி கொண்டுபோனால், அதிலே எந்தத் தடையும் கிடையாது. அதை ஒரு கடத்தல் என்கின்ற அளவிலே தங்களுடைய சாப்பாட்டிற்காக என்று எடுத்துச் செல்வார்களேயானால், அவற்றைத் தடுப்பதற்காக இன்றைக்கு இங்கே குறிப்பிடப்பட்ட காவலர்கள், சேரணியினர், ஊர்க்காவல் படையினர், பொதுமக்கள் அத்தனை பேருக்கும் உரிமை இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, சாப்பாட்டிற்காக எவ்வளவு அரிசி எடுத்துக்கொண்டு போக அனுமதிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி தேவையில்லை. ஆனால் சாப்பாட்டிற்கு என்று கடத்தல் செய்து, 4 மூட்டை எடுத்துக்கொண்டு போய் அகப்பட்டிருக்கிறார்கள். சாப்பாட்டிற்கு என்று சில பேர் பாட்டில்களில் போட்டுக்கொண்டு போகிறார்கள். பொம்மைக்குள் வைத்துக்கொண்டு போகிறார்கள். நேற்றைய முன்தினம்கூட

பிடிக்கப்பட்டிருக்கிறது. லாரியின் சைலன்சருக்குக் கீழே வைத்துக்கொண்டு போகிறார்கள். நம்முடைய நண்பர் தஞ்சாவூர் மாவட்டத்து விவசாயிகளைச் கஷ்டப்படுத்துகிறமாதிரி சொன்னார்கள். அப்படி அல்ல. முதலிலே அங்கே 50 சதவீதம் போட்டிருந்தோம். இப்பொழுது 40 சதவீதம் லெவி போட்டிருக்கிறோம். ஆனால் மற்ற மாவட்டங்களுக்கும் போடாமல் இல்லை. மற்ற மாவட்டங்களுக்கு 15 சதவீதம் போட்டிருக்கிறோம். நம்முடைய தஞ்சை மாவட்டத்திலே 5½ லட்சம் ஏக்கர் இருபோக சாகுபடி செய்து அதிகமாக நெல் இருக்கிறது. எனவே 50 சதவீதத்தை 40 சதவீதம் என்று செய்து, 25 சதவீதம் என்று இருந்த லெவியை 15 சதவீதம் என்று செய்திருக்கிறோம். ஆகவே தஞ்சாவூர் மாவட்டத்திலே எனக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், இதற்காகத்தான் 40 சதவீதம் தஞ்சை மாவட்டத்தில் லெவி போடுகிறோம். அங்கே சாதாரண விவசாயிகள் எல்லாம் விற்றுவிட்டார்கள். இப்பொழுது வியாபாரம் செய்வதற்கு என்றே ஒரு சிலர் வாங்கி வைத்திருக்கிறார்கள். பெரும் மிராசுதார்கள் இந்தப் பகுதியிலேதான் இருக்கிறார்கள். அதே நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற 100 க்கு 70 பேர் வாங்கித் தின்பவர்கள். அதையும் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மறந்து விடக்கூடாது. அவர்களுக்கும் விலையை சேலத்தில் இருப்பதைப்போல் ஏற்றிவிட்டால், இங்கேயும் வாங்கித் தின்கிற மக்களுக்கு சேலத்திலே இருக்கிற அதிகவிலை வந்துவிடும். ஆகவே உற்பத்திசெய்கிற மக்களுக்கு கூடியவரைக்கும் அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 'பார்டர் ஏரியாஸ்' என்று சொல்லப்படுகிற பகுதிகளில் 'ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ்' என்று நாம் போடுகிறோம் என்கிறார்கள். அதிலே இருக்கின்றவர்களில் 75 சதவிகிதம் பேர் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பக்கங்களிலே இருக்கிற காரணத்தாலே, அரிசிக் கடத்தலைத் தடுக்க வேண்டும் என்று முழு மனதுடன் ஈடுபடவில்லை என்ற கருத்தும் நிலவிவருகிறது. நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் இருக்கிற நிலையை அரசினர் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எல்லாவற்றிலும் அப்படியே செய்யப்படும்.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1974)

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I beg to move—

"That this House concurs with the Legislative Assembly in setting up a Joint Select Committee of both Houses consisting of 30 Members (20 Members from the Legislative Assembly and 10 Members from the Legislative Council) to consider the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru S.A. Rajamanickam
2. Thiru C.V. Rajagopal
3. Thiru Era. Sambasivam
4. Thiru H. L. Murugesan
5. Thiru Dravidamani
6. Thiru K. Rajaram
7. Thiru S.C. Sengottuvelappa Goundar
8. Thiru G. Swaminathan
9. Thiru M.M. Bakkar
10. Thiru Ku. Ma. Balasubramaniam ".

Under the existing law, it has not been possible to give adequate protection to the handloom weavers from competition from power-looms and composite mills and also to ensure adequate supply of yarn to the weavers at reasonable prices. It has, therefore, become necessary to empower the State Government to control the production, distribution and sale of yarn and reserve certain varieties of cloth exclusively for the handlooms in order to protect the handloom industry. The provisions of the Cotton Textiles (Control) Order, 1948, continued in force under the Essential Commodities Act, 1955 have been found to be inadequate to achieve the above objects.

The Bill seeks to achieve the above objects. I request the House, Sir, to accept the motion.

1974 ஏப்ரல் 23] [திரு. செ. மாதவன்]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன் வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் 10) கூட்டு ஆய்வுக்குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இந்த அவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு மேலவையின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. சி. வி. ராஜகோபால்
3. திரு. இரா. சாம்பசிவம்
4. திரு. எச். எல். முருகேசன்
5. திரு. திராவிடமணி
6. திரு. கே. ராஜாராம்
7. திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்
8. திரு. ஜி. சுவாமிநாதன்
9. திரு. எம். எம். பக்கர்
10. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்"

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப இருப்பதால், அதிகம் பேச விரும்பவில்லை. இரண்டொரு சந்தேகங்களைமட்டும் சொல்ல விரும்புகிறேன். பொறுக்குக் குழுவில் நானும் அங்கத்தினனாக இருப்பதால், மற்ற விஷயங்களையெல்லாம் அங்கேயே பேசிக்கொள்ளலாம். ஒரு அடிப்படை விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவை நாம் சட்டமாக்கிவிட்டால், விசைத்தறியில் வேஷ்டிகள், சேலைகள் முதலியவை உற்பத்தியாவதைத் தடை

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செய்து, அவற்றைக் கைத்தறிக்கே ஒதுக்கிவிடுகின்றோம். ஆனால் மகாராஷ்டிரம் போன்ற மற்ற மாநிலங்களிலிருந்து விசைத் தறிகளிலோ அல்லது காம்போசிட் மில்களிலோ உற்பத்தியாகும் சேலைகள், வேட்டிகள், துணிகள் எல்லாம் நமது மாநிலத்திற்குள் வாராமல் தடுக்க வழி இருக்கிறதா ? அதற்கு ஏற்பாடு செய்ய நமக்கு சட்டத்தில் இடமிருக்கிறதா ? மத்திய சர்க்கார் நமக்கு ஒத்துழைப்புத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நாம் நிறைவேற்றும் இந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்த, எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தை நிறைவேற்று கிறோமோ அது பூர்த்தியடைய வேண்டும். நாம் சட்டம் செய்து விசைத்தறிகள் அல்லது மில்களில் எந்த சாக்குகள் உற்பத்தி செய்யக்கூடாது என்று தடுக்கிறோமோ, அதை அடுத்த மாநிலங்களில் உற்பத்தி செய்து சர்க்கை இங்கே குவித்தால் நேர்மாறான ஒரு நிலைமை இங்கே ஏற்படும். ஆகவே அதற்கெல்லாம் சரியான பாதுகாப்பு அரசு ஏற்பாடு செய்கிறதா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்வது தான் நம்முடைய நோக்கமும். 1952-லே இதைப் போலவே நாம் ஒரு தீர்மானத்தை அனுப்பிய நேரத்திலே, மத்திய அரசு ஒரு உத்தரவினைப்போட்டு, எந்தெந்த மாநில அரசுகள் விரும்புகின்றனவோ அங்கெல்லாம் இந்த இந்த ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அதை யாரும் அமுல்படுத்தவில்லை. ஆனால் எந்த மாநில அரசாவது அப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருந்தால், அதற்கான முயற்சிகளைச் செய்திருந்தால், அதன் காரணமாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல ஒரு நிலை ஏற்பட்டால், என்னவாகும்? சிந்திக்க வேண்டிய விஷயம். நமது நாட்டிலே விசைத் தறி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அடுத்த மாநில விசைத் தறிச் சரக்குகளை இங்கே விற்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால், போதுமான பாதுகாப்பு இல்லாது போய்விடும் என்பதால், இந்தக் கொள்கையை இந்திய சர்க்கார் ஏற்று சட்டமாகப் போட்டவுடன் இந்தச் சட்டத்திற்கு விரோதமாக எந்தத் துணி நெய்யப்பட்டாலும் அது இங்கே விற்கப்படக்கூடாது என்பதுதான் நம் நோக்கம். மத்திய அரசு ஒரு குழுவினை நியமித்திருக்கின்றது. அந்தக் குழுவிடம் இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக் கின்றது. மத்திய அரசு கொள்கை அளவில் இதை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்.

அவர்களுடைய உத்தரவு நம் நோக்கத்தை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டதாக இருக்கின்றது. மத்திய அரசு அதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும், அதை அமுல்படுத்த மறுக்கின்றார்கள் அல்லது அச்சப்படுகின்றார்கள். மத்திய அரசை நாம் கேட்பது, இது போலுள்ள சட்டங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டு அகில இந்திய ரீதியாக, சட்ட ரீதியாக அமுல்படுத்த வேண்டும், இல்லை யென்றால் எங்கள் மாநிலங்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்து விடுங்கள் என்பதுதான். இந்த மசோதாவினை மத்திய சர்க்கார் ஏற்று அதற்கு அனுமதி கொடுக்குமா கொடுக்காதா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அவர்கள் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டதை சட்ட ரீதியாக ஒப்புக்கொள்ளவும் நினைக்கின்றார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. யாருக்காவது பயந்து அவர்கள் மறுப்பார்களானால், நமது மாநிலத்திற்காவது அந்த உரிமையைக் கொடுங்கள் என்பதுதான் நம் கோரிக்கை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன்உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்வு செய்யும்பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 10) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இந்த அவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு, மேலவையின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. சி. வி. இராஜகோபால்
3. திரு. இரா. சாம்பசிவம்
4. திரு. எச். எல். முருகேசன்
5. திரு. திராவிடமணி
6. திரு. கே. ராஜாராம்
7. திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்
8. திரு. ஜி. சுவாமிநாதன்
9. திரு. எம். எம். பக்கர்
10. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(2) தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனே வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/1974.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனே வரி (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று நான் முன்மொழிகிறேன்.

சிறு வணிகர்களுக்குச் சலுகை அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனே வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 3 (1), 7-ஏ (1) பிரிவுகளின் கீழ் வரி செலுத்துவதினின்றும் விலக்களிப்பதற்கான ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பை ரூ. 25,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்தது. அதற்கு நிகராக, வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்களிப்பதற்கான மொத்த வியாபாரத் தொகையின் வரம்பை ரூ. 15,000 லிருந்து ரூ. 30,000 ஆக உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. ரூ. 50,000-க்குக் குறையாமலும் ஆனல் ரூ. 55,000-க்குக் குறைவாகவும் மொத்த வியாபாரத் தொகை உடைய வணிகர் ஒருவருக்கான வரி இணக்க வீதத்தையும் வரி விதிப்பு வீதத்தையும் ரூ. 876 லிருந்து ரூ. 840 ஆகக் குறைக்கவும் அரசு முடிவு செய்தது. அப்போதுதான் வரி இணக்க வீதத்தின் ஏதாவது இரண்டு நிலைகளுக்கிடையே உள்ள வேறுபாடு ரூ. 240 ஆக இருக்கும்.

வரி செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்ட ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பு ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், ரூ. 35,000-க்கு மேபடாத மொத்த வியாபாரத் தொகை உள்ள சில வகை வணிகர்களுக்கு வரி செலுத்துவதினின்றும் விலக்களித்து மேற்சொன்ன சட்டத்தின் 3 (1) பிரிவின் வரம்பு நிபந்தனையைச் சேர்ந்த (ii) உட்பகுதியில் உள்ள விதித் துறையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டியது அவசியமில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

கையால் தயாரிக்கப்படும் சோப்புகளுக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கினை அரசு அண்மையில் நீக்கியுள்ளது. இப்பொருளுக்கு 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதியிலிருந்து 2 சதவீத குறைந்த வீதத்தில் பலமுனை வரி

@ 134–142 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விதிக்கப்பட்டுள்ளது. முதலாவது விவர அட்டவணையில் 37-வது இனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வகை சோப்புகளும் ஒரு முனை வரி விதிக்கப் படுவதற்குட்பட்டதாகும். குறிப்பாக, கையால் தயாரிக்கப்படும் சோப்பு களுக்கு 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி முதல் இந்த இனத் திலிருந்து விலக்களிக்கும் வகையில் மேற்படி இனம் திருத்தப்பட்டு உள்ளது.

வணிக வரிகள் குறித்த சட்டங்களையும் விதிகளையும் சீரமைப்பதற்கும் எளிதாக்குவதற்கும் சிறப்புப்பணியில் நியமிக்கப்பட்ட அதிகாரி தெரிவித்த பரிந்துரையின் அடிப்படையில் மேலும் 59 பொருட்கள் 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி முதல் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையின் போது முதலமைச்சர் இதை அறிவித்தார்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையைச் சேர்ந்த 70 (ஏ) 70 (பி) இனங்களின் கீழ் வரும் எல்லா வகை வெளிநாட்டு மது, வெறியம் சேர்ந்த மது ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி வீதத்தை முறையே 24 சதவீதத்திலிருந்தும் 12 சதவீதத் திலிருந்தும் 25 சதவீதமாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ் 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் தேதி அன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதன் மூலம் இம்முடிவுகள் அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4 ஆம் தேதி அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பெரும்பாலான பொருள் விளக்கங்கள் அப்படியே சட்ட வரைவில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடும் நோக்கத்திற்காக கீழ்க்காணும் இனங்கள் குறித்து சரக்குகள் பற்றிய பொருள் விளக்கத்தைப் பொறுத்த மட்டில் சில சொற்ப மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அவையாவன :—

ஆயத்த ஆடைகள் : மேற்படி அறிவிப்பில், ஆயத்த உடைகள் அனைத்தையும் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்புக்கு மாற்றக் கருதப்பட்டது. ஆனால், இப்போது இந்தச் சட்ட வரைவில், குறிப்பிட்ட தயாரிப்புப் பெயரின் கீழ், விற்பனை செய்யப்படும் ஆயத்த உடைகளுக்கு மட்டுமே ஒருமுனை வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. தயாரிப்புப்

[திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா] [1974 எப்ரல் 23

பெயர் எதுவுமில்லாத ஆயத்த உடைகள் தொடர்ந்து பல முனை வரி விதிப்புக் குட்பட்டதாகும். அது போலவே பாக்கு, சீவல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், வாசனைப் பாக்குத் தூளுக்கு உயர்ந்த வீதத்தில் வரி விதிக்கப் படலாமென கருதப்பட்டது. அவ்வாறே பாக்கு, வெற்றிலைப் பாக்கு, சீவல் ஆகியவற்றிற்கு 5 சதவீத வரியும், வாசனைப் பாக்குத் தூளுக்கு 7 சதவீத வரியும் விதிப்பதென்று தற்போது கருதப்பட்டுள்ளது.

பிரெஞ்சு காப்பியைப் பொறுத்த வரையில், காப்பி தயாரிப்பதற்குப் பயன் படும் காப்பிப் பொடியும், சிக்கரித் தூளும் சேர்ந்ததாகும். இந்த இரண்டு பொருள்களுக்கு வரியை 5½ சதவீதமாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில், மிட்டாய் பொருட்களும், ரொட்டிப் பொருட்களும் ஒரு முனை வரிக்கு உள்ளாக்கப்பட்டது. இவற்றை முன்பிருந்தது போலவே பல முனை வரி விதிப்புக்கு மாற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான் ரொட்டி, பன் ரொட்டி தயாரிக்கும் சிறு வியாபாரிகள் ரூ. 50,000-ஆக உயர்த் தப்படவிருக்கும் வரி விலக்கு சலுகையை முழுமையாக ஏற்க இயலும்.

சரக்குகள் விவரம் குறித்தும் ஒரு சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன சட்டத்தின் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதல் வரம்பு நிபந்தனையின் கீழ் மேற்சொன்ன அறிவிப்பிற்குப் பதிலாக சட்ட வரைவு ஒன்று தற்போதைய சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட வேண்டும்.

1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி முதல் பலமுனை வரி விதிப்பி லிருந்து ஒருமுனை வரி விதிப்பின்கீழ் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள 59 பொருள்களைப் பொறுத்த வரை, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 60-வது பிரிவில் உள்ள விதித் துறையைப் போலவே தற்காலிக விதித் துறை ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி அன்று அல்லது அதற்குப் பின்னர் விற்பனை செய்யப் பட்ட அல்லது வாங்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் இத்திருத்தச் சட்டத்தின் நோக்களுக்காக முதல் தடவை விற்பனை செய்யப்பட்டதாக அல்லது வாங்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்பதே இதன் நோக்க மாகும்.

மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட வரைவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/74) கொண்டு வரப்பட்டு பரிசீலனைக்காக அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இப் பிரேரணையை இம் மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை---

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, விற்பனை வரி விஷயத்தில் ஒரு நல்ல மாறுதலை இந்த மசோதா கொண்டுவந்திருக்கிறது. நல்ல மாறுதல் என்ற அர்த்தபுஷ்டியுள்ள வார்த்தையைப் போட்டுச் சொல்கிறேன் என்றால், அதற்குக் காரணமுண்டு. பொதுவாக எதிர்க் கட்சி என்ற முறையில் வரியை அதிகரிப்பது என்றால், நாம் ஆதரிப்பதற்கு முன்பு மூன்று, நான்கு முறை சிந்திப்போம். ஆனால் இது வரியைக் கூட்டுவதற்காக வந்துள்ள மசோதா அல்ல. விற்பனை வரி வசூலிப்பதை 'ரேஷனலைஸ்' செய்து, அதிலே பல விதமான சிக்கல்கள் இருந்து வந்ததை மாற்றி, பல கட்டங்களில் வசூலித்து வந்ததை ஒரு முனையில் வசூலிப்பதற்கு வழி செய்திருக்கிறது. வியாபாரிகளின் சங்கங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஒரு முனை விற்பனை வரி முறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது ஒரு நல்ல காரியம்.

நான் இது சம்பந்தமாக ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடந்த விவாதத்தின்போதுகூட அதைப் பற்றிச் சொன்னார்கள். அதை மீண்டும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கையால் செய்யப்படுகின்ற சோப்புகளுக்கு விற்பனை வரி கிடையாது. அது ஒரு குடிசைத் தொழில், அதற்கு விற்பனை வரி போடுவது கிடையாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருத்துக்கு ஒரு விளக்கம் இப்பொழுதே சொல்லி விடுவது நல்லது என்று கருதி அதைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே நம்முடைய அரசு ஒரு முனை விற்பனை வரி கிடையாது என்று முடிவு செய்து இப்பொழுது பல முனை விற்பனை வரி என்று தீர்மானிக்கும்போது, ரூ. 50,000 வரை டர்ன்ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு விற்பனை வரி இல்லை என்று முடிவு செய்தது. ஒரு முனை விற்பனை வரி என்று இருந்தால், ஒரு கட்டத்தில் கட்டாயமாக வரி வசூலாகிவிடும். பல முனை விற்பனை வரி என்றால், ரூ. 50,000

வரை டர்ன்ஓவர் உள்ளவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே தான் நாங்கள் அந்த முடிவு எடுத்தபோது, இந்த விதி விலக்கு ஏற்பாடு செய்தோம் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, கையினால் செய்யப்பட்ட சோப்பு வகைகள் என்று சொல்லும்போது மர செக்குகள், கல் செக்குகள் இவைகளில் ஆட்டப்படும் எண்ணெய்களுக்கும் இதுவரையில் வரி கிடையாது, இப்பொழுதும் கிடையாது என்பதைப் பார்க்க வேண்டும். அதே மாதிரிதான் கையால் செய்யப்படும் சோப்புகளுக்கும் இருந்தது. அதை புதியதாக ஒருமுனை விற்பனை வரியில் சேர்த்தபோது, நான் முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறினேன். இப்பொழுது அது மாற்றப்பட்டு பலமுனை விற்பனை வரியில் சேர்த்து இரண்டு சதவீதம் வரி என்று போடப்பட்டிருக் கிறது. ரூபாய் 50,000 வரை வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்று சொல்லும்போது, ஒன்றைப் பார்க்க வேண்டும். கையால் சோப்பு தயாரிக்கின்றவர்கள் 50,000 ரூபாய்க்கு சோப்புகள் தயாரிக்க மாட்டார்கள். அவர்களிடமிருந்து வாங்கி விற்கும் கடைகளுக்கு இரண்டு சதவீதம் விற்பனை வரி போடப்படும். அப்படிப் பார்க்கின்றபோது, இயந்திரங்களினால் செய்யப் படுகின்ற சோப்புகளுடன் இந்த சோப்பு வகைகள் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டு இந்தத் தொழிலே நசித்துப் போகும் நிலைமை ஏற்பட்டு விடுமென்று நான் அஞ்சுகிறேன். அந்த நிலைமைக்கு இந்தத் தொழில் போய் விடக்கூடாது. ஒரு மூன்று, நான்கு பேர் சேர்ந்து நடத்தும் ஒரு சிறு கைத் தொழில் இது. அந்தத் தொழிலுக்கு ஊறு ஏற்பட்டுவிடுமென்று கருதுகிறேன். ஆகவே அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு மீண்டும் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். 50,000 ரூபாய் வரையில் உற்பத்தியாளர்களாக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும், அவர்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. 50,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களை சிறு வியாபாரிகள் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த முடிவிலேதான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர் களுடைய கருத்துக்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய பிறகுதான், ஒரு முனை விற்பனை வரியிலிருந்து பல முனை விற்பனை வரியாகப் போட்டு, 50,000 ரூபாய் வரையில் டர்ன்ஓவர் உள்ளவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் விற்பனை உள்ளவர்களுக்கு வரி

விதிப்பதில் தவறு இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். இதிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு முதலமைச்சர் அவர்களால் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள் கிறேன். கையால் செய்யப்பட்ட சோப்பு வகைகள் என்று சொல்லிக்கொண்டு, பிராண்ட் நேம் எல்லாம் போட்டுக்கொண்டு பெரிய வியாபாரம் செய்கின்றவர் களுக்கு வரி விதிக்காமல் விட்டுவிட முடியாது என்ற நிலைமையில்தான், இப்பொழுது இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பொதுவாக இந்த மசோதாவை வரவேற்றதற்கு நன்றி தெரிவித்து, இந்த அவை அதை நிறை வேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை —

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/74) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/74) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த—பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74.)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, " சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த--பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74), ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

சமுதாய நலத் திட்டத்திற்கான மானியக் கோரிக்கை மீது சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நகராட்சிகளுக்கான தேர்தல்கள், மதுரை மாநகராட்சி உட்பட, ஜூலைத் திங்கள் கடைசி வாரத்தில் நடைபெறும் என்று அறிவித்தேன். தற்போது நகர மன்ற உறுப்பினர்கள் பதவிக் கால அளவு, 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த—பதவிக்கால நீட்டிப்பு) சட்டத்தின் மூலம் (தமிழ் நாடு சட்டம் 22/71) 1974-ம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் வரைதான் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், சில நகரமன்றங்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும், தொகுதி பிரிப்பதை மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவற்றைப் பரிசீலனை செய்வதற்கும் சிறிது காலம் தேவைப்படுகிறது. எனவே நகர மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 1974-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ம் தேதி வரை நீட்டிப்பதற்கு இம்மன்றத்தின் முன்பு உள்ள இச் சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

பேரவையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்ட முன்வடிவினை இம்மன்றமும் எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 .ஆம் .ஆண்டு, சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 142 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 எப்ரல் 23] [மேலவைத் தலைவர்]

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1974 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1974.)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்தம்—பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 143 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974)

[திரு. அ. பெ. தருமலிங்கம்] [1974 ஏப்ரல் 23

சமுதாய நலத் திட்டத்திற்கான மானிய கோரிக்கை மீது சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் நகராட்சிகளுக்கான தேர்தல்கள், மதுரை மாநகராட்சி உட்பட, ஜூலைத் திங்கள் கடைசி வாரத்தில் நடைபெறும் என அறிவித்தேன். தற்போது மதுரை மாநகராட்சி உறுப் பினர்களின் பதவிக்கால அளவு 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்தம்—பதவிக்கால நீட்டிப்பு) சட்டத்தின் மூலம் (தமிழ் நாடு சட்டம் 1/1972) 1974-ம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் வரைதான் நீட்டிக்கப்பட்டுள்ள தென்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். மதுரை மாநகரத்தை 60 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும் அரசின் கருத்துருவை மாநகராட்சியின் பரிந் துரைக்காக அரசு அனுப்பியுள்ளது. மாநகராட்சியின் பரிந்துரை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 1974-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ம் தேதி வரை நீட்டிப்பது அவசிய மாகிறது. இதற்கு இம்மன்றத்தின் முன்பு உள்ள இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

பேரவையில் நிறைவேறிய இச்சட்ட முன்வடிவினை இம்மன்றமும் எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 116 ஆவது பிரிவு, இச்சட்டத்தின் செயல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளை இயற்றும் அதிகாரத்தை அரசுக்கு அளிக்கிறது. மேற்சொன்ன பிரிவின் (2) உட்பிரிவு, அரசு விதிகள் இயற்ற வேண்டிய குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த நேர்வுகளைக் குறிப்பிடுகிறது. சமய நிறுவனங்களில் காணிக்கைகளாகச் செலுத்தப்படும் முடி, ஏனைய பொருட்கள் உட்பட இயங்கும் சொத்துக்கள் (அரசு வணிகக் கழகம் உட்பட) எந்த நபர்களுக்கு எந்த முறையில், எந்த நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு சமய நிறுவனங்களால் விற்பனை செய்யப்படலாம் அல்லது வேறு வகையில் ஒரு வகை செய்யப்படலாம் என்பது குறித்து விதிகளில் வகை செய்வது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

@ 143–144 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 21/74).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து-சமய அறக்கட்டளைகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/74) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

@ 144 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 23] [திரு. மு. கண்ணப்பன்]

சம்பந்தப்பட்ட சமய நிறுவனங்களின் அறங்காவலர்கள் அந்த நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதற்காக அவற்றைக் கொணர வேண்டுமென்று தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 87 ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவு வகை செய்கிறது. ஆயினும், கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு கொண்டு வந்து காட்டுவதற்கு கால வரையறை எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

கணக்குகளைக் கொண்டு வந்து காண்பிப்பதற்கு சட்டப்படி காலவரையறை எதுவும் நிச்சயிக்கப்படாததை ஒரு சில அறங்காவலர்கள் பயன்படுத்திக் கொண்டு கணக்குகளைக் கொண்டு வந்து காட்டக் காலதாமதம் செய்யலாம் அல்லது கொண்டு வந்து காட்டாமல் ஏய்க்கலாம் என்றும், எனவே கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காகக் கொண்டு வந்து காட்டுவதற்கு காலவரையறை நிச்சயிப்பது மிகவும் அவசியம் என்றும் கருதப்படுகிறது. எனவே, கணக்குகள், பதிவேடுகள் முதலியவற்றை தணிக்கைக்காக தணிக்கையாளர்களுக்குச் சமய நிறுவனத்தின் அறங்காவலர்கள் அனுப்புவதற்கான கால வரையறையை நிச்சயிப்பதற்காக விதிகள் இயற்ற அதிகாரம் மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி சட்டத்தின் 87 ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன்உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து-சமய அறக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந் தலைப்பு, முகப்புரை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து-சமய அறக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு என் 21/74) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன்உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 21/74) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(7) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/74)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு (மாற்றப்பட்ட பகுதி) 1959-ம் ஆண்டு இணைக்கப்பட்ட, இணைக் கப்படாத தேவஸ்வங்கள் சட்டத்தினையொட்டி (தமிழ் நாடு சட்டம் 30/1959) மாற்றப்பட்ட பகுதியிலுள்ள, அதாவது, திருநெல்வேலி மாவட்டத்தின் செங் கோட்டை வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள இணைக்கப் பட்ட, இணைக்கப்படாத வேதஸ்வங்களையும், அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றையும் நிர்வகிக்க, மேற்பார்வையிட அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்காக மாநிலங்கள் சீரமைக்கப்பட்ட பின்னர், கன்னியாகுமரி தேவஸ்வக் குழு அமைக்கப்பட்டது. மாற்றப்பட்ட பகுதிகளில் 458 இணைக்

@ 145-170 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கப்பட்ட தேவஸ்வங்களும், 32 இணைக்கப்படாத தேவஸ்வங்களும் உள்ளன. தேவஸ்வக்குழுவின் உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இல்லை என்று இந்து சமய அறநிலைய ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதன் விளைவாக, தேவஸ்வங்களின் நிர்வாகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மாற்றப்பட்ட பகுதியிலுள்ள தேவஸ்வங்களையும், அவற்றின் சொத்துக்களையும் நிதிகளையும் நிர்வகிப்பதற்காக 5 பேருக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிப்பதற்கான ஏற்பாட்டுடன், தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 22/1959) மாற்றப்பட்ட பகுதிக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

36-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுடன் ஏழையாக உள்ள, போதிய பண வசதியற்ற இந்துக்களுக்கு திருமணங்கள் நடத்துவதற்காகவும், சமய நிறுவனங்களின் உபரி நிதிகளிலிருந்து நிதி ஒதுக்கம் செய்வதற்கு சட்டத்தில் விதித்துறை செய்யக் கருதப்பட்டுள்ளது.

மடங்களின் நிர்வாகத்தின் கீழுள்ள கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கவும் அரசு முடிவு எடுத்துள்ளது. அந்த நிர்வாக அதிகாரிகள் மடங்களைச் சேர்ந்த அறங்காவலர்களின் நிர்வாகத்தின் கீழ்ப் பணியாற்றுவர்.

மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்ட வரைவினை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, தமிழ் நாடு அற நிலையச் சட்டம், கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்து 17 ஆண்டுகளுக்குப் பிறகு அங்கே நீட்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதியிலிருந்து வருகிறவன் என்ற நிலையில் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இச்சட்டம் நீண்ட நாட்களுக்கு முன்பே அங்கே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ஆனால் கன்னியாகுமரி மாவட்டம்,

[திரு. எம். சங்கரலிங்கம்] [1974 ஏப்ரல் 23

செங்கோட்டை தாலுகா தமிழ் நாட்டோடு இணைகிறபோது, மத்திய அரசு பாராளுமன்றத்தில் ராஜ்யப் புனரமைப்புச் சட்ட விதியில் அந்தப் பகுதியி லுள்ள அற நிலைய கோவில்களெல்லாம் தனியாக தேவஸ்வம் போர்டில் இருக்க வேண்டுமென்ற விதியைச் செய்தது. அது ஆட்டானமல் போர்டாகச் செயல் பட்டது. இப்படி 3 தேவஸ்வம் போர்டுகள் செயல்பட்ட பிறகும், எதிர்பார்க் கிற அளவிற்கு இத்துறையில் நன்மைகள் வளரவில்லை என்றுகண்டு, இந்தப் பகுதியிலுள்ள அற நிலையங்களில் ஏற்படுகிற மாற்றங்கள் அங்கே வரவேண்டு மென்று நாங்களெல்லாரும், அற நிலைய அமைச்சர் அவர்களிடமும், முதல மைச்சரவர்களிடமும் எடுத்துக் கூறியதன் பலனை இச் சட்ட முன்வடிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். அங்கேயிருக்கிற ஒரு சூழ்நிலையை இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமையாகும். இங்கேயெல்லாம் கோவில் களுக்கு நிறையச் சொத்துக்கள் இருக்கின்றன. தனியார்களிடமுள்ளதை எடுத்து அவைகளின் வருவாயை நாம் அதிகப்படுத்திக்கொண்டு வருகிறோம். ஆனல் அங்கேயிருக்கிற கோவில்களுக்குச் சொத்துக்களே இல்லை. 500-க்கு மேற்பட்ட கோவில்கள் அங்கே இருக்கின்றன என்று சொல்லப்பட்டது. அந்தக் கோவில்களின் சொத்துக்கள், மகாராஜா ஆட்சியின் காலத்திலேயே வெள்ளைக் கார திவான் இருக்கிறபோது, அந்தச் சொத்துக்களை யார் யார் கையில் வைத் திருந்தார்களோ அவர்களைச் சேர்ந்தது என்று சட்டம் கொண்டுவரப்பட்டு, அந்தச் சொத்துக்கள் தனியார் கைக்குப் போய்விட்டன. அரசியல் அமைப் புச் சட்டப்படியும், 1959-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படியும் 13 லட்ச ரூபாய் அரசாங்கத்திடமிருந்தும், 7 லட்ச ரூபாய் சொத்துக்கள் வழியாகவும், ஆக 20 லட்ச ரூபாய் கிடைக்கிறது. இதில் 500 கோவில்கள் நிர்வகிக்கப்பட்டு வரு கின்றன. இந்த 500 கோவில்களில் 60 மேஜர் கோவில்கள் இருக்கின்றன.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏறக்குறைய 300 மைனர் கோவில்கள் இருக்கின்றன. ஏறக்குறைய பெட்டி டெம்பில்ஸ் என்று சொல்லக் கூடிய 200 சிறு கோவில்கள் இருக்கின்றன. இப்படி உள்ள நிலையில் தனித் தனியாக கோவில்களுக்கு அறங்காவலர்களைப் போட முடியாது. அதற்கு வருமானம் கிடையாது. ' எல்லா வருமானத்தை யும் கொண்டு கோவில்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விகிதம் செய்து பார்த்தால், குறைவாக இருக்கிறது. இந்த வருவாயைக் கூட்டுவதற்கு என் னென்ன செய்ய முடியும் என்று ஆராய்ந்தால், இந்தக் கோவில்களைத் திறம்பட நிர்வாகம் செய்ய முடியும். இன்றைக்கு கோவில்களின் சொத்துக்களெல்லாம் மிகக் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கும், குத்தகைக்கும் விடப்பட்டிருக்

கின்றன. திருவட்டாரில் 100 ஏக்கர் எஸ்டேட்டை, அற நிலையத்திற்குச் சொந்தமானதை, ஒரு வெள்ளைக்காரருக்கு மிகப் பழங்காலத்தில் டெனன்சி மாதிரி ஆயிரம் ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில் 50 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வருவாயை அதிகப்படுத்திக்கொள்ள முடியும். அது போலவே மாவட்டத்திற்கு வெளியே செங்கோட்டை மலைப் பகுதிகளிலும் ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் இருக்கின்றன. அவைகளின் வருமானத்தைக் கூட்டுகிற நிலையில் அறத் துறை முன் நின்று வருவாயைக் கூட்ட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கன்னியாகுமரி மாவட்ட தேவஸ்வம் போர்டின்கீழ் தேவிகுமாரி பெண்கள் கல்லூரி செயல்படுகிறது; இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன; இரண்டு நடுநிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. அந்த அறநிலைய போர்டால் இவைகளெல்லாம் இதுவரை சிறப்பாக நிர்வகிக்கப்படவில்லை. தேவிகுமாரி கல்லூரியை நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரில் வந்து பார்த்திருப்பார்களென்று நினைக்கிறேன். அந்தக் கல்லூரிக்கு இதுவரை கட்டிடம் கட்டவில்லை. தேவஸ்வம் போர்டில் 'பிக்சட் டிபாசிட்'-ல் 27,000 ரூபாய் இருக்கிறது. அதை எடுக்கக் கூடாது; எடுக்க முடியாதென்ற விதிகளைச் சொல்லிக்கொண்டு, பழைய அரண்மனைப் பகுதியிலேயே அந்தக் கல்லூரி நடந்துகொண்டு வருகிறது. அங்குள்ள கல்வி நிறுவனங்களை தேவஸ்வம் போர்டார் இதுவரை நல்லமுறையில் கவனிக்கவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. நமது அமைச்சரவர்களிடமும் நான் அதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். இனி போடப்போகிற 5 பேர் கொண்ட நிர்வாகக்குழு, கல்வித் துறையையும் மிகச் சிறப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அந்தக் கல்லூரியையும், உயர்நிலைப் பள்ளிகளையும் சிறப்பாக நடத்தி, ஏழை இந்துக்களுக்குப் பணத்தை வாரிக்கொடுத்து, வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, அரிசன மாணவர்களுக்கெல்லாம் அங்கு இலவசமாகப் படிக்க வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது அறநிலையத் துறையால் முடியுமென்று நான் நம்புகிறேன். அமைச்சரவர்கள் அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சட்டம் அங்கு வருவதால், இங்கு இருக்கிற முறைப்படி நாம் அங்கேயும் கவனித்துக்கொள்ள முடியும். அந்த விதியின் ஒரு பகுதியில்—விதி 15 என்று நினைக்கிறேன்.

" provision for staff of Devaswom Board " என்ற விதியில் " The Government shall have power to terminate the services of any such person after giving one calendar month's notice or paying him one month's pay in lieu of such notice." என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு சட்டத்திலே போடுகிற மாதிரி போடப் பட்டிருக்கிறதென்று நினைக்கிறேன். ஒரு அமைப்பை எடுத்தால் அதிலே இருக்கிறவர்களை வெளியே அனுப்புவதற்கு ஒரு விதி வைக்க வேண்டுமென்ற நிலையில் இருக்கிறது. நமது அறநிலையத் துறையும், அமைச்சரவையும் பல ஆலயங்களில் குற்றேவலர்களாகவும், சிறுசிறு தொழில்களைச் செய்துவந்த பல்லாயிரம் பேரை நிரந்தரமாக்கி, அவர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்திக் கொடுத்து, எல்லா மக்களாலும் பாராட்டப்படக்கூடிய ஒரு காரியத்தைச் செய்திருக்கிறது. எனவே இந்த விதி அங்கு பாதிப்பை ஏற்படுத்தாதென்ற நம்பிக்கை எனக்குண்டு. எனினும் அமைச்சரவர்கள் வாயிலாக அந்த உறுதியைப் பெற்றுக்கொள்வது சிறப்புடையதென்று எண்ணுகிறேன். மேலும் அது, அந்த மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகின்ற வகையிலே அமையும் என்று கருதுகிறேன். அங்கிருக்கிற தேவஸ்வம் ஊழியர்கள் அல்லது நிர்வாக போர்டிலிருந்து பணியாற்றும் எல்லா ஊழியர்களுக்கும் வேலைப் பாதுகாப்பு அளிக்கப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில கோவில்களில் அதிகமாகக் கூட ஊழியர்களை வைத்திருக்கலாம். நிர்வாகத்தினுடைய திறமைக் குறைவினாலும் அல்லது தவறினாலும் அதிகமாக நியமித்திருக்கலாம். அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் நிர்வாகச் சீர்திருத்தம் செய்யும்போது, எங்கு குறைக்க வேண்டுமோ அங்கு குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதில், மத்திய அரசு எவ்வளவு தூரம் காலம் தாழ்த்தியதென்பது எனக்குத் தெரியும். ஒவ்வொரு முறையும் நான் அமைச்சரவர்களைக் கேட்கும்போது, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறோமென்று சொல்லுவார்கள். ஏனென்றால், மத்திய பார்லிமெண்ட் ஆக்டையொட்டி நாம் திருத்தம் கொண்டு வருவதால், அவர்களுடைய முன் அனுமதியை நாம் பெற வேண்டுமென்ற நிபந்தனை இருப்பதையொட்டி, எத்தனை முறை கடிதங்கள் எழுதினாலும், எத்தனை முறை நினைவூட்டுக் கடிதங்கள் எழுதினாலும், கடந்த மூன்றாண்டுக் காலமாக காலம் தாழ்த்தப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல சட்டத்தை, இந்த மாநிலத்தில், ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு நீட்டிப்பதற்குக்கூட மத்திய அரசின் பாராமுகக் கொள்கையினால்

இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நாங்கள் உணர்கிறோம். அதையும் மிஞ்சி, வெற்றி கண்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டினு டைய மற்ற பகுதியில் இருக்கிற. . .
(தவத்திரு குன்றக்குடி அடிகளார் எழுந்தார்) மடம் சம்பந்தமாக இந்த 'பில்'-லில்தான் வருகிறது. அதில் பேசுகிறீர்களா?

(தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுவதற்கான சம்மதத்தை, தலை அசைப்பின் மூலம் தெரிவித்து, தொடர்ந்து பேசினர்.)

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருக்கோவில்களுடைய உபரி நிதியிலிருந்து திருமணங்களுக்குப் பண ஒதுக்கீடு செய்வதற்கு இதிலே விதி கொண்டு வரப்படுகிறது. அதற்கு என்னுடைய மனம் நிறைந்த வரவேற்பைக் கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்து சமுகத்திற்குப் பொது நலப் பணிகள் ஏராளமாகச் செய்ய வேண்டியிருக்கின்றன. இந்து ஆலயங்களிலே ஊழியம் செய்கிற அர்ச்சகர்கள், சாதாரணப் பணியாளர்கள் நோய்வாய்ப்படுகிறபோது, நல்ல மருத்துவ மனைகளுக்கு தனக்கென்று உரிமையுடைய மருத்துவ மனைகளுக்குச் செல்ல முடியாமல் அல்லல் படுகிறார்கள். அதுபோல்தான் கல்விக் கூடங்கள். எனவே உபரி நிதியிலிருந்து எல்லா நிறுவனங்களும்—மடங்களாக இருந்தாலும், கோவில்களாக இருந்தாலும்—ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை இந்து சமூக மேம்பாட்டுக்கென்று ஒதுக்கி, அந்த நிதியை ஒழுங்குபடுத்தி, மையப்படுத்தி, தேவையான பின் தங்கிய பகுதிகளுக்கெல்லாம் கொடுத்து, மதமாற்றங்களுக்கெல்லாம் மக்கள் இரையாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தப் பணியை நல்ல முறையில் செய்வதற்கு, ஒரு அமைப்பு உருவாக்கி, அறங்கள் போன்றவற்றைக் கூடி முறைப்படுத்திச் செய்கிறபோது, வெறும் தர்ம உணர்ச்சி இல்லாமல், அது தொண்டாகவும், சேவையாகவும் வளர முடியும். எனவே உதிரி உதிரியாக உபரி நிதிகள் சிதறிப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய முதல்வரவர்களிடத்திலேகூட தனிப்பட்ட முறையிலே நான் கேட்டுக்கொண்டேன். உபரி நிதிகள் பல்வேறு இடங்களில் அரசு கலைக் கல்லூரிகளுக்குக்கூட மாற்றப்படுகின்றன. அப்படியெல்லாம் மாற்றப்படாமல், அந்தந்த அற நிறுவனங்கள், திருக்கோவில்கள் ஆகியவையே அந்தக் கல்வி நிறுவனங்களை, மருத்துவ மனைகளை நடத்தும்படியாக, அவைகளுக்குள்ளே மாநில அளவில் ஒரு

ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் இந்து சமூகத்தைச் சேர்ந்த மனிதன், எனக்கென்று ஒரு மருத்துவமனை இருக்கிறது ; என்னுடைய சமூகத்தைச் சேர்ந்த கோவில்கள் என்னைப் பேணிப் பாதுகாக்கின்றன என்று சொல்லுமளவுக்கு சமய ரீதியில் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பை, நம்முடைய அறநிலைய அமைப்பில் கொண்டு வர வேண்டும். இன்றைக்கு தெரிந்தோ, தெரியாமலோ நம்முடைய திருமடங்கள், திருக்கோவில்கள் அனைத்தும், இந்து சமூகத்தில் பிறந்திருக்கிற மனிதனுக்கு உத்தரவாதம் கொடுக்கிற பணியை மேற்கொள்கிற மனோ பாவத்தைப் பெறுமல் இருக்கின்றன. அது ஒரு வேதனைக்குரிய செய்தியாகும். எனவே நம்முடைய இளம் துடிப்புள்ள அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஒரு இந்து சமூக மேம்பாட்டு வாரியத்தை மையப்படுத்தி, அதன்மூலம் இன்றைக்கு இருக்கிற பல்வேறு விதமான அறங்களை ஒருமுனைப்படுத்தி, தேவையான பொழுதெல்லாம் மிகச் சிறப்பாகச் செய்யக்கூடிய அளவுக்கு நெறிமுறைப் படுத்த வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருமடங்களின் ஆட்சியில் இருக்கக்கூடிய கோவில்களுக்கு இறை பணியாளர்கள் நியமிப்பதுபற்றிக் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்த மாதிரி பிரச்சினைகள் வருகிறபோது, விவாதங்கள் நடைபெறுகிறபோது, சட்டசபையில்கூட நம்முடைய முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நிர்வாகம் வேறு, உணர்ச்சி வேறு என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய பாராட்டுதலுக்குரிய கலைஞரவர்களுடைய கருத்தோடு முரண்படுகிறேன் என்று கருத மாட்டார்களென்று நினைக்கிறேன். நிர்வாகம் வேறு, உணர்ச்சி வேறு என்று சொன்னால், 'தமிழன்', 'தமிழ்' என்று உணர்ச்சி எங்கே பொங்கி நிற்கிறதோ, அங்கிருந்துதான் தமிழ் நாடு என்ற பெயரை இந்த மாநிலத் திற்கு வைக்க முடிந்தது. நிர்வாகத் தலைமைக்கு தமிழ் உணர்ச்சி இருந்தால் தான் தமிழ் நாடு என்ற பெயர் வைக்க முடிந்தது, பூம்கார் பொலிவு அடைய முடிந்தது, இராஜராஜ சோழன் விழா எடுக்க முடிந்தது. நிர்வாகத் தில் அந்த உணர்ச்சி இல்லாதவர்கள் இருக்கிறபோது, தமிழ் நாடு என்ற பெயர் கொடுப்பதுகூட கேலிக்குரியதாகிவிட்டது. ஆதலால் நிர்வாகம் வேறு, உணர்ச்சி வேறு என்று அன்புகூர்ந்து கோவில்களைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடாது. அந்த நிறுவனங்களுடைய தோற்றத்திற்குரிய அடிப் படைக் களங்கள், திரு உருவ வழிபாடு. திருக்கோவில் வழிபாடு ஆகியவற்றில் நம்பிக்கை, சமய ஆச்சாரியர்கள், நாயன்மார்கள் ஆகியவர்களுடைய அடிச் சுவட்டில் அயராத நம்பிக்கை உடையவர்கள்தான் அந்தப் பொறுப்பை

ஏற்கிறபோது மிகச் சிறப்பாகச் செய்ய முடியும். மாறுதலைக்கூட நம்முடைய நாட்டிலே சுலபமாகச் செய்ய முடியாததற்குக் காரணம், நம்பிக்கை வேறு, நிர்வாகம் வேறு, செயல் முறை வேறு என்று பிரிந்து போவதால்தான் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

திருக்கோவில்களிலேகூட 'பெட்டி டெம்பிள்ஸ்' இருக்கிறதென்று நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மனிதனுக்குள்ளே எல்லாம் சோஷலிசம் கொண்டுவர முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது கோவில்களிலேகூட, கடவுளுக்கிடையிலே சோஷலிசம் கொண்டுவரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஒரு கோவில் தங்க விமானம் கட்டுகிறது; இன்னொரு கோவில், கிராமத்தில் இடிந்துகொண்டிருக்கிறது. இவைகளுக்குள்ளே ஒரு ஒத்த உறவு, ஒருமைப்பாடு இன்மையால்தான், திரு மடங்களானாலும், திருக்கோவில்களானாலும் சரி இன்றைக்கு ஒரு சரட்டிலே அவைகள் ஒருமைப்பாடுடையதாக இணைக்கப்படாமல் இருப்பதனாலேதான் செல்வங்கள் விரயமாகின்றன. போட்டா போட்டியிலே திருவிழாக்கள் நடத்துதல், வாண வேடிக்கைகள் நடத்துதல் ஆகியவைகளால் பணம் பாழாகிறது. இவைகளையெல்லாம் அரசு சரி செய்து, நல்ல முறையில் இந்து சமூகத்திற்கு உயர்ந்த பாதுகாப்பும், உத்தரவாதமும் கொடுக்கக்கூடிய அளவிலே இந்து அற நிலையச் சட்டத்தை, அந்த சமூகத்தைச் சேர்ந்த மக்களைக் கேட்டு, திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டங்கள் இதைவிடக் கடுமையாக வரலாம், எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தச் சட்டத்தை அமல்படுத்துகிறவர்கள், ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துகிறவர்கள், அந்தத் தத்துவங்களில் நம்பிக்கை உடையவர்களாக, திருக்கோவில் வழிபாட்டில் நம்பிக்கை உடையவர்களாக, திருவுருவங்களில் நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும்.

இறைபணியாளர்களை மடங்களுக்கு, கோவில்களுக்கு நியமிக்கிற அமைப்பினைப்பற்றிச் சொல்கிறார்கள். 67 கோவில்கள் இன்றைக்கு மடங்களின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றன. பத்தாயிரத்துச் சொச்சம் கோவில்கள் இறைபணியாளர்கள் நிர்வாகத்தில் இருக்கின்றன. என்ன இருந்தாலும், நமது அமைச்சரவர்கள் தருமபுர ஆதீனத்தின் பராமரிப்பில் இருக்கும் கோவில்களைப் பார்த்தால், அவை எவ்வளவு தூய்மையாகவும், நன்றாகவும் பராமரிக்கப்படுகின்றன என்பது தெரியும். எனவே மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிற இடங்களில் இப்போதேகூட அறநிலையச் சட்டத்தின்படி போதுமான அதிகாரங்கள் ஆணையாருக்கும், துணை ஆணையாருக்கும் இருக்கின்றன. 10 ஆண்டு

களுக்கு முன்புகூட நான் ஒரு தலையங்கம் எழுதினேன். கணக்குப்பிள்ளை யாகியும், அவர்களுக்கு இன்னும் மனித சமூகத்தின் மீது பற்று வாவில்லை என்று எழுதினேன். அவர்கள் நிதிநிலைத் திட்டத்திற்கு ஒப்புதல் அனுப்ப வேண்டும் ; வரவு செலவுக் கணக்குக்கு ஒப்புதல் அனுப்ப வேண்டும் ; தணிக்கை கொடுக்க வேண்டும் ; உண்டியில் உடைக்கின்றபோது, ஏலம் விடுகின்றபோது, அங்கீகாரத்திற்குப் பிரதிநிதிகள் வருகிறார்கள். ஏராளமான அதிகாரங்கள் இருக்கின்றன. இவ்வளவையும் மீறி தவறுகள் நடக்குமானால், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், அவர்களை நீக்குவதற்கும்கூட அதிகாரம் இருக்கிறது. இவ்வளவு அதிகாரங்கள் இருக்கிறபோது, ஒரு இறைபணியாளரை நேரடியாகக் கொண்டுபோய்ப் போடுவதனால் மன மாறுதல்கள் எப்படி ஏற்படும்? ஒரு அறங்காவலர் இருக்கக்கூடிய கோவிலில் இருக்கக்கூடிய இறைபணியாளர் களுக்கும், மடங்களின் கீழுள்ள இறைபணியாளர்களுக்கும் கொஞ்சம் வேறு பாடுகள் இருக்கின்றன. ஏனெனில் அறங்காவலர் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறுவார். இவர்கள் 25, 30 ஆண்டுக் காலம் இருப்பார்கள். எப்படியாவது மனத் தாங்கல் வந்து விட்டால் சிக்கல்கள் ஏற்படுமா என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும். எனவே எல்லாவற்றையும் ஒருமுனைப்படுத்தி, ஏழைக் கோவில், பணக்காரக்கோவில் என்றில்லாமல், தமிழ் நாடு முழுதும் செய்ய வேண்டும். ஆங்கிலேயரைப் போல் பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆங்கில மொழி தேவை என்று சொல்கிறோம். எனவே வாடிகன் கான்ஸ்டிட் யூஷனைப் போல ஒரு நல்ல சமயத் தொண்டர்கள், முழு நேர சந்நியாசிகள் ஒரு ஆயிரம் பேரை, 500 பேரைத் தயார் செய்து, அவர்களைத் தன்னுதிக்கம் கொண்டுள்ள குழுவாக அமைத்து, தமிழ் நாடு முழுதும், பட்டிதொட்டி களிலெல்லாம் சமயத்தையும் சமுதாயத்தையும் பாதுகாக்கிற பெரிய தொண்டர் களாக அவர்களை உருவாக்கி, அவர்களை இந்த ஆட்சி தன்னுடைய உறுப்பினர் களாக ஆக்கி, பெரிய மாறுதலை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சிறிய கோவில்கள், பெரிய கோவில்கள் என்ற வேறுபாடு இல்லாமல் ஆக்க வேண்டுமென்று சொன் னார்கள். அவர்கள் முன்பு ஒருமுறை பேசும்போது இதே இடத்தில் இன்றைக்கு இந்த ஆலயங்களையெல்லாம் ஒருங்கிணைத்து சமயத்திலே ஒரு புதுமையை ஏற்படுத்த வேண்டும், அதற்கான ஒரு கமிஷனை இந்த அரசு அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது உதாரணமாக, திருவரங்கம் கோவில் பணக்காரக் கோவில். தில்லை நடராஜர் கோவில் பணக்காரக் கோவில்,

1974 ஏப்ரல் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

திருவாரூர் தியாகராஜர் கோவில் பணக்காரக் கோவில். வேறு இடங்களில் சிறிய மாரியம்மன் கோவில் அல்லது சிவன் கோவில் அல்லது பிள்ளையார் கோவில் எல்லாம் ஏழைக் கோவில்களாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் சமமாக ஆக்க வேண்டும். இந்தப் பொருளை அந்தக் கோவிலுக்குச் செல வழிக்க வேண்டும் அல்லது அந்தக் கோவிலுக்குத் தர வேண்டும் என்று முடி வெடுத்தால், எல்லாக் கோவில்களும் ஏழையாகும். ஏனென்றால் அப்படி பல்லாயிரக் கணக்கான கோவில்கள் இருக்கின்றன. ஆகவே அடிகளாரைப் போன்றவர்களெல்லாம் ஒன்றுகூடி கோவில்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து ஒவ்வொரு ஊரிலும் இரண்டு கோவில்கள்தான் இருக்கலாம் அல்லது மூன்று கோவில்கள்தான் இருக்கலாம் என்கின்ற அளவுக்கு கிறிஸ்தவர்களுடைய சர்ச்சைப் போல, இஸ்லாமியர் தொழுகின்ற மசூதியைப் போல, ஆங்காங்கே இந்தக் கோவில்களுடைய, வழிபடுகின்ற ஆலயங்களுடைய எண்ணிக்கை குறைக்கப்படுமேயானால், அடிகளார் சொல்கின்ற அந்த எண்ணத்தை நாம் நிறைவேற்றுவதற்கு இயலும். திருவாரூரிலே ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் பெயர் ஐநூற்றுப் பிள்ளையார். 499 பிள்ளையார் கோவில்போக இது 500 ஆவது கோவில். ஒரு ஊரிலே மட்டும் இவ்வளவு கோவில்கள். ஆகவே இப்படி பல்லாயிரக் கணக்கிலே, லட்சக் கணக்கிலே கோவில்கள் இருக்கும்போது, பெரிய கோவில்களின் சொத்தை எடுத்து எல்லாவற்றுக்கும் சமமாக ஆக்குவது என்பது இயலாத காரியம். ஆகவே கோவில்களினுடைய எண்ணிக்கையைக் குறைக்க அடிகளார் போன்றவர்கள் முன்வர வேண்டும். திருவல்லிக்கேணியில் நடைபாதையில் இருந்த ஒரு கோவிலை அகற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போது எவ்வளவு புரட்சி ஏற்பட்டது என்பதையெல்லாம் மனதிலே கொண்டு இவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, நம்முடைய பாராட்டு தற்குரிய முதல்வர் அவர்களின் அறிக்கையையும் வேண்டுகோளையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அப்படி ஒரு ஒழுங்குமுறைபடுத்துவது தவிர்க்க முடியாதது, நியாயமுங்கூட என்று சொல்கிறேன். ஒரு சில ஆண்டு களுக்கு முன்பு, சிவகாசியில் ஒரு விநாயகர் கோவில் கும்பாபிஷேகத்திற்கு என்னைக் கூப்பிட்டபோது, நான் வரமாட்டேன் என்றே மறுத்துவிட்டேன். என்னுடைய நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் கோவில்களின் எண்ணிக்கை அதிகம் என்று கருதவில்லை. அவற்றையெல்லாம் செய்வதற்குக் கூட, இந்த சமய நம்பிக்கையுடைய, பொறுப்புள்ள தன்னுரிமை உள்ள குழு வந்தால்தான் முடியும். அப்போதுதான் இதை யாரோ நாஸ்திகர்கள் சொல் கிறார்கள் என்று இல்லாமல், ஒரு சமயத் தலைமை, ஒரு சமயத்தை வழி நடத்து

கிறவர்கள், தொண்டர்கள், இருந்து முழுமைப்படுத்த முடியும். ஆகவே உடனடியான தேவை சமயத் துறையில் அறிவுபோல் இருக்கிற அறியாமை, உணர்ச்சி வசத்தால் மூடிமறைக்கின்ற தெளிவின்மை இருக்கிறதே, அதை மாற்ற வேண்டுமானுல் அது ஓரிருவரால் நடக்கக்கூடிய காரியமல்ல. முழு நேரத் தொண்டர்கள் இப்படிச் செய்ய பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறேன். இது நமது தலைமுறையில் இந்து சமூகத்தை ஒருங்கிணைத்துப் பாதுகாக்க வேண்டிய தவிர்க்க முடியாத கடமை. அதற்கு பின்னணியில் இருக்கிற உணர்வுகளை என்னுடைய பெருமைக்குரிய டாக்டர் முதல்வர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படி ஒரு கமிஷன் அமைத்து, அதுபோன்ற உணர்வுகளின் அடிப்படையிலே சீர்திருத்தம் செய்வதற்கு ஏற்ப அடிகளார் போன்றவர்கள், நல்ல ஆஸ்திகப் பற்றுமிக்க நம்முடைய துணைத் தலைவர் போன்றவர்கள், மற்றும் கதாகாலட்சேபத்திலே இன்றைக்கு ஆத்திகத்தைப் பரப்பி வருகின்ற வாரியாரைப் போன்றவர்கள் எல்லாம், நாட்டிலே இருக்கிற பிரதான பத்திரிகைகளில், நடுநிலைப் பத்திரிகை களில் இதுபோன்ற கருத்துக்களைத் தொடர்ந்து எழுதி, மக்களை ஒரு ஆறு மாத காலத்திற்காவது, ஓராண்டு காலத்திற்காவது, பண்படுத்துவார்களேயானுல், அதற்குப் பிறகு அப்படிப்பட்ட கமிஷனைப் போடும்போது மக்கள் திகைப்பு அடையாமல் இருப்பார்கள். அந்தக் காரியங்களை அடிகளார் போன்றவர் களெல்லாம் முன்னின்று செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் ஓராண்டுக்கு இந்த மாதிரிப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று சொல்கிருர்கள். அவர்கள் சொல்கிறபோதே யார் ,யார் எல்லாம் இணைவார்களோ, முரண்படுவார்களோ, எல்லோரையும் சேர்த்துச் சொல்லியிருக்கிருர்கள். நான் கதைகளை காலட்சேபத்திற்குப் பயன்படுத்து வதில்லை. தொடர்ந்து இந்தக் கருத்தை வலியுறுத்திவருகிறேன், பேசி வரு கிறேன். ஆனுலுங்கூட பலர் நேரில் பேசுவார்கள், பின்னுலே அறிக்கை கொடுக்கிறபோது வழுவுவார்கள். அவர்களையெல்லாம் கமிஷன் நியமித்து நேரில் கேட்டால்தான் யார் எந்த வண்ணத்தார் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். ஆகவே காலம் தாழ்த்தாது அந்த மாதிரி ஆணைக்குழு நிய மிப்பதை ஒரு சோதனைக்கு ஆளாக்காது ஆணைக் குழு நியமிப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்பதை. . .

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் சொல்வது, ஆணைக் குழுவுக்கு ஒரு சோதனை வந்துவிடக் கூடாது. ஆணைக் குழுவை அமைத்த அரசைப்பற்றியும் தவறான கருத்துக்கள் வந்துவிடக் கூடாது. கோவில்களை ஆராய, சமயத்தை ஆராய ஒரு ஆணைக் குழு போட்டுவிட்டார்கள் என்று வந்துவிடும். ஆகவே மக்களை முதலிலே தயார்படுத்துகின்ற அளவுக்கு அடிகளாரைப் போன்றவர்கள் அதற்கான கட்டுரைகளைப் பத்திரிகையிலே எழுதி மக்களைத் தயார்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆணைக் குழு போடுவதிலே எந்தவித மறுப்பும் கிடையாது. நாளைக்கே கூட போட்டு விடலாம். பெரிய காரியமல்ல. ஆனால் ஆணைக் குழு எந்த அடிப்படையிலே போடப்பட்டது, அது தேவைதானா என்பதை மக்கள் உணரும் அளவுக்குத் தயார்படுத்த வேண்டும் என்று சொல்கிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, முதல்வர் அறிக்கையை நான் திரும்ப ஏற்றுக்கொண்டு, திரும்ப அப்பர் அடிகளார், ராமானுஜர் சுவரொட்டி முதல்வர் அவர்களுடைய அலுவலகத்துக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பிரசாரத்தை தொடர்ந்து பேரவை செய்து வருகிறது. அதனால்தான் நான் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களிடம் கூட பேரவைக்கு நிதி வழங்குகிற முறையை சட்டபூர்வமாக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் கேட்டுக்கொண்டிருந்தேன். அதையும் விரைவாக நமது அரசு நடத்தித் தரவேண்டும். ஒருமுகமான பிரசார இயக்கத்தைப் பயன்படுத்தித் தான் மக்களை மாற்ற வேண்டும். அந்தப் பணியை பேரவை செய்து வருகிறது. நானும் முதல்வர் அவர்களும், அறநிலைய அமைச்சர் அவர்களும் விரும்பு கிறவாறு செய்யும் என்று கூறிக்கொண்டு, சீர்திருத்தங்கள் செய்கின்றபோது, ஏற்கெனவே இருக்கிற மரபுகள் புதுமை பெறுகிற அளவுக்கும், மரபுகளுக்கு எழுச்சி ஊட்டுகிற அளவுக்கும் செய்ய வேண்டுமென்று விரும்பிவேண்டிக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை வழங்கியதற்காக நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மற்றப் பகுதிகளிலே இருக்கின்ற அறநிலையத் துறையிலே இருக்கின்ற சட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவாக்க வேண்டுமென்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசின் அனுமதி கேட்கப் பட்டு, கடந்த வாரத்திலே அனுமதி கிடைத்த பிறகு இந்த சட்டத் திருத்தத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம். கேரள மாநிலத்திலேயிருந்து பிரிக்கப்பட்ட பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதி கோயில்கள், திருவாங்கூர் மகாராஜா

வினாலே நியமிக்கப்படுகின்ற ஒரு தேவஸ்வக் குழு உறுப்பினரும், தமிழ்நாட்டு அரசாங்கத்தாலே நியமிக்கப்படுகிற இரண்டு பேரும் சேர்ந்து ஒட்டு மொத்தமாக மூன்று பேரும் தேவஸ்வக் குழு உறுப்பினர்களாக இருந்து நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தினருக்கு ஏராளமான அதிகாரங்கள் இருந்தும், அந்த அதிகாரங்களைச் சரியான முறையிலே பயன்படுத்தாமல், அந்தக் கோவில்களின் நிர்வாகம் நாளா வட்டத்திலே கேடுற்று வருகின்ற காரணத்தாலேதான் தமிழ்நாட்டினுடைய மற்றப் பகுதியில் இருக்கின்ற இதே சட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத் திற்கும் விரிவாக்க வேண்டும் என்று, இன்றையதினம் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கின்றோம். அதன்மீது இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக் கின்றார்கள். சில கோவில்களுக்கு இருக்கின்ற நிலம் எல்லாம் கண்டுபிடிக்கப் படாமலிருக்கின்றது என்பதை இங்கே சொல்லியிருக்கிறார்கள். கோவில் நிலங்களைக் கண்டுபிடிக்க தனியாகவே அதிகாரிகளைப் போட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலே சில பகுதியில் அவர்கள் சில புதிய கோவில்களையும் கோவில் களுக்குச் சொந்தமான நிலங்களையும் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். மேற்கொண்டு இருக்கின்ற நிலங்களையும், புதிதாகச் சேர்க்கப்படவேண்டிய கோவில்களையும் கண்டுபிடிக்க தீவிரமான நடவடிக்கையை எதிர்காலத்திலே இந்தத் துறை எடுத்துக்கொள்ளும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள் கிறேன். அதேபோல தேவஸ்வக்குழு சார்பிலே நடத்தப்பட்டுவருகிற கல்லூரியும், உயர்நிலைப் பள்ளியும், நடுநிலைப் பள்ளியும், சரியான கட்டிட வசதி இல்லாமல், சீரழிந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்த விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரிந் திருந்தாலும், நானே அதற்கான முயற்சிகளை எடுத்துங்கூட, அந்த முயற்சிகள் தோல்வியுற்ற காரணத்தாலேதான், இந்தச் சட்டம் எப்படியாவது விரைவிலே திருத்தப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு அடிக்கடி நினைவூட்டுதல்கள் தந்து, இன்றைக்கு நடத்தி இருக்கிறோம். ஆகவே அதற்குத் தேவையான நிர்வாக சீர்திருத்தமாக இருந்தாலும், கல்லூரி அல்லது உயர்நிலைப்பள்ளி அல்லது பள்ளிக்கூடமாக இருந்தாலும், விரைவிலே கட்டுவதற்கான ஏற்பாடு களையெல்லாம் இந்தத் துறையிலே எடுத்துக்கொள்வேன்.

அதேபோல தேவஸ்வம் ஊழியர்களைப்பற்றிய விதிகள்பற்றிக் குறிப்பிட் டார்கள். அவர்களே குறிப்பிட்டதைப்போல, எதிர்காலத்திலே ஏதாவது அவசியம் ஏற்பட்டால்தான் அந்த விதியை நாம் பயன்படுத்தப் போகிறோம்.

1974 ஏப்ரல் 23] [திரு. மு. கண்ணப்பன்]

தற்போதுள்ள தேவஸ்வம் ஊழியர்களை எந்தக் காரணத்தைக் கொண்டோ வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த விதியை ஏற்படுத்த வில்லை. தற்போது வருவாயில் ஊழியர்களுக்குச் சம்பளமாக பாதிக்கு மேலே போய் விடுவதால், சென்ற ஆண்டு அறநிலையத் துறை ஆணையர் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார் பதவிக்காலம் முடிந்து வெளியேறும் காரணமாக காலி யாகும் இடங்களுக்கு புதிதாக ஊழியர்களை நியமிக்கக்கூடாது என்று. அதற்கு முன்பாக, தேவையற்ற அளவில் ஏராளமான ஊழியர்களை நிர்வாகத்தில் நியமித்த காரணத்தினுல்தான், அதிகமாகச் செலவேற்பட்டது. அதையொட்டி பாதுகாப்பிற்காக இருக்க வேண்டும் என்றுதான் இந்த விதியினை இணைத்திருக் கிறோம்.

இப்போது செய்யப்பட வேண்டிய சிறப்பான பணிகளையெல்லாம் அடிகளார் அவர்கள் குறிப்பிட்டுக் காண்பித்திருக்கின்றுர்கள். ஏற்கெனவே இந்து சமுதா யத்தின் மேம்பாட்டிற்காகவும் இந்தச் சமுதாயத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையிலும், கல்லூரிகள், இலவச மருத்துவ மனைகள் என்று ஏராளமான அளவில் ஏற்படுத்தி நற்பணிகள் பலவற்றைச் செய்து வருகிறோம். எதிர்காலத்திலும், நமது அடிகளார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அதே அடிப்படையில் மேலும் பல்வேறு நற்பணிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பல்வேறு மடங்களின் நிர்வாகத்திலுள்ள கோவில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிப்பது குறித்து குறிப்பிட்டார்கள். தருமபுரம் ஆதீனத் திலுள்ள கோவில்கள் எல்லாம் மிகச் சிறப்பாக நடந்து வருகின்றன என்பது உண்மைதான். நான் எல்லாக் கோவில்களையும் பார்க்காவிட்டாலும், சில கோவில்களைப் பொறுத்த வரையில் மிக நன்றாக இருக்கின்றன என்ற உண்மையை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல் எல்லா மடங்களின் கீழுள்ள கோவில்களும் சரியானபடி இருக்கின்றன என்று சொல்ல முடியாது. பக்கத் திலுள்ள திருப்போரூரில் இருக்கும் நிலைமைகளையும், தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள மயிலம் கோவிலில் உள்ள நிலைமைகளையும் பற்றி அடிகளார் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆக இப்படிப்பட்ட சில மடங்களின் நிலைமைகளை ஒட்டித்தான் அந்த மடங்களின் ஆதிக்கத்திலுள்ள கோவில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏதோ மடாதிபதிகளுக்கு மேலே அவற்றின் மேல் ஆதிக்கம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கிறோம் என்ற

எண்ணம் வேண்டாம். மாறாக அவர்களுக்கு உதவியாக இருந்துகொண்டு, நிர்வாகத்தைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்றுதான் மடங்களின் நிர்வாகத்திலுள்ள கோவில்களுக்கு நிர்வாக அதிகாரிகளைப் போட வேண்டுமென்று சட்டத்தில் வழி வகை செய்திருக்கிறோம் என்று சொல்லி, அக் கருத்தை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவில்களின் வருமானங்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று கோவில் வருமானங்கள் மீதும் வருமான வரி விதிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வரி விதிப்பினை மற்ற கோவில்கள் எதிர்த்திருந்தும் நமது மாநிலத்தின் நிலை என்ன என்பதுபற்றிய விளக்கத்தை இங்கே கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். இதுபற்றிய நமது அரசு எடுத்துள்ள முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோவில்களின் வருமானத்தின்மீது வரி விதித்திருப்பதாகத் தெரியவில்லை. முழுத் தகவல்கள் இருந்தால், அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

சட்டமியற்றுவது, வரி விதிப்பது பற்றிய எஞ்சியுள்ள அதிகாரங்கள் மாநிலச் சட்டமன்றங்களிடம் நிலைபெற்றிருத்தல் வேண்டும்.

154, 258-ஆவது பிரிவுகள்.

மாநில அரசுக்கும் மாநில அதிகாரமன்றங்கட்கும் அதிகாரம் வழங்கு வதற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றுவதற்கான அதிகாரம் அளிக்கின்ற பிரிவுகள் நீக்கப்பட வேண்டும்.

169-ஆவது பிரிவு.

சட்டமன்ற மேலவைகளை எடுத்துவிடுவதற்கான அல்லது அமைத் திடுவதற்கான அதிகாரம், நாடாளுமன்றச் சட்டம் இயற்றும் தேவையில்லாமலேயே, மாநிலச் சட்டமன்றப் பேரவைகளிடம் நிலை பெற்றிருத்தல் வேண்டும்.

249-ஆவது பிரிவு.

மாநிலப் பட்டியலில் காணும் எப்பொருள் குறித்து சட்டமியற்று வதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிற இந்தப் பிரிவு நீக்கப்பட வேண்டும்.

252-ஆவது பிரிவு.

இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்களின் இசைவைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றம் சட்டமியற்றுவதற்கு அதிகாரமளிக்கும் இப்பிரிவு நீக்கப்பட வேண்டும்.

மாநிலச் சட்ட வரைவுகளை குடியாட்சித் தலைவரது ஆய்வுக்காக ஒதுக்குதல்.

மாநிலச் சட்ட வரைவுகளை, குடியாட்சித் தலைவரது ஆய்வுக் காகவும், இசைவுக்காகவும் ஒதுக்குவது குறித்த பிரிவு நீக்கப்பட வேண்டும். சட்டமியற்றும் பொதுப் பட்டியலின் வரம்புக்குள் வரும் விவகாரங்கள் குறித்து மையச் சட்டத்தைவிட மாநிலச் சட்டமே மேலோங்கியிருக்கவேண்டுமென்கிற வகையில் 254-ஆவது பிரிவு திருத்தப்பட வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

1974 ஏப்ரல் 23]

ஆளுநர் அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்தல்.

ஓர் அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்படுவதற்குமுன் குடியாட்சித் தலைவரின் கட்டளைகளைப் பெறும் அவசியத்தை ஏற்படுத்துகிற 213 (1) பிரிவுக்கான நிபந்தனை நீக்கப்படவேண்டும்.

மானியங்கள்.

ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்காகவும், திட்டத்தின்கீழ் வராத செலவு களுக்காகவும் மாநிலங்களுக்கு மைய அரசு அளிக்கின்ற மானியங்கள், நிதி ஆணைக்குழு அல்லது அதைப்போல் சட்டப்படி அமைந்த அமைப்பு போன்ற தனிப்பட்ட, பாரபட்சமற்ற அமைப்பு ஒன்றின் பரிந்துரைகளின் படியே வழங்கப்பட வேண்டும்.

நிதி ஆணைக்குழு.

அரசியலமைப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி ஆணைக்குழு, மாநிலங்களின் நிதிவாயில்களையும் தேவைகளையும் பரிசீலிக்கிறது. ஆனால் அது, மைய அரசு நிதி நிலையைப் பொறுத்து இதைப்போன்ற அலுவலை நிறைவேற்றுவதில்லை. எனவே, மைய அரசின் நிதி வாயில்களையும் தேவை களையும்கூட அவ்வப்போது மதிப்பிட வேண்டுமென்பது அவசியம். இதற் கிணங்க, மாநிலங்களின் நிதி வாயில்களையும் தேவைகளையும் மட்டு மல்லாமல் மைய அரசின் நிதி வாயில்களையும் தேவைகளையும்கூட ஆய்வு செய்வதற்கான அதிகாரம் நிதி ஆணைக்குழுவிற்கு வழங்கிட வேண்டும். அப்போது மைய அரசு அதன் பொறுப்புக்களை நிறைவேற்று வதற்குத் தேவையான தொகைகளை நிதி ஆணைக்குழு பரிந்துரை செய்யும். அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட தொகைகள், மைய அரசு விதிக்கும் வரிகளிலிருந்து ஒதுக்கப்பட வேண்டும்.

நிதி ஆணைக்குழு அதற்கு உரித்தான செயலகத்துடன் நிலையான அமைப்பாக விளங்க வேண்டும்.

அனைத்து மாநிலக் குழுவைக் கலந்தாலோசித்துக்கொண்டு நிதி ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள், மைய அரசு, மாநிலங்கள் ஆகிய இரு தரப்பினர்களையும் கட்டுப்படுத்துமென்று அரசியலமைப்பில் வகை செய்யப்பட வேண்டும்.

மாநிலங்களின் கடன்களும், கடன் சுமையும்.

கூட்டாட்சிக் கடன் ஆணைக்குழு ஒன்று இருக்கவேண்டும். மாநிலங்களின் கடன் சுமை பற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் இக்குழு ஆய்வு செய்ய வேண்டும். இந்த ஆணைக்குழு நாளடைவில், கூட்டாட்சி வளர்ச்சி வங்கி யாகச் செயல்பட வேண்டும். இது மைய, மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். வெளிச் சந்தையிலிருந்து திரட்டும் கடன்களுக்குமேல் மைய அரசோ மாநில அரசோ கடன் வேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்களை இந்த வங்கி பரிசீலிக்க வேண்டும்.

[1974 ஏப்ரல் 23

இடருதவி நிதி.

இயற்கைப் பேரிடர்களினால் ஏற்படும் இன்னல்களைத் தீர்ப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் இடருதவி நிதி இருக்க வேண்டும். சீரமைப்புப் பணிகளுக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படலாம்.

திட்ட ஆணைக் குழு.

திட்ட ஆணைக் குழுவானது, மைய நிர்வாகக் கட்டுப்பாட்டிலோ அல்லது அரசியல் கட்சிச் சார்புள்ளதாகவோ இல்லாமல் சுதந்திரமாகச் செயல் படும் ஓர் அமைப்பாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை எய்த, திட்ட ஆணைக்குழுவினை நிறுவ வகை செய்யும் சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டு அது சட்டப்படி அமைதல் வேண்டும்.

சட்டப்படி அமைக்கப்படும் திட்ட ஆணைக் குழுவில் பொருளாதார, அறிவியல், தொழில் நுட்ப மற்றும் வேளாண்மைத் துறை வல்லுநர் களும் பிற வகை தேசியப் பணியைச் சேர்ந்த வல்லுநர்களும் மட்டுமே இடம் பெற வேண்டும். இந்திய அரசைச் சேர்ந்த அமைச்சர் எவரும் அதில் இடம் பெறலாகாது. இது தொடர்பாக இயற்றப்படவிருக்கும் சட்டத்தில், திட்ட ஆணைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம், பணி நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்படல் வேண்டும். இந்த திட்ட ஆணைக்குழுவிற்கென்று தனியே ஒரு செயலகம் இருத்தல் வேண்டும். தற்போதுள்ள திட்ட ஆணைக்குழு கலைக்கப்பட வேண்டும்.

திட்ட ஆணைக் குழுவின் பணி, மாநிலங்கள் உருவாக்கும் திட்டங்கள் குறித்து அறிவுரை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.

மாநிலங்களால் அல்லது மாநிலங்களில் தொடங்கப்படும் தொழில் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு அன்னியச் செலாவணி வழங்குவது தொடர்பாக, நிதி ஆணைக் குழுவினால் பரிசீலிக்கப்படுவதற்கு பரிந்துரைகள் செய்ய வேண்டியதும் இதன் பொறுப்பாகவே இருக்கும். நிதி ஆணைக்குழு, மானியங்களுக்குப் பரிந்துரை செய்கையில் திட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் தனக்கென ஒரு திட்ட வாரியத்தை அமைத்துக் கொள்ளலாம்.

திட்டமிடுதலும் வளர்ச்சியும்.

1951-ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சியும் ஒழுங்கு முறையும்) சட்டம் (மத்தியச் சட்டம் 65/1951) ரத்து செய்யப்பட வேண்டும்.

புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கி நடத்தி வருவதற்கும் மாநிலத்திற்குள் புதிய தொழில் நிறுவனத்தைத் தொடங்குவதற்காக உரிமம் வழங்குவதற்கும் மாநிலத்திற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். ஒரு மாநிலத்தால் உரிமம் வழங்கப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட ஒரு தொழில் நிறுவனத்திற்கு அன்னியச் செலாவணி தேவைப்படுமானால்,

1974 ஏப்ரல் 23]

தேசியத் திட்ட முன்னுரிமைகள், தேசியத் தேவை மதிப்பீடு, செய்திப் பகிர்வு முறை ஆகியவற்றுக்கு உட்பட்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படும் மொத்த மானிய வடிவில் அவ்வுதவி அளிக்கப்படல் வேண்டும்.

நீதித்துறை.

உச்ச நீதி மன்றம்.

மைய-மாநிலப் பிரச்சினைகள் உட்பட அரசியலமைப்புப் பிரச்சினைகள், அல்லது மத்தியச் சட்டத்திற்குப் பொருள் விளக்கம் கூறுதல் ஆகியவை தவிர்த்த வேறு எந்த சாதாரண உரிமை இயல், குற்றவியல் அல்லது பிற வழக்குகளில் எவ்வளவு தொகை சம்பந்தப்பட்டிருப்பினும், என்ன தண்டனை விதிக்கப்பட்டிருப்பினும் அத்தகையவற்றில் உயர்நீதி மன்றங்களிலிருந்து உச்ச நீதி மன்றத்திற்கு மேன்முறையீடு இருத்தல் கூடாது. நீதிபதிகளை நியமிக்கும்போது, கூடியமட்டிலும் திறமைக்குக் குந்தகமில்லாதவாறும், நாட்டின் உச்ச நீதி மன்றத்திற்கு பல்வேறு பகுதிகளில் உள்ள உயர்நீதி மன்றங்களுக்கும் வழக்கறிஞர் சங்கங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் இருக்குமாறு பார்த்துக்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

உயர்நீதி மன்றங்கள்.

உயர்நீதி மன்றத்தின் அமைப்பு, நிர்வாகம் சம்பந்தமாகச் சட்டமியற்றும் அதிகாரம், மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதால், 217, 222, 223, 224, 224-ஏ பிரிவுகளைப் பொருத்தமான முறையில் திருத்த வேண்டியுள்ளது அல்லது விட்டுவிட வேண்டியுள்ளது.

உயர்நீதி மன்றத்தின் ஆய்வுரை கோரல்.

மாநிலச் சட்டம் ஒன்றினுடைய ஒரு குறிப்பிட்ட பிரிவு அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணுயுள்ளதென்று உயர்நீதி மன்றத்தில் எழுப்பப்படும்பொழுதெல்லாம், அந்த வழக்கை, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட—அவர்களில் ஒருவர் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும்—முழு நீதிபதி ஆயத்திடம் ஒப்படைப்பதற்காக உயர்நீதி மன்றத்தை கேட்டுக் கொள்வதற்கான உரிமையை மாநில அரசு பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட நீதிபதி ஆயம், சம்பந்தப்பட்ட சட்டத்தின் ஒவ்வொரு பிரிவையும் ஆராய வேண்டும்; அது தன்னுடைய தீர்ப்பினை வழங்கிய பின்னர், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணனது என்னும் காரணத்தைக் கொண்டு அச்சட்டத்தின் பிரிவு எதுபற்றியும் வாதிடக்கூடாது. பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் அல்லது பொருண்மை குறித்து உயர்நீதி மன்றத்தின் அறிவுரைக் கருத்தினைக் கேட்டறிய மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

[1974 ஏப்ரல் 23

ஆளுநர்.

ஆளுநர் பதவி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற ஒரு பதவியாகும். ஆளுநர் நியமனம் குறித்து நமது அரசியலமைப்பில் வகை செய்யப்பட்டுள்ளது மக்களாட்சி முறையில் காலத்திற்கு ஒவ்வாத ஒன்றாகும். இவர், மத்திய அரசால் நியமிக்கப்பட்டு மத்திய அரசுக்குப் பொறுப்புள்ள அதிகாரியாவார். எனவே, உள்ளூர் நிலைமைகளையும் அரசியல் நிலைமையையும் இவர் அறிந்திருக்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆளுநர் பதவிக்காகச் செய்யப்படும் செலவு சமதர்ம சமுதாய முறைக்கு ஏற்றதாக இல்லை. இச்செலவு வீணானது ; இதனைக் கைவிடலாம். அமைச்சர், ஆளுநருக்குக் கீழ்ப்பட்டவர் என்று **ராவ் ஷிவ் பகதூர் சிங்கிற்கும் விந்தியப் பிரதேச அரசுக்கும்** இடையே நடைபெற்ற வழக்கில் உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்தது **(1953 S.C.R. 1188)**. இவ்வாறாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சட்ட கோட்பாட்டின்படி மைய அரசுப் பிரதிநிதியின் ஊழியராக இருக்கிறார். ஆளுநர் பதவியை எடுத்து விடுவதற்கு உற்ற தருணம் இதுவேயாகும்.

மரணம், பதவிதுறப்பு முதலிய காரணங்களினால் முதலமைச்சர் பதவி காலியானால் மேற்கு ஜெர்மனியில் பின்பற்றப்படும் நடைமுறையின்படி அடுத்த முதலமைச்சர் குறிப்பிட்ட கால அளவிற்குள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படாவிடில் சட்டமன்றப் பேரவை தானாகவே கலைந்துவிட்டதாகக் கொள்ளப்படும். இத்தகைய இடைக்கால அளவில் புதிய முதலமைச்சர் பொறுப்பேற்கும்வரை மாநிலத்தின் தலைமை நீதிபதி நிர்வாகப் பொறுப்பினை ஏற்கலாம். இக்கருத்துக்குப் பின்னணியாக அமைந்துள்ள கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஏனைய விவரங்கள் தொகுக்கப்படலாம்.

மேற்கு ஜெர்மானிய நடைமுறையின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் நிர்வாகத் தலைமை அகற்றப்படலாம். இது "ஆக்க முறையிலான நம்பிக்கையில்லாத் தீர்மானம்" என்றழைக்கப்படுகிறது. இந்த நடைமுறையின்படி, அடுத்த முதலமைச்சர் தேர்வு பற்றிய நம்பிக்கையில்லாத தீர்மானத்துடன் அனுப்பப்பட்டாலன்றி நிர்வாகத் தலைமை, அகற்றப்பட முடியாது. இதைப் போன்றதொரு முறை இங்கேயும் பின்பற்றப்படலாம். ஆளுநர் தற்போது கவனித்து வரும் அலுவலை முதலமைச்சர் கவனிக்கலாம். இடைக்காலம் ஏற்பட்டால், முதலமைச்சர் இல்லாத மாநிலத்தின் தலைமை நீதிபதியே அந்த அலுவல்களை ஆற்றலாம்.

நெருக்கடி கால அதிகாரங்கள்.

356, 357 பிரிவுகள், மாநிலங்களில் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியைத் திணிக்க நெருக்கடி கால அதிகாரங்களை அளிக்கின்றன. இப்பிரிவுகள் நீக்கப்பட வேண்டும்.

1974 ஏப்ரல் 23]

பிரிவு 365.—மைய அரசு கட்டளைகள் பிறப்பிப்பதற்கான பிரிவுகள் விடப்பட்டுள்ளன. எனவே, இப்பிரிவும் நீக்கப்படவேண்டியுள்ளது.

தேசிய நெருக்கடி நிலை.

பிரிவுகள் 352, 354.—நெருக்கடி நிலையை பிரகடனம் செய்வது தொடர்பாக 352, 354 பிரிவுகளின்கீழ் உள்ள அதிகாரங்கள், அவை தொடர்பான அதிகாரங்கள் ஆகியவை போரோ, ஆக்கிரமிப்போ இருந்தாலன்றி செயல்படுத்தப்படக்கூடாது.

பிரிவு 353 (ஏ). நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோது, போர் அல்லது ஆக்கிரமிப்பு குறித்து மட்டுமே கட்டளைகள் பிறப்பிப்பதற்கான அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் அனைத்து மாநிலக்குழுவின் அனுமதியுடன் மட்டுமே அத்தகைய கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

பிரிவு 355.—போர் அல்லது ஆக்கிரமிப்பின்போது மட்டுமே ஒவ்வொரு மாநிலத்தையும் பாதுகாப்பது மைய அரசின் கடமையாகும்.

நிதி நெருக்கடி நிலை.

பிரிவு 360.—இந்தியாவின் நிதி நிலை உறுதிக்கு அல்லது நாணயத்திற்கு அபாயம் ஏற்படும் நேர்வுகளில், நெருக்கடி நிலையை பிரகடனம் செய்ய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கும் பிரிவு நீக்கப்பட வேண்டும்.

அரசுப் பணிகள்.

இரண்டு வகைப் பணிகள் மட்டுமே இருக்கவேண்டும்—

(1) மைய அரசுப் பணிகள்

(2) மாநில அரசுப் பணிகள்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பணிகள் உட்பட தற்போதுள்ள அனைத்து இந்தியப் பணிகள் மைய அரசுப் பணிகளுடனோ மாநில அரசுப் பணிகளுடனோ இணைக்கப்பட வேண்டும்.

மாநில அரசுப் பணிகளுக்கான தேர்வு, பணி நிபந்தனைகள் ஆகியவை மாநிலங்களால் தொடர்ந்து முறைப்படுத்தப்பட வேண்டும். கூட்டாட்சி அரசுப் பணிகளுக்கான தேர்வு தற்போதுள்ள நடைமுறையையொட்டி இருக்கும். அத்தகைய தேர்வு, ஒவ்வொரு மாநிலத்திலும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் எண்ணிக்கையை ஒட்டி அவர்களுக்குப் பதவிகள் ஒதுக்குவதற்கான ஏற்பாட்டுடன் மாநில வாரியான அடிப்படையில் செய்யப்பட வேண்டும்.

கூட்டாட்சி அரசுக்கும் சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கும் இடையே ஒப்புக்கொள்ளக் கூடிய வரையறைகள், நிபந்தனைகளின்படி மாநில அரசுப் பணியாளர்களையும், கூட்டாட்சி அரசுப் பணியாளர்களையும் பரஸ்பரம் மாற்றிக்கொள்ள வழிவகை இருத்தல் வேண்டும்.

[1974 ஏப்ரல் 23

பிரிவு 312.—அனைத்திந்தியப் பணிகள், புதிய அனைத்திந்தியப் பணியை உருவாக்குதல் ஆகியவை தொடர்பான இந்த பிரிவு நீக்கப்பட வேண்டும்.

மைய அரசுப் பணியாளர்களின் ஊதியங்கள்.

மைய, மாநில அரசுப் பணியாளர்களின் ஊதியங்கள், உள்ளூர் அல்லது தனி நிலைகளுக்குரிய சலுகைகள் அளிக்கப்பட்டு, நாடு முழுவதும் ஒருபடித்தாக அமைய வேண்டும்.

மாநில அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு.

மாநில அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, அதன் உறுப்பினர்களை நீக்குதல் அல்லது தற்காலிகமாகப் பணியிலிருந்து நிறுத்திவைத்தல் ஆகியவை தொடர்பான அதிகாரம் மாநில அரசிடமே இருத்தல் வேண்டும்.

மாநில ஆட்சிப் பகுதி.

ஒரு மாநிலத்தின் ஆட்சிப் பகுதி ஒருமைப்பாட்டில், பின்வரும் மூன்று மாற்று வகைகளில் யாதேனுமொன்றிற்கிணங்க அல்லாமல் மற்ற எம்முறையிலும் தலையிடுதல் கூடாது என்று அரசியலமைப்புச் சட்டத்திலேயே தெளிவாக வகை செய்யப்பட வேண்டும் :—

(1) தொடர்புள்ள மாநிலச் சட்டமன்றத்தின் இசைவைப் பெற வேண்டும்.

(2) இவ்வழக்கினை போட்டியிடும் தரப்பினரின் இசைவுடன் இதற்கென அமைக்கப்படும் உயர்நிலை நீதிமுறை தீர்ப்பாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டும். அதனுடைய தீர்ப்பு எல்லாத்தரப்பினரையும் கட்டுப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

(3) தொடர்புடைய பகுதியின் அல்லது பகுதிகளின் மக்களுடைய கருத்தைத் தனி வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அறிந்திட வேண்டும்.

அதாவது, 3, 4 பிரிவுகள் நீக்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தின் எல்லைகள், பகுதி முதலியவற்றை மாற்ற அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டியது அவசியமாகும்.

நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம்.
மாநிலங்கள் அவை.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் சமமான பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டும். அதாவது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் மக்கள்தொகை யாதாயினும் பிரதிநிதிகள் சம எண்ணிக்கையில் இருக்கவேண்டும்.

மாநிலங்களவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படக்கூடாது.

1974 ஏப்ரல் 23]

மக்கள் அவை.

1951-ல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அறுதியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை மக்கள் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தாலன்றி மற்றபடி, மாற்றம் செய்யப்படாமல் இருந்தவாறே இருக்கவேண்டும். மக்கள் தொகை அதிகரித்திருந்தால், அதிக அளவு எண்ணிக்கை ஒன்றிற்குட்பட்டு, இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம். ஆயினும், 1951-ல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அறுதியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை எந்நிலையிலும் குறைக்கப்படக்கூடாது.

மொழி.

மைய அரசின் ஆட்சி மொழி, அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது விவரப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள அனைத்து மொழிகளாகவும் இருக்க வேண்டும். இந்நிலையினை எய்தும்வரை, மைய அரசு தலைமைச் செயலகம் உட்பட மைய அரசுத் துறைகளனைத்திலும் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு கொள்ளவும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். உச்ச நீதி மன்றத்தில் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். உயர் நீதிமன்றம் உட்பட நீதிமன்றங்கள் அனைத்திலும் பயன்படுத்தப்படும் ஆட்சி மொழியை அந்தந்த மாநில அரசுகளே முடிவு செய்யவேண்டும். மாநிலத்தில் உள்ள மைய அரசின் அலுவலகங்கள் பொதுமக்களுடன் அலுவல் தொடர்புகொள்வதற்கு ஆங்கிலத்துடன் அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழியையும் பயன்படுத்த வேண்டும். மாநிலத்தில் அமைந்துள்ள மைய அரசின் அலுவலகங்களால் மாநில அரசோடும் அதன் அலுவலகங்களோடும் மேற்கொள்ளப்படும் தகவல் தொடர்புகள் அந்த மாநிலத்தின் ஆட்சி மொழி வாயிலாகவே நடைபெறல் வேண்டும். மாநிலத்தில் பணிபுரியும் மைய அரசுப் பணியாளர்கள் அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

வர்த்தகமும் வாணிபமும்.

பிரிவு 302.—மாநிலங்களுக்கிடையே வர்த்தகத்தின்மீதும் வாணிபத்தின் மீதும் பிறதொடர்புகள்மீதும் தடைகள் விதிக்க நாடாளுமன்றத்திற்கு இப்பிரிவு அதிகாரம் அளிக்கிறது. இது நீக்கப்பட வேண்டும்.

பிரிவு 304 (பி).—மாநிலச் சட்டமன்றம் இயற்றும் சட்ட வரைவுகளுக்கு குடியரசுத் தலைவரின்முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று கோரும் 304 (பி) பிரிவின் நிபந்தனை நீக்கப்பட வேண்டும்.

பொது ஒழுங்கமைதி.

மாநில அரசு கேட்டுக்கொள்வதன் பேரிலோ அதன் இசைவின்பேரிலோ அன்றி மற்றப்படி எந்த ஒரு மாநிலத்திற்கும் மத்திய ரிசர்வ் காவல் படை அனுப்பப்படக் கூடாது.

சட்டமன்ற பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாநிலச் சட்டமன்றத்தின் தேர்தல்களை நடத்துவதற்கான பணியாளர் அமைப்பு.

1950–ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951–ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் ஆகிய இரு சட்டங்களின் பிரிவுகளும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்குப் பொருந்துகின்ற வகையில் திருத்தப்படவேண்டும். மாநிலச் சட்ட மன்றங்களின் தேர்தல் குறித்து, மாநிலச் சட்டமன்றங்கள் சட்டங்கள் இயற்ற முழு உரிமை பெற்றவையாக இருக்கவேண்டும்.

மாநிலங்களுக்கிடையே ஏற்படும் நீர்பற்றிய தகராறுகள்.

பல மாநிலங்களிடையே ஓடும் ஓர் ஆறு குறித்து நீர்பற்றிய தகராறு எழுமாயின் சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு கலந்து பேசப்படும்போது, குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தங்கள் ஏதும் ஏற்படாவிடில், குறித்த காலவரைக்குள் பிரதமரால் அப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும். உடன்படிக்கை ஏதும் செய்யப்படாவிடில், குறிப்பிட்ட காலத்திற்குள் மைய அரசே இத் தகராறை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். இத் தகராறு குறித்த வழக்கினை மைய அரசு கவனிக்கத் தவறினால் தகராறுக்குரிய தரப்பினர் எவரேனும் அவ் வழக்கினை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பலாம். அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் வழக்கு உச்ச நீதிமன்ற அனைத்து நீதிபதிகளும் கொண்ட ஆயத்தால் விசாரிக்கப்பட வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்கு வேண்டும் வகையில் விதிகள் இயற்றப்பட வேண்டும்.

ஆட்சிப் பகுதியிலுள்ள கடற் படுகை.

ஒரு மாநிலத்தை ஒட்டி அதன் ஆட்சிப் பகுதியான கடலின் கீழே உள்ள நிலங்கள், கனிப் பொருள்கள், விலை மதிப்புள்ள பிற பொருள்கள் யாவும் அந்த மாநிலத்திற்கே உரியனவாகும் வகையில் பிரிவு 297 திருத்தப்பட வேண்டும்.

மைய நிர்வாகத் துறை.

நாடாளுமன்ற முறைக்கும், அது சம்பந்தப்பட்ட அனைத்து முறைகளுக்கும் ஏற்றதாய், நாட்டின் பல்வேறு வட்டாரங்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறும் வகையில், மைய அமைச்சரவை அமையும் வகையில் மரபுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அமைச்சரவைத் தரம் உள்ள மைய அமைச்சர்களின் எண்ணிக்கை, எந்த ஒரு தனி மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்படக் கூடாது.

1974 ஏப்ரல் 23]

மைய, மாநில உறவு குறித்துப் பரிசீலிக்க நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவால், திரு. எம். சி. செதல்வாட் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழு, மாநிலப் பட்டியல்கள், பொதுப் பட்டியல்கள் விவகாரங்களைக் கவனிக்கின்ற மைய அமைப்புகளின் பணிபற்றி ஒரு முழு அத்தியாயத்தில் விளக்கி உள்ளது. ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி, வேலை இனங்கள் மாநிலங்களுக்கிடையே பரவலாக்கப்பட வேண்டும். மைய அரசு வழிகாட்டியாகவும், திட்ட ஆலோசகராகவும், பணி மதிப்பீட்டாளராகவும், அமைதல் வேண்டும். மாநிலப் பட்டியலின் வரம்பிற்குள் வருகிற பொருள்களைப் பொறுத்தமட்டில் மைய அமைச்சகங்கள், மையத் துறைகள் ஆகியவற்றின் பணி குறைக்கப்பட வேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது. மாநிலப் பட்டியலின் கீழ்வரும் எப்பொருளைக் குறித்தும் பரிசீலிப்ப தற்காக மையத்தில் தனி அமைச்சகமோ துறையோ இருக்க வேண்டிய தேவை இல்லை.

அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம்.

அரசியலமைப்புச் சட்டத்தில் எந்த ஒரு விதித்துறை சம்பந்தப்பட்டதாய் இருப்பினும், அதில் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தமும் அனைத்து மாநிலங்களாலும் ஏற்புறுதி பெறவேண்டும்.

சட்டமியற்றும் அதிகாரம்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 7-வது இணைப்பில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் என்ற தலைப்புகளின்கீழ் நாடாளு மன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் சட்டமியற்றும் அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்டு, நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு கொள்கை, மாநிலங்களுக்கிடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகியவகைகளைக் குறித்த அதிகாரங்கள் மாத்திரம் கூட்டாட்சி அரசுக்கு ஒதுக்கப்பட்டு, எஞ்சிய அதிகாரங்கள் உட்பட மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மட்டுமே இருக்கும் வகையில் உண்மையான கூட்டாட்சி அரசை நிறுவும் நோக்குடன் மேற்சொன்ன அதிகார விவரப் பட்டியலை ஆய்ந்து, அவற்றைக் கூட்டாட்சி பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் என்ற தலைப்புகளின்கீழ் வகுத்துத், தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கூட்டாட்சிப் பட்டியல்.

சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமாக மைய அரசுப் பட்டியல் பின்வரும் பதிவுகள் கூட்டாட்சிப் பட்டியலில் அப்படியே வைத்துக் கொள்ளப்படவேண்டும்.

பாதுகாப்புக்குப் படை திரட்டுவது உட்பட இந்தியப் பாதுகாப்பும், அது சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பணியும், போர்க்காலங்களில் உசிதமாய் இருக்கக் கூடிய எல்லா வகையான நடவடிக்கைகளும், அவை தொடரப்படுவதும், போர்க்காலம் முடிந்ததும் ராணுவத்தைக் கலைப்பதற்கான நடவடிக்கை களும் ;

மைய அரசின் கப்பற்படை, ராணுவப்படை, விமானப்படைகள், அதைச் சேர்ந்த ஆயுதப்படை ;

பாளையப் பகுதிகளை வரையறுத்தல், அந்தப் பகுதிகளில் உள்ளாட்சி, அந்தப் பாளையப் பகுதிகளுக்குள் அதிகார மன்றங்கள் அமைப்பும் அதன் அதிகாரங்களும், அந்தப் பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாடு உட்பட வீட்டு வசதியை முறைப்படுத்துதல் :

கப்பற்படை, ராணுவப்படை, விமானப்படைப் பணிகள் ;

ஆயுதங்கள், சுடு படைக்கலன்கள், துப்பாக்கி மருந்துகள், வெடி மருந்துகள் ;

நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்த மட்டில், அணுசக்தியும், அதன் உற்பத்திக்கு அவசியமான கனிவள வாயில்களும் ;

பாதுகாப்பு நோக்கங்களுக்காக அல்லது போர் தொடருவதற்காக அவசியமாய் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் ;

மத்தியப் புலனாய்வுக் குழுவும், புலனாய்வும் ;

பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள் அல்லது இந்தியப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தடுப்புக்காவல், அத்தகைய தடுப்புக் காவலுக்கு உட்பட்ட நபர்கள் ;

அயல்நாட்டு உறவுகள், அயல்நாடு ஒன்றுடன் மைய அரசைத் தொடர்புபடுத்தும் விவகாரங்கள் ; அரசியல், அயல்நாட்டு வணிகப் பிரதி நிதித்துவம் ;

ஐக்கிய நாடுகள் சபை.

உலக நாடுகள் மாநாடுகளிலும், சங்கங்களிலும் ஏனைய அமைப்பு களிலும் கலந்து கொண்டு அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல் படுத்துதல் ;

அயல்நாடுகளுடன் உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் எழுதிக் கொண்டு அந்த உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும், நடைமுறை மரபுகளையும் செயல்படுத்துதல் ;

போரும், அமைதியும் ;

அயல்நாட்டு அதிகார வரம்பு ;

குடியுரிமையும், அயல் நாட்டவர்களுக்குக் குடியுரிமை வழங்குதலும் ;

நாடு கடந்து வந்த குற்றவாளிகளை அந்நாட்டவரிடமே ஒப்படைத்தல் ;

1974 ஏப்ரல் 23]

இந்தியாவில் சேர்த்துக்கொள்ளுதல், இந்தியாவிலிருந்து வெளிநாட்டிற்குக் குடியேறுதல், இந்தியாவிலிருந்து வெளிநாட்டிற்குக் கடத்திவிடுதல், கடவுச் சீட்டுகளும் விசாக்களும் ;

இந்தியாவுக்கு வெளியே உள்ள இடங்களுக்கு யாத்திரைகள் ;

கடலில் அல்லது விமானத்தில் செய்யப்படும் கொள்ளைக் குற்றங்களும், பிற குற்றங்களும் ;

நிலத்தில், அல்லது கடலில் அல்லது விமானத்தில் பன்னாட்டுச் சட்டத்திற்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள் ;

மாநிலங்களிடையே ரெயில்வேக்கள் ;

கடல் சார்ந்த இடங்களில் கப்பல் வாணிகமும், கப்பல் போக்குவரத்தும் ; கப்பல் வாணிகத் துறையில் கல்வி அளிப்பதும் பயிற்சி அளிப்பதும் அதனை முறைப்படுத்துதலும் ; கலங்கரை விளக்கங்கள், சரக்கு இறக்கப்பட்ட கப்பல்கள், வழிகாட்டும் விளக்குகள் உட்பட கலங்கரை விளக்கங்கள், கப்பல், விமானப் பாதுகாப்புக்கான வேறு ஏற்பாடுகள் ;

பெரிய துறைமுகங்களும் அவற்றின் எல்லைகளை வரையறுத்தல் உட்பட துறைமுக அதிகார மன்றங்களின் அமைப்பும், அதன் அதிகாரங்களும் ;

துறைமுகத் தொற்றுத் தடைக்காப்பும் அது சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளும், மாலுமிகள், மருத்துவ மனைகள், கடல் வணிகர் மருத்துவ மனைகள் ;

விமானப் போக்குவரத்து, விமானம், விமானங்கள் செலுத்துதல் ; விமானத் தளங்களை அமைத்தல் ; விமான தளங்களை முறைப்படுத்துதலும், சீரமைத்தலும் ; விமான இயல் கல்வி அளித்தல், அக்கல்விப் பயிற்சியை முறைப்படுத்தல் ;

மாநிலங்களுக்கு இடையே செல்லும் ரயில், கப்பல், விமானங்களில் பயணிகளையும், சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல் ;

தபால், தந்தி, தொலைபேசிகள் ;

மைய அரசின் சொத்தும் அதிலிருந்து கிடைக்கும் வருவாயும் ; ஒரு மாநிலத்தில் உள்ள சொத்தைப் பொறுத்தவரையில், இது மாநில அரசு சட்டமியற்றுவதற்கு உட்பட்டதாகும் ;

இந்திய சமஸ்தான மன்னர்களின் எஸ்டேட்டுகளுக்கான கோர்ட் ஆஃப் வார்டுகள் ;

மைய அரசின் பொதுக் கடன் ;

நாணயம், நாணயம் அச்சிடுதல், சட்டப்படி செலாவணியாகும் நாணயங்கள், அன்னியச் செலாவணி ;

அன்னியக் கடன்கள் ;

மைய ரிசர்வ் முறையில் அமைந்த ரிசர்வ் வங்கி ;

அயல் நாடுகளுடன் வர்த்தகம், வாணிகம் ; சுங்க எல்லைகளுக்கு அப்பால் இறக்குமதியும் ஏற்றுமதியும் ; சுங்க எல்லைகளின் பொருள் விளக்கம் ;

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருள்களின் தர வரையறைகளைக் குறிப்பிடுதல் ;

ஆட்சிப் பகுதியிலுள்ள கடலுக்கு அப்பால் மீன் பிடித்தலும் மீன்வளமும் ;

மைய அரசுப் பணியாளர்கள் தொடர்பான தொழில் தகராறுகள் ;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கக் காலத்தில் இருந்த தேசிய நூலகம், இந்திய அரும்பொருள் காட்சிசாலை, இம்பீரியல் போர் அரும்பொருள் காட்சிசாலை, விக்டோரியா நினைவுச் சின்னம், இந்தியப் போர் நினைவுச் சின்னம் போன்ற அமைப்புகள் ;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்க காலத்தில் இருந்த காசி இந்து பல்கலைக் கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகம், டில்லி பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்கள் ;

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ;

மைய அரசுப் பணிகளும் மைய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவும் ;

மைய அரசு ஓய்வூதியங்கள், அதாவது, இந்திய அரசால் அல்லது இந்தியத் தொகுதி நிதியிலிருந்து வழங்கப்படத் தக்க ஓய்வூதியங்கள் ;

நாடாளுமன்றத்திற்கும், குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் பதவிகளுக்கும் நடைபெறும் தேர்தல்கள் ;

அத்தகைய தேர்தல்கள் தொடர்பான தேர்தல் ஆணைக் குழு ;

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்கள் அவையின் தலைவர், துணைத் தலைவர், மக்களவையின் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்கு வழங்கப்படும் சம்பளங்களும் படிகளும் ;

[1974 ஏப்ரல் 25

மாநில அரசுப் பட்டியல்.

(1) மாநில அரசுப் பட்டியலில் வைத்துக் கொள்ளப்படும் சட்டமியற்றும் அதிகாரங்கள் :—

மாநில அரசுப் பட்டியலில் சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமான பின்வரும் பதிவுகள் வைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பொது ஒழுங்கு (சிவில் அதிகாரத்திற்கு உதவியாக கடற்படை, இராணுவம் அல்லது விமானப் படைகள் அல்லது யூனியனின் ஏனைய ஆயுதப் படை ஆகியவற்றைப் பயன்படுத்துதல் இதில் சேராது).

இரயில்வே காவல் படை, கிராமக் காவல் படை உட்பட காவல் படைகள்.

நீதி, நிர்வாகம்; உச்ச நீதிமன்றம் நீங்கலாக அனைத்து நீதிமன்றங்களின் அமைப்பும் நிர்வாகமும்; உயர் நீதிமன்ற அதிகாரிகளும் பணியாளர்களும்; வாடகை, வருவாய் நீதிமன்றங்களின் (Rent and Revenue Courts) வழக்கு நடைமுறைகள்; உச்ச நீதிமன்றம் நீங்கலாக, எல்லா நீதிமன்றங்களிலும் வசூலிக்கப்படும் கட்டணங்கள்.

சிறைச் சாலைகள், சீர்திருத்தப் பள்ளிகள், இளைஞர் சீர்திருத்தப் பள்ளிகள், அவையொத்த பிற அமைப்புகள், அவற்றில் வைக்கப்பட்டுள்ள நபர்கள், சிறைச்சாலைகளையும் பிற நிறுவனங்களையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பிற மாநிலங்களுடன் செய்து கொள்ளப்படும் ஏற்பாடுகள்.

உள்ளாட்சி, அதாவது, நகராட்சி மன்றங்களின் அமைப்பும் அதிகாரங்களும், மேம்பாட்டுப் பொறுப்புக் கழகங்கள், மாவட்ட வாரியங்கள், சுரங்க ஏற்பாட்டு அதிகார மன்றங்கள், சுயேச்சையான உள்ளாட்சி அல்லது கிராம நிர்வாகத்திற்கான ஏனைய உள்ளாட்சி மன்றங்கள்.

பொதுச் சுகாதாரமும் துப்புரவும்; மருத்துவ மனைகளும் மருந்தகங்களும்;

இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களுக்கு யாத்திரைகள் செய்தல்;

போதையூட்டும் மதுவகைகள், அதாவது, போதையூட்டும் மதுவகைகளை உற்பத்தி செய்தல், தயார் செய்தல், வைத்திருத்தல், போக்குவரத்து செய்தல், வாங்குதல், விற்பனை செய்தல்.

உடல் ஏலாமையுற்றவர்களுக்கும் வேலையில் அமர்த்தப்பட இயலாதவர்களுக்கும் நிவாரணம் அளித்தல்;

புதைத்தலும் இடுகாடுகளும்; எரியூட்டலும் சுடுகாடுகளும்;

பல்கலைக் கழகங்கள் உட்பட, கல்வி.

1974 ஏப்ரல் 23]

நாடாளுமன்றத்தின் அவைகள் ஒவ்வொன்றுக்கும், அவை உறுப்பினர்களுக்கும், ஒவ்வொரு அவையின் குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், சிறப்புரிமைகள், சட்ட விலக்கு உரிமைகள் ; நாடாளுமன்றம் நியமிக்கும் நாடாளுமன்றக் குழுக்கள் அல்லது ஆணைக் குழுக்கள் முன்பாக சாட்சியம் அளிப்பதற்கு அல்லது ஆவணங்கள் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நபர்கள் வந்திருக்க வேண்டுமென்ற முறையை செயலுக்குக்கொண்டு வருதல் ;

குடியரசுத் தலைவரின் சம்பளம், படிகள், சிறப்புரிமைகள், வராமலிருப்பது தொடர்பான உரிமைகள் ; மைய அரசின் அமைச்சர்களுக்குரிய சம்பளங்களும், படிகளும் ; மைய அரசின் தலைமைத் தணிக்கையாளரது (**Comptroller and Auditor-General**) சம்பளங்கள், படிகள், விடுப்புகள் தொடர்பான உரிமைகள், ஏனைய பணி நிபந்தனைகள் ;

மைய அரசின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் ;

உச்ச நீதி மன்றத்தின் அமைப்பு, ஒழுங்கு, நிர்வாகம், அதிகார வரம்பு (நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான அதிகாரம் உட்பட); அதிலிருந்து பெறப்படும் கட்டணங்கள் ; உச்ச நீதிமன்றத்தில் வழக்குரைஞர் தொழில் புரியும் தகுதி பெற்றுள்ளவர்கள் ;

சம்பந்தப்பட்ட மாநிலத்தின் அனுமதியைப் பெற்று மைய ஆட்சிப் பகுதிக்கு ஓர் உயர்நீதி மன்றத்தின் அதிகார வரம்பை விரிவுபடுத்தலும், உயர்நீதி மன்றம் பெற்றுள்ள அதிகார வரம்பை நீக்கி விடுதலும் ;

ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்தில் குடியேறுதல் ; மாநிலங்களுக்கிடையே தொற்றுநோய்த் தடைகாப்பு ;

ஏற்றுமதித் தீர்வைகள் உட்பட, சுங்கத் தீர்வைகள் ;

மைய அரசுப் பட்டியல் தொடர்பான பொருள் குறித்த சட்டத்திற்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள் ;

மைய அரசுப் பட்டியலில் கண்டுள்ள ஒரு பொருள் தொடர்பான காரியத்திற்கு மேற்கொள்ளப்படும் விசாரணைகள், ஆய்வுகள், புள்ளி விவரங்கள் ;

மைய அரசுப் பட்டியல் குறித்த பொருள் தொடர்பாக, இந்திய உச்ச நீதி மன்றம் நீங்கலாக, எல்லா நீதிமன்றங்களும் பெற்றுள்ள அதிகார வரம்பும் அதிகாரங்களும், கப்பற் படை ஆட்சிக் குழு அதிகார வரம்பு ;

மைய அரசுப் பட்டியல் குறித்த ஒரு பொருள் தொடர்பாக வசூலிக்கப்படும் கட்டணங்கள் ; ஆனால், எந்தவொரு நீதிமன்றத்திலும் வசூலிக்கப்படும் கட்டணங்கள் இவற்றில் அடங்கா.

1974 ஏப்ரல் 23]

மாநில அரசு கட்டுப்பாட்டின் கீழுள்ள அல்லது மாநில அரசின் செலவில் நடைபெறும் நூலகங்கள், அரும்பொருட்காட்சி சாலைகள்1 அவை போன்ற பிற நிறுவனங்கள்; பண்டைய சரித்திரப் புகழ் வாய்ந்த நினைவுச் சின்னங்கள், பதிவேடுகள்.

போக்குவரத்து அதாவது சாலைகள், பாலங்கள், ஓடத்துறைகள் ஏனைய போக்குவரத்துகள், நகராட்சி டிராம் வண்டிப் பாதை, சாலைகள் உள்நாட்டு நீர் வழிகள், கப்பற்பாதை, இயந்திர சக்தியினால் இயக்கப்படும் வண்டிகள் நீங்கலாக ஏனைய வண்டிகள்.

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, பூச்சித் தடுப்பு, பயிர் நோய்த் தடுப்பு உட்பட வேளாண்மை.

கால்நடைகளைப் பேணுதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல், கால்நடை நோய்த்தடுப்பு, கால்நடை மருத்துவப் பயிற்சி, வைத்தியம்.

கால்நடை அடைப்புக் கொட்டகைகள் கால்நடைகள் அத்து மீறுவதைத் தடைப் படுத்துதலும்.

தண்ணீர், அதாவது தண்ணீர் வழங்கல் கால்வாய்களும், வடிகால் களும், கரைகளும், நீர்த்தேக்கங்களும், நீர் சக்தியும்.

நிலம், அதாவது நிலத்திலோ அல்லது நிலத்தின் மீதோ, உள்ள உரிமைகள் நிலச்சுவான்தாருக்கும் குடியானவனுக்கும் உள்ள தொடர்பு உட்பட நில உரிமை முறைகளும் குத்தகை வசூலும்; வேளாண்மை நிலத்தை மாற்றுதலும் பராதீனம் செய்தலும்; நில மேம்பாடும் வேளாண்மைக் கடன்களும், குடியேற்றம்.

காடுகள்.

வனவிலங்குகளையும் பறவைகளையும் பாதுகாத்தல்.

மீனளங்கள்.

1-வது பட்டியலில் கண்ட விதித்துறைகளுக்குட்பட்டு கோர்ட் ஆஃப் வார்டுகள், வில்லங்கத்திற்குட்பட்டவைகளும் ஜப்தி செய்யப்பட்டவை களுமான எஸ்டேட்டுகள்;

சுரங்கங்களை முறைப்படுத்துதலும் கனிப் பொருள்களை மேம்பாடு செய்தலும்.

1-வது பட்டியலில் கண்ட விதித்துறைகளுக்குட்பட்ட தொழில்கள்.

எரிவாயு, எரிவாயு உற்பத்தித் தொழிற்சாலைகள், மாநிலத்திற்குள் வியாபாரமும் வாணிகமும் பண்டங்களின் உற்பத்தி, வழங்கல், வினி யோகம், அங்காடிகளும் சந்தைகளும்.

எடைகளும் அளவைகளும்—தர நிர்ணயம் நீங்கலாக.

லேவாதேவித் தொழிலும் கடன் கொடுப்பவர்களும்; விவசாயிகளின் கடன் நிவாரணம்.

விடுதிகளும் விடுதிக்காரர்களும்.

கழகங்களையும், பல்கலைக் கழகங்களையும் சட்டப்படி இணைத்தலும் முறைப்படுத்துதலும் கலைத்தலும்; சட்டப்படி இணைக்கப்பட்டிராத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமய சங்கங்களும் கழகங்களும்; கூட்டுறவுச் சங்கங்கள்.

அரங்குகளும், நாடக நிகழ்ச்சிகளும்; திரைப்படங்கள், விளையாட்டுகள், வேடிக்கைகள் கேளிக்கைகள்.

பந்தயம் கட்டுதலும் சூதாடுதலும்.

மாநிலத்திடம் நிலைபெற்றிருக்கும் அல்லது அதன் வசமிருக்கும் பணிகளும் நிலங்களும் கட்டிடங்களும்.

மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள்.

சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், சட்ட மன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவை இருந்தால் மேலவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் சம்பளங்களும் படிகளும்.

சட்டமன்றப் பேரவை, உறுப்பினர்கள் குழுக்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், குழுக்கள் ஆகியவற்றின் அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் பாதுகாப்புகளும்; மாநிலச் சட்டமன்றக் குழுக்களின் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கோ ஆவணங்கள் கொடுப்பதற்கோ நபர்கள் வந்திருக்கும்படி செய்தல்.

மாநில அமைச்சர்களின் சம்பளங்களும் படிகளும்.

மாநில அரசுப் பணிகள்; மாநில அரசு பணியாளர் தேர்வு ஆணைக் குழு.

மாநில ஓய்வூதியங்கள், அதாவது மாநில அரசால் அல்லது மாநிலத்தின் தொகு நிதியிலிருந்து கொடுக்கத்தக்க ஓய்வூதியங்கள்.

மாநிலத்தின் பொதுக் கடன்.

புதையல்.

1974 ஏப்ரல் 23]

நில வரி—வரி விதித்தலும், வசூலித்தலும், நிலப் பதிவேடுகளை பேணி வருதலும்; நில வரிக்கான ஆய்வு நில உரிமைப் பதிவேடுகள் வரிகளைப் பராதீனம் செய்தல்.

வேளாண்மை வருமான வரிகள்.

வேளாண்மை நிலத்திற்கு வாரிசுரிமை குறித்த வரிகள்.

வேளாண்மை நிலம் குறித்த மரண வரி.

நிலங்கள், கட்டிடங்கள் இவற்றின் மீது வரிகள்.

கனிப் பொருள்கள் பற்றிய உரிமைகள் மீது வரிகள்.

மாநிலத்தில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பின்வரும் பண்டங்கள்மீது ஆயத் தீர்வைகளும், இந்தியாவில் வேறெங்கணும் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதே மாதிரியான பண்டங் களின் மீது அதே வீதங்களின்படியோ அல்லது குறைந்த வீதங்களின் படியோ எதிர்த்தீர்வைகள்—

(அ) மனிதர்கள் உட்கொள்ளும் மது பானங்கள்.

(ஆ) அபினும், இந்திய சணலும், போதை உண்டாக்கும் பிற மருந்துச் சரக்குகளும் போதைப் பொருள்களும்.

உள்ளூர்ப் பகுதிக்குள் செலவழிப்பதற்கோ பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ பொருள்களைக் கொண்டுவருவதன்மீது வரிகள்.

மின்சாரப் பயன் வரி அல்லது மின்சார விற்பனை வரிகள்.

செய்தித் தாள்கள் நீங்கலாக ஏனைய பொருள்களின் விற்பனை அல்லது வாங்குதல் மீது வரிகள். விளம்பரங்கள் மீது வரிகள். சாலை அல்லது உள்நாட்டு நீர் வழிகள் மூலமாக ஏற்றிச் செல்லப்படும் பொருள்கள் மீதும் பயணிகள் மீதும் வரிகள்.

சாலைகளில் பயன்படுத்தத் தக்க வண்டிகளின் மீது—டிராம் வண்டிகள் உட்பட விசையினால் இயக்கப்பட்டாலும் இயக்கப்படாவிட்டாலும்—வரிகள்.

விலங்குகளின் மீதும் படகுகளின் மீதும் வரிகள்.

சுங்க வரிகள்.

தொழில்கள், வாணிபங்கள், அலுவல்கள், வேலைகள் இவைகளின் மீது வரிகள்.

[1974 ஏப்ரல் 23

தலைக்கட்டு வரிகள்.

ஆடம்பரப் பொருள்களுக்கு வரிகள், வேடிக்கைகள், கேளிக்கைகள், பந்தயம் கட்டுதல், சூதாட்டம் இவைகளின் மீது விதிக்கப்படும் வரிகள் உட்பட.

ஆவணங்கள் குறித்து முத்திரைத் தாள் தீர்வை வீதங்கள்.

இப் பட்டியலில் உள்ள பொருள்களில் எதுபற்றியேனும் செய்த சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள்.

இப் பட்டியலில் உள்ள பொருள்களில் எது பற்றியேனும் எல்லா நீதிமன்றங்களின்—உச்ச நீதிமன்றம் தவிர—அதிகார வரம்பும் அதிகாரங்களும்.

இப் பட்டியலில் உள்ள பொருள்களில் எதுபற்றியேனும் கட்டணங்கள், ஆனால் நீதிமன்றத்தில் வாங்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

(2) தற்போதைய மைய அரசுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படும் சட்டமியற்றும் அதிகாரங்கள்

மைய அரசுப் பட்டியலில் சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமான பின்வரும் பதிவுகள் மாநில அரசுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளன

பாதுகாப்புக் காரியங்கள் தவிர மற்ற காரியங்களுக்காக அணுசக்தியும், கனிப் பொருள் வாயில்களும்.

மாநிலத்திற்குள் அமைந்துள்ள ரயில்வேக்கள்.

மாநிலத்திற்குள் அமைந்துள்ள நெடுஞ்சாலைகள் அனைத்தும்.

விசையினால் இயக்கப்படும் மரக்கலங்கள் தொடர்பாக உள்நாட்டு நீர் வழிகளில் செல்லும் கப்பல்களும் அவற்றைச் செலுத்துதலும்; அத்தகைய நீர் வழிகளில் சாலை விதிகள்.

மாநிலத்திற்குள் பயணிகளையும் சரக்குகளையும் ரயில்வேக்களில் எடுத்துச் செல்லுதல்.

கம்பி இல்லாத் தந்தி, ஒலிபரப்பு, டெலிவிஷன், இவை போன்ற ஏனைய செய்திப் பரப்பு முறைகள்.

சேமிப்பு வங்கி.

பரிசுச் சீட்டுகள்.

மாநிலங்களுக்கிடையே வர்த்தகம், வாணிபம்.

1974 ஏப்ரல் 23]

வங்கி, காப்புறுதிக் கழகங்கள், நிதிக் கார்ப்பரேஷன்கள் உட்பட, தொழில் கழகங்களை இணைத்தல், முறைப்படுத்துதல், கலைத்து விடுதல்.

வர்த்தகக் கழகங்களாயிருப்பினும் இராவிடினும் அவற்றை இணைத்தல், முறைப்படுத்துதல், கலைத்துவிடுதல்.

வங்கி நடவடிக்கைகள்.

காப்புறுதி.

பங்கு மாற்று நிலையங்கள், வாய்தா மார்க்கெட்டுகள்.

எண்ணெய்ப் புலங்கள், கனி எண்ணெய்ப் பொருள் வாயில்கள் இவற்றை முறைப்படுத்துதலும் வளர்ச்சியடையச் செய்தலும்.

பெட்ரோலியமும், பெட்ரோலியப் பொருள்களும், ஏனைய திரவங்களும் பொருள்களும்.

சுரங்கங்களிலும் எண்ணெய் வயல்களிலும் வேலை செய்தலையும் பாதுகாப்பையும் முறைப்படுத்துதல்.

ஆட்சிப் பகுதியில் அடங்கிய கடற்பகுதிக்குள் மீன் பிடித்தலும் மீனளங்களும்.

உப்பு உற்பத்தி, வழங்கல், பங்கீடு ; உப்பு உற்பத்தி, வழங்கல், பங்கீடு ஆகியவற்றை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்தலும்.

அபினி சாகுபடி, உற்பத்தி, ஏற்றுமதிக்கான விற்பனை.

திரைப்படங்களைக் காட்டுவதற்கு அனுமதி கொடுத்தல்.

அறிவியல் அல்லது தொழில் நுட்பக் கல்விக்கான நிலையங்கள்.

காவல்துறை அதிகாரிகளின் பயிற்சி உட்பட தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது தொழில் நுட்பப் பயிற்சிக்கான நிறுவனங்கள் ; அல்லது சிறப்பு ஆய்வுகள் அல்லது ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான பயிற்சி நிலையங்கள் ; அல்லது குற்றங்களைப் புலனாய்வு செய்தல் அல்லது கண்டுபிடித்தல் குறித்த அறிவியல் அல்லது தொழில் நுட்ப உதவிக்கான நிலையங்கள்.

உயர்கல்வி அல்லது ஆராய்ச்சிக்கான நிறுவனங்கள், விஞ்ஞான நிறுவனங்கள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் இவற்றின் தரங்களை நிர்ணயித்தல்.

பண்டைய நினைவுச் சின்னங்கள், வரலாற்றுச் சின்னங்கள், ஆவணங்கள், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் சிதைவுகளும்.

மாநிலச் சட்ட மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்கள், இத்தகைய தேர்தல்கள் குறித்த தேர்தல் ஆணைக் குழு.

மாநிலக் கணக்குகளின் தணிக்கை.

(உயர்நீதி மன்றத்தின் விடுமுறை நாட்கள் உட்பட) உயர்நீதி மன்றத்தின் அமைப்பும் ஒழுங்கும்; உயர்நீதி மன்றத்தின் அதிகாரிகள், பணியாளர்கள் குறித்த விதித்துறை; உயர்நீதி மன்றத்தின் முன் வழக்குரைஞர் தொழில் நடத்த உரிமை பெற்றவர்கள்.

வருமான வரி.

சாராயம் அல்லது பிற பொருள் அடங்கிய மருந்து ஒப்பனைப் பொருள்கள் உட்பட, புகையிலை, ஏனைய பொருள்களின் மீது ஆயத்தீர்வை, கார்ப்பரேஷன் வரி.

தனியார், கம்பெனிகள் ஆகியோரின் இருப்புகளின் மூலதன மதிப்பின் மீது விதிக்கப்படும் வரிகள்; கம்பெனிகளின் மூலதனத்தின் மீது விதிக்கப்படும் வரிகள்.

சொத்துக்களின் மீதான மரண வரி.

சொத்து வாரிசுரிமை சம்பந்தமான வரிகள்.

ரயில், கப்பல் அல்லது விமானம் மூலமாக ஏற்றிச் செல்லப்படும் பண்டங்கள், பயணிகள் மீது இறுதிமுனை வரி (Terminal Tax); மாநிலத்திற்குள் ரயில்வே கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள் மீது வரி.

பங்கு மாற்று நிலையங்கள், வாய்தா மார்க்கெட்டுகள் இவற்றின் விவகாரங்களின் மீது முத்திரைத்தாள் தீர்வை நீங்கலாகப் பிற வரிகள்.

மாற்று உண்டியல்கள், காசோலைகள், கடன் உறுதிச் சீட்டுகள், கப்பல் சரக்குப்பட்டிகள், பண அனுமதிச் சீட்டுகள், இன்ஷூரன்ஸ் பாலிசிகள், பங்குகள் மாற்றம், கடன் ஈட்டுறுதி ஆவணங்கள், பிரதிநிதிச் சீட்டுகள், ரசீதுகள் இவை பற்றிய முத்திரைத்தாள் தீர்வை வீதங்கள்.

செய்திப் பத்திரிகைகள் விற்றல் அல்லது வாங்குதல் மீதும் அவற்றில் வெளியிடப்படும் விளம்பரங்கள் மீதும் விதிக்கப்படும் வரிகள்.

செய்தித் தாள்கள் நீங்கலாகப் பிற பண்டங்களை விற்றல் அல்லது வாங்குதல் மீது விதிக்கப்படும் வரிகள்.

I, III பட்டியல்களில் குறிப்பிடப்படாத வரிகள் உட்பட, எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும்.

1974 ஏப்ரல் 23]

(3) கூட்டுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படும் சட்டமியற்றும் அதிகாரங்கள்.

பொதுப்பட்டியலில் சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமான பின்வரும் பதிவுகள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளன.

குற்றவியல் சட்டம் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் தொடக்கத்தில் இந்திய குற்றிவியல் சட்டம் சேர்க்கப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் உட்பட—ஆனால் மைய அரசுப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்த சட்டங்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் நீங்கலாக; சிவில் அதிகாரத்திற்குத் துணையாக மைய அரசின் கடற்படைகள், ராணுவப் படைகள் அல்லது விமானப் படைகள் அல்லது வேறு எந்த ஆயுதப்படைகளையாவது பயன்படுத்துதல் நீங்கலாக.

குற்றவியல் வழக்கு முறை—இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கத்தில் குற்றவியல் வழக்கு முறைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த பொருள்கள் அனைத்தும் உட்பட.

நாட்டின் பாதுகாப்பு, பொது அமைதியைப் பாதுகாத்தல் அல்லது சமுதாயத்திற்கு இன்றியமையாத பொருள்கள் வழங்குதலையும் பணிகளையும் பாதுகாத்தல், இவை பற்றிய காரியங்களுக்காக தடைப் பாதுகாவல்; அத்தகைய பாதுகாவலுக்கு உட்பட்டவர்கள்.

விவாகமும் விவாக ரத்தும்; சிசுக்கள், மைனர்கள்; சுவீகாரம்; உயில், உயிலற்ற நிலை, வாரிசுரிமை; பிரிவினையாகாத குடும்பம், பாகப் பிரிவினை; இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக நீதி மன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் எந்தெந்தப் பொருள்கள் குறித்து சொந்த உரிமைகள் சட்டத்திற்கு உட்பட்டிருந்தார்களோ அப்பொருள்கள் அனைத்தும்.

சொத்து மாற்றம்; பத்திரங்கள், ஆவணங்கள் பதிவு.

ஒப்பந்தங்கள்—கூட்டுப் பங்கு, முகமை, பொருள்களை ஏற்றிச்செல்லுவதற்கான ஒப்பந்தங்கள், ஏனைய வகை சிறப்பு ஒப்பந்தங்கள் உட்பட.

வழக்குத் தொடரக் கூடிய தவறுகள்.

நொடிப்பு நிலையும் கடன் தீர்க்கச் சக்தியின்மையும்.

பொறுப்புக் கழகங்களும் அறங்காவலர்களும்.

அட்மினிஸ்ட்ரேட்டர் ஜெனரல்களும் பொறுப்புச் சொத்து ஆட்சியர்களும்.

சாட்சியங்களும் உறுதி மொழிகளும். சட்டங்களையும், பொதுக் காரியங்களையும், ஆவணங்களையும் நீதி மன்ற நடவடிக்கைகளையும் அங்கீகரித்தல்.

இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் உரிமையியல் நடைமுறைச் சட்டக் கோவையில் சேர்க்கப்பட்டுள்ள எல்லாப் பொருள்களும் உட்பட உரிமையியல் நடைமுறை, கால வரம்பு, நடுவர் முடிவு.

நீதிமன்ற அவமதிப்பு ; உச்ச நீதிமன்ற அவமதிப்பு இதில் அடங்காது.

நாடோடித் தன்மை ; நாடோடி இனத்தவரும், இடம் விட்டு இடம் செல்லும் இனத்தவரும்.

புத்தி சுவாதீனமின்மையும், மூளை வளர்ச்சியடையாமையும்—புத்தி சுவாதீனமற்றவர்களுக்கும், மூளை வளர்ச்சி அடையாதவர்களுக்கும் சிகிச்சையளிக்கும் இடங்கள், அவர்களைப் பேணும் இடங்கள் ஆகியவை உட்பட.

விலங்குகளுக்குத் தீங்கு இழைப்பதைத் தடுத்தல்.

உணவுப் பொருள்களிலும் ஏனைய பண்டங்களிலும் கலப்படம் செய்தல்.

மருந்துகளும், நச்சுப் பொருள்களும்.

பொருளாதார, சமூகத் துறைகளில் திட்டமிடுதல்.

வணிக, தொழில் ஏகபோக உரிமைகளும், வணிகச் சங்கக் கூட்டு நிறுவனங்களும், பொறுப்புக் கழகங்களும்.

தொழிற்சங்கங்களும், தொழில், தொழிலாளர் தகராறுகளும்.

சமூகப் பாதுகாப்பு, சமூகக் காப்புறுதி, வேலை வாய்ப்பு, வேலையின்மை.

பணி நிலைமைகள் உட்பட தொழிலாளர் நலன், வருங்கால வைப்பு நிதிகள், தொழிலதிபர்களின் பொறுப்பு, தொழிலாளர்களுக்கு இழப்பீடு, ஏலாமை ஓய்வூதியங்கள், முதியோர் உதவித் தொகைகள், பேறு காலப் பயன்கள்.

தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியும், தொழில் நுட்பப் பயிற்சியும் அளித்தல்.

சட்ட, மருத்துவ, ஏனைய தொழில்கள்.

அறம், அறநிலையங்கள், அறக்கட்டளைகள், சமயக் கட்டளைகள், சமய நிறுவனங்கள்.

பிறப்புகள், இறப்புகள் பதிவு உட்பட பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்கள்.

பெரிய துறைமுகங்கள் நீங்கலான துறைமுகங்கள்.

1974 ஏப்ரல் 23]

விசையால் இயக்கப்படும் கப்பல்களைப் பொறுத்த வரையில் உள்நாட்டு நீர் வழிகளில் கப்பல் போக்குவரத்து, அந்த நீர் வழிகளில் கப்பல்கள் செல்வதற்கான விதி முறைகள், மாநிலத்திற்குள் உள்நாட்டு நீர் வழிகளில் பயணிகளையும், சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல்.

கீழ்க்கண்ட பொருள்களில் வர்த்தகம் செய்தல் அல்லது வாணிகம் செய்தல், அவற்றை உற்பத்தி செய்தல், வழங்கல், பங்கீடு செய்தல் :—

(அ) ஒரு தொழிலில் உற்பத்தியாகும் பொருள்கள், இறக்குமதி செய்யப்பட்ட அதேவகைப் பொருள்கள் ;

(இ) சமையலுக்கான எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள் உட்பட உணவுப் பண்டங்கள்.

(உ) கால்நடைத் தீவனம்—பிண்ணாக்கு, ஏனைய செறிவுப் பொருள்கள்.

(எ) விதை நீக்கப்பட்ட அல்லது விதை நீக்கப்படாத கச்சாப் பருத்தியும், பருத்திக்கொட்டையும்.

(ஐ) கச்சாச் சணல்.

விலைக் கட்டுப்பாடு.

விசையினால் இயக்கப்படும் வண்டிகள்—அத்தகைய வண்டிகள்மீது வரிகள் எந்தக் கோட்பாடுகளையொட்டி விதிக்கப்பட வேண்டுமென்பது உட்பட.

தொழிற்சாலைகள்.

கொதிகலன்கள்.

மின்சாரம்.

செய்தித் தாள்கள், புத்தகங்கள், அச்சகங்கள்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சிதைவுகள்.

சொத்துக்களைக் கையகப்படுத்தலும், கேட்டுப் பெறுதலும்.

நில வரி நிலுவைகள், நில வரி நிலுவைகளைப் போல் வசூலிக்கத் தக்க தொகைகள் உட்பட ஒரு மாநிலத்தில் வரிகள், ஏனைய பொதுப் பாக்கிகள் தொடர்பாகச் செய்யப்படும் வசூல்கள்.

நீதித் துறை முத்திரைத் தாள்கள் வாயிலாக வசூலிக்கப்படும் தீர்வைகள், கட்டணங்கள், நீங்கலாக முத்திரைத் தாள் தீர்வைகள் ; ஆனால், முத்திரைத் தாள் தீர்வை வீதங்கள் இதில் அடங்கா.

மாநிலப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருள்களின் நோக்கங்களுக்காக விசாரணைகள், புள்ளி விவரங்கள்.

பொதுப் பட்டியல்.

(1) அப்படியே வைத்துக்கொள்ளப்படும் சட்டமியற்றும் அதிகாரங்கள்.

பொதுப் பட்டியலில் சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமான பின்வரும் பதிவுகள் அப்பட்டியலில் அப்படியே வைத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

சிறைக் கைதிகளையும், குற்றம் சாட்டப்பட்டவர்களையும், தடுப்புக் காவல் கைதிகளையும் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குக் கொண்டு செல்லுதல்.

மனிதர்கள், விலங்குகள் அல்லது பயிர்கள் தொடர்பான தொற்று நோய்கள் அல்லது எளிதில் பரவக்கூடிய நோய்கள் அல்லது பயிர் நோய்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பரவுவதைத் தடுத்தல்.

அகதிகள் சொத்து என்று சட்டப்படி அறிவிக்கப்பட்ட சொத்துக்களை பாதுகாப்பில் வைத்துக்கொள்ளுதல், நிர்வகித்தல், முடிவு செய்தல்.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் அமைக்கப்பட்டதன் காரணமாக தாம் வசிக்குமிடத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கி அவர்களுக்குப் புதுவாழ்வு அளித்தல்.

பொதுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் ஏதேனும் ஒன்றின் நோக்கத்திற்காக விசாரணைகள், புள்ளி விவரங்கள்.

பொதுப் பட்டியலில் கண்டுள்ள பொருள்களில் ஒன்றின் தொடர்பாக, உச்ச நீதிமன்றம் நீங்கலாக, எல்லா நீதிமன்றங்களின் அதிகார வரம்பும், அதிகாரங்களும்.

பொதுப் பட்டியலில் கண்டுள்ள பொருள்களில் ஒன்றின் தொடர்பாகக் கட்டணங்கள் ; ஆனால் ஒரு நீதிமன்றத்தில் வசூலிக்கப்படும் கட்டணங்கள் இதில் அடங்கா.

(2) தற்போதைய மைய அரசுப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்கள்.

மைய அரசுப் பட்டியலில் சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமான பின்வரும் பதிவுகள் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளன.

மாற்று உண்டியல்கள், காசோலைகள், கடனுறுதிச் சீட்டுகள் மற்றும் அது போன்ற ஏனைய உறுதிச் சீட்டுகள்.

1974 ஏப்ரல் 23]

பதிவுப் பொருள் தனியுரிமை (Patents), புதிய கண்டு பிடிப்புகள், வடிவமைப்புகள், பதிப்புரிமை, வணிகக் குறிகள், வணிகச் சரக்குக் குறிகள்.

தர எடைகள், அளவைகள்.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற அல்லது ஒரு மாநிலத் திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் போக்குவரத்து செய்யப்படுகிற சரக்குகளின் தர நிர்ணயம்.

மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளையும், ஆற்றுப் பள்ளத் தாக்குகளையும் முறைப்படுத்தலும், மேம்படுத்தலும்.

இந்திய சர்வே நிறுவனம், புவியியல், தாவரவியல், விலங்கியல், மனித இன ஆராய்ச்சி இயல், வானியல் நிறுவனங்கள்.

சட்டமியற்றும் அதிகாரங்கள் சம்பந்தமான பட்டியல்களில் செய்ய வேண்டிய மேற்சொன்ன மாறுதல்களையும் அதன் தொடர்பாகவும் விளைவாகவும் செய்யப்பட வேண்டிய திருத்தங்களையும் அரசியலமைப்புச் சட்டத்தில் செய்தல் வேண்டும்.

இணைப்பு XI

[119ஆம் பக்கத்தில் இனம் 3(2) க்கான அடிக் குறிப்பைக்காண்க]

The Hon. Dr. M. KARUNANIDHI.—Mr. Chairman, Sir, I move the following Resolution :—

" This House, taking into consideration " The Tamil Nadu Government Views on State Autonomy and the Rajamannar Committee Report " and the Report of the Rajamannar Committee ,

resolves that, in order to secure the integrity of India with people of different languages, civilisation and culture, to promote economic development and to enable the State Governments having close contact with the people to function without restraints, and

in order to establish a truly Federal set up with full State Autonomy, the Central Government do accept the views of the Tamil Nadu Government on State Autonomy and the recommendations of the Rajamannar Committee and proceed to effect immediate changes in the Constitution of India. "

[1974 ஏப்ரல் 23

Hon'ble Mr. Chairman,

I am indeed very happy to have the privilege of moving this epoch-making resolution which, I am confident, will form a landmark in the history of India. I beseech the honourable Members of this House, renowned as they are for their sagacity, to give their deep and deliberate consideration, keeping in view the laudable object of this resolution and to extend their support to it. We are all aware that the ruling party—Dravida Munnetra Kazhagam—has, on many an occasion, demonstrated its determination to play its full part to enhance India's might and strength and in safeguarding and securing that the integrity and unity of India are not affected in the slightest extent.

If proof were needed of the ardent patriotism of the Dravida Munnetra Kazhagam party, it is seen in the fact of how in 1962 the Party gave up its demand for secession, how it enthusiastically took part in the preparations for defence to repel the Chinese aggressors, how it contributed Rs. 6 crores to the National Defence Fund and thus was in the forefront of all the States. Indeed the Dravida Munnetra Kazhagam party had rendered heroic service for the defence of the country imbued by the spirit of being in the very battlefield of India's fight.

I am mentioning all these just to discourage consideration of this resolution on the basis of and with the point of view of unwarranted and unnecessary doubts.

In 1945, in its Election Manifesto, the All-India Congress Party had described the nature of the future Federal Constitution of India as below :—

"The Federation of India must be a willing Union of its various parts. In order to give the maximum of freedom to the constituent units there may be a minimum list of common and essential federal subjects which will apply to all units, and a further optional list of common subjects which may be accepted by such units as desired to do so."

Following this, in 1947, the resolution moved by Pandit Jawaharlal Nehru in the Constituent Assembly emphasized that except the powers assigned to the Union all the other powers shall vest with the autonomous States. The material part of the Resolution runs as follows :—

